Registered as a News paper in Ceylon

★ ★

FEB 1971 ... LIBRARY

விலை சதம் 20


# ஈழநாடு

வாரமலர்



"விதைத்தது எதுவோ
அது விளைவு ஆகிறது
வாழ்வில் நீ எதை விதைக்கிறாய்
என்பதில் எச்சரிக்கையாயிரு"

'தர்ம சக்கரம்'

மில்க் வைற் சோப் மேலுறைகளை அனுப்பி பரிசுகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற்
சோப் தொழிற்சாலை
த. பெ. இல. 77 - யாழ்ப்பாணம்


மலர் 12 | தை 20 | ஜுஹற் 5 | (2—2—71) | செவ்வாய்க்கிழமை | இதழ் 353

# கண்டி எம்.பி. ஸ்தானமிழந்தார்

## செலவு தொகை கட்டவும் நீதியரசர் உத்தரவு

### தேர்தல் ஆட்சேப வழக்கில் தீர்ப்பு

(நமது நிருபர்)

**திரு. ஈ. எல். சேனநாயகா தமது எம். பி. பதவியை இழந்தார்.**

கண்டித் தொகுதியிலிருந்து திரு. ஈ. எல். சேனநாயகா ஆட்சிமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டது செல்லுபடியாகாதென்று தேர்தல் ஆட்சேப மனுவை விசாரணைசெய்த தேர்தல் நீதியரசர் திரு. ஸி. ஏ. அலெஸ் இன்று தீர்ப்பளித்தார்.

சென்ற பொதுத் தேர்தலில் திரு ஈ எல் சேனநாயகா கண்டித் தொகுதியிலிருந்து ஆட்சிமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டது செல்லுபடியாகாதென்று தீர்ப்பளிக்குமாறு கோரி ஆட்சேப மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. தேர்தலில் முறைகேடாக அவர் நடந்துகொண்டார் என்று ஆட்சேபமனுவில் குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

தேர்தல் செல்லுபடியாகாதென்று தீர்ப்பளித்த நீதியரசர் செலவுதொகை கட்டுமாறும் உத்தரவிட்டார்.

திரு ஈ எல் சேனநாயகா முன்னை அரசாங்கத்தின் சுகாதார அமைச்சராகஇருந்தவர். அவர் கண்டி மேயராகவும் பதவி வகித்தவர்.

## இந்திரா போட்டி

புதுடில்லி, பெப். 1

உத்தரப்பிரதேச ராய்பரேலித் தொகுதியில்போட்டியிடுவதற்கான தமது அபேட்சா பத்திரங்களை பிரதமர் திருமதி இந்திரா காந்தி இன்று தாக்கல் செய்தார். லோகசபைத் தேர்தலுக்கு அபேட்சா பத்திரங்கள் தாக்கல் செய்யும் கடைசித் திகதி இம்மாதம் 8-ந் திகதியாகும்.

## உதவிமந்திரியிடம் பேட்டி

ஊர்காவற்றுறை, ஞாயிறு

புங்குடுதீவு - வல்லன்சண்முகநாதன் வித்தியாசாலைப் பெற்றோர், ஆசிரியர் சங்கக்குழு உதவிக் கல்விமந்திரி திரு. பி. வை. துடாவையைப் பேட்டிகண்டு பிரஸ்தாப பாடசாலையின் முக்கிய தேவைகளைக் கூறியுள்ளது.

## கேணிக்குள் கிடந்த மோதிரங்கள்

காங்கேசன்துறை, திங்.

கீரிமலைக் கேணிக்குள் மூன்று தங்கமோதிரங்களைக் கேணிப் பாதுகாப்பாளர் திரு. எம். சின்னத்துரைகண்டெடுத்து தெல்லிப்பழைக் கிராமசபைக் காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார்.

## வழக்கறிஞர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், செவ்

தமிழுக்கும் சிங்களத்துக்கும் சம உரிமைவேண்டுமெனக் கோரிக்கூட்டமொன்றை வழக்கறிஞர்கள் நடாத்தவிருக்கின்றனர்.

இக்கூட்டத்தை யாழ். நூலகத்தில் இம்மாதம் 6-ம்திகதி கூட்டுவதற்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது. தமிழ்மக்கள் பெரும்பான்மையாக வாழும்இடங்களில் தமிழிலும் சிங்களம் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழுமிடங்களில் சிங்களத்திலும், இரு பகுதிகளிலும் தேவையேற்படும் போது இருமொழிகளிலும் நீதிமன்ற விசாரணைகள் நடைபெறவேண்டுமெனபது குறித்தும் இக்கூட்டத்தில் ஆராயப்படவிருக்கிறது.

## நுண்கலை விசாரணைக் குழு வடக்கு விஜயம்

யாழ்ப்பாணம், செவ்.

நுண்கலை சம்பந்தமான விசாரணைகள் செய்வதற்கு யாழ்ப்பாணத்துக்கு நுண்கலை விசாரணைக்குழு விஜயஞ் செய்யவுள்ளது.

கலாநிதி சரத்சந்திரா தலைமையில் இயங்கும் இக்குழு கல்வியமைச்சினால் நியமிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் விசாரணைகள் யாழ். அரசாங்க செயலகத்தில் நடைபெறவுள்ளது.

(கு வி ம)

கடத்தப்பட்ட

## இந். விமான பிரயாணிகள் பஸ்ஸில் திரும்புகின்றனர்

புதுடில்லி, பெப் 1

பாகிஸ்தானுக்கு வழிமறித்துக் கடத்திச்செல்லப்பட்ட இந்திய 'ஏயர்லைன்ஸ்' விமானத்திலிருந்த பிரயாணிகள் யாவரும் இன்று லாகூரிலிருந்து பஸ்வண்டியில் இந்தியாவுக்குப் புறப்பட்டுவந்துகொண்டிருக்கின்றனர்.

விமானத்திலிருந்த 28 பேரும் சிப்பந்திகள் நால்வரும் இந்தியா திரும்பிக்கொண்டிருக்கின்றனர்.

## கடத்திய இருவருக்கும் பாகிஸ்தான் தஞ்சம்

இந்திய விமானத்தைக் கடத்திய இருவருக்கும் அரசியல் தஞ்சமளிப்பதற்கு பாகிஸ்தான் அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

உள்நாட்டுச் சேவையில் ஈடுபட்டிருந்த இந்திய விமானச்சேவை விமானமொன்றை வழிமறித்துத் திசை திருப்பிய இவர்கள் விமானத்தில் இருந்து இறங்குவதற்கு இரு நிபந்தனைகள் விதித்துள்ளனர். கஷ்மீர் விடுதலை முன்னணியின் அங்கத்தவர்கள் என்று கருதப்படும் இவர்கள் [illegible] அரசியல் தஞ்சமளிக்கவேண்டுமெனவும், காஷ்மீர் பிரச்னை சம்பந்தமாகக் கைது செய்யப்பட்ட அனைவரையும் இந்திய அரசாங்கம் விடுதலை செய்யவேண்டுமெனவும் கோரியுள்ளதாக பாகிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவ்விருவருக்கும் பாகிஸ்தானில் அரசியல் தஞ்சமளிப்பதென பாகிஸ்தான் அரசாங்கம் முடிவுசெய்துள்ளதாக அவ்வதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

சந்திரனில்

# அப்பல்லோ 14 வீரர்கள் இறங்குவதில் சிக்கல்?

கேப்கென்னடி, பெப். 1

அப்பலோ-14 விண்வெளிக்கலம் சந்திரத்தரையில் சில சமயம் இறங்காமலும்போகலாம் என்று தரைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் நேற்று அச்சம் தெரிவித்தனர்.

தாய்க்கப்பலையும் சேய்க்கப்பலையும் முதலாவது கட்டத்தில் இணைப்பதில் ஏற்பட்ட கஷ்டங்கள் அடுத்த கட்டங்களிலும் ஏற்பட்டுவிட்டால் விண்வெளிக்கலம் சந்திரனில் இறங்கமுடியாது என்று அவர்கள் கூறினர்.

சந்திரனில் கலம் இறங்குவதுபற்றி இரு தினங்களின் பின்னரே தீர்மானிக்கமுடியும் என்றும் இறங்காதபட்சத்தில் அப்பல்லோ-14 சந்திரனை அண்மித்து படங்களெடுத்துக்கொண்டு பத்திரமாக வீரர்களுடன் பூமிக்குத் திரும்புமென்றும் கென்னடி முனையிலிருந்து அறிவிக்கப்பட்டது

பூமியிலிருந்து 25,000 மைல்களுக்கப்பால் கலம் சென்றுகொண்டிருந்த போது ஏற்பட்ட சிக்கல்களுக்குரிய காரணம் எதையும் நிலக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் இதுவரை கண்டுகொள்ளமுடியவில்லை. சிக்கல்கள் ஏற்பட்டபொழுதிலும் வீரர்களுக்கு ஆபத்து எதுவும் இல்லையென்று அதிகாரிகள் கூறினர்.

திங்கட்கிழமை அதிகாலை இலங்கை நேரப்படி 2-33க்கு கென்னடி முனையிலிருந்து புறப்பட்ட அப்பல்லோ-14, 12 நிமிடத்தில் பூமியை வலம்வரத் தொடங்கியது இரண்டரை மணி நேரம் பூவலம் வந்தபின் பூமிதன் ஈர்ப்புச்சக்தியிலிருந்து விடுபட 3-ம்கட்ட ராக்கெட்டைச்சுட்டு மேலே சென்றார்கள் கட்டளைக் கலத்துடன் நிலாக் கலத்தைச் சேர்ப்பதற்கு இரண்டுதடவை முயற்சி செய்து தோல்விகண்டதும் அப்பல்லோ 14ன் பிரயாணம் சிக்கலானது சிறிது

6 வது தடவை எடுத்துக்கொண்ட முயற்சியின் பயனாக நிலாக்கலம் கட்டளைக்கலத்துடன் இணைந்தபோது நிலக்கட்டுப்பாட்டுஅதிகாரிகள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர் திட்டமிட்டபடி எல்லாம் சரியாக இருந்தால் வெள்ளிக்கிழமை அப்பல்லோ வீரர்கள் சந்திரனில் இறங்குவர்

## மிதிபலகைபிரயாணிகள் மீது நடவடிக்கை ஒத்திவைப்பு

கொழும்பு, செவ்வாய்

மிதிபலகைப் பிரயாணிகள் மீது பொலிசாரின் நடவடிக்கை இ. போ. ச. மேலிடத்தின் வேண்டுகோளுக்கிணங்க தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக பதில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலும் வெளிவிவகார அமைச்சின் மேலதிக நிரந்தரக்காரியதரிசியுமான லீல் குணசேகரா நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார் அம்மகாநாட்டிற்கு உதவி இன்ஸ்பெக்டர் ஜெனரல் ரி பி. வீரபிட்டியாவும் சமுகம்கொடுத்திருந்தார். இம்மகாநாடு பெருமளவு சிங்களத்திலேயேநடைபெற்றது.

எதிர்வரும் 4-ந் திகதி நடைபெறவிருக்கும் இலங்கையின் சுதந்திரதினவிழாவைப்பற்றிக் குறிப்பிடுகையில் விசேட ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது எனத்தெரிவித்தார். சமீபத்தில் கைதுசெய்யப்பட்ட சேகுவேரா இயக்கத்தினர் பற்றி விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் தெரிவித்தார். (சி. பி. ஏ.)

## அரசியல் அரங்கு

# கனடாவின் அனுபவம் நமது நாட்டில் பயன்பட வேண்டும்

**பராசரன்**

கனடாவிலே சமஷ்டி ஆட்சிமுறை திருப்தியாக நடக்கிறதா? என்று கொழும்பிலே நடைபெற்ற பத்திரிகைக்காரர்கள் மகாநாட்டில் கனடிய பிரதமர் ட்ரூடோவைக் கேட்டேன். அப்படி நடப்பதாகவே தாம் கருதுவதாகவும் பலஇன, பலமத மக்கள் வாழ்கின்ற கனடாவைப்போன்ற ஒருநாட்டில் உள்நாட்டு நெருக்கடிகள் இருக்கத்தான் செய்யுமென்றும் அவற்றைத் தீர்ப்பதற்குச் சமஷ்டி ஆட்சிமுறை ஒன்றுதான் கனடாவுக்கு உள்ளவழியென்றும்திட்டவட்டமாகப் பதிலளித்தார் அவர். ஒற்றை ஆட்சிமுறையை ஏற்படுத்தினால் நாடு பல கூறுகளாகித் தன்னைத்தானே அழித்துக் கொள்ளும் என்றும் கூறினார். தமது நாட்டு விஷயமாக மட்டுமே இதைச் சொல்லுவதாக அவர் பாதுகாப்பாகச் சொன்னார்.

இலங்கையிலே சமஷ்டிக் கோரிக்கை அவருக்குத் தெரியும்போலும். உள்நாட்டு அரசியலில் தலையிடாதிருக்கவே அவர் இப்படி ஜாக்கிரதையாகக் கூறியிருக்கவேண்டும். என்றாலும், இங்கு அரசியல் அமைப்புப் புதிதாகத் தயாரிக்கப்படும் இச் சமயத்தில், கனடா பிரதமரின் இந்தக் கருத்து பொறுப்பான இவ்வேலையில் ஈடுபட்டுள்ளவர்களின் கவனத்தை ஈர்த்து அவர்களைச் சிந்திக்கத் தூண்டுவதாகும். கனடாவில் ஆங்கிலம் பேசும் மக்களும் பிரெஞ்சு மொழி பேசும் மக்களும் இருக்கின்றனர். ஆங்கிலம் பேசுவோர் பெரும்பான்மையாகவும் பிரெஞ்சுமொழி பேசுவோர் சிறுபான்மையினமாகவும் உள்ளனர். இலங்கையிலே சிங்களம் பேசுவோர் அதிகமாகவும் தமிழ் பேசுபவர் குறைவாகவும் இருத்தல் போல. பலவருடகாலமாகக்கனடாவிலே சமஷ்டி ஆட்சிமுறை இருந்து வருகிறது. இரு மொழிகளுக்கும் சம அந்தஸ்து உண்டு. பிரெஞ்சு பேசும் கியூபெக் பகுதியிலே ஒரு பிரெஞ்சு தந்தைக்கும் ஆங்கில அன்னைக்கும் பிறந்தவர் பிரதமர் ட்ரூடோ அவர்கள் கனடாவில் இவ்வித கலப்புமணம் அதிகம் கிடையாதாம். இரு இனக் கலப்புமுள்ள பிரெஞ்சு பேசும் ஒருவர், கனடாவின் பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். சமஷ்டி ஆட்சிமுறையிருந்தும், பிரெஞ்சு பேசும் ஒருவரே பிரதமராக இருப்பினும் கியூபெக்கில் பிரிவினை கிளர்ச்சிகள் பலமாகவுள்ளன. இக் கிளர்ச்சிக்காரர்கள், ஓர் அமைச்சரைத் தூக்கிச் சென்று கொலை செய்தும் விட்டனர். இது பற்றிப் பெருங்கவலை கொண்ட பிரதமர் ட்ரூடோ, கனடாவில் சமஷ்டிமுறை வெற்றியாக நடப்பதாகவும் ஒற்றை ஆட்சி இருப்பின் நாடே பிளவுபட்டு நாசமாகி விடுமென்கிறார். பிரிவினை கோரிக்கைகள் பிரிட்டனிலும்கூட இருப்பதாகவும், பிரிட்டனிலே வேல்ஷ் மக்களும் ஸ்கொட்லந்து மக்களும் விடுதலைகோரிக் கிளர்ச்சி செய்வதாகவும் ஆகவே கனடாவில் இவ்வித கிளர்ச்சி இருப்பதில் வியப்பில்லையென்றும் நாடு எக்காரணம் பற்றியும் பிரியுமாயின் வர்த்தகம் முதலியன பாதிக்கப்படும் என்றும் சொல்லி தமது நாட்டுக்கு சமஷ்டியே சிறந்ததென்றார்.

கனடாவுடன் ஒப்பிடுகையில் இலங்கை மிகவும் சிறிதுதான். என்றாலும் உள்நாட்டு அரசியல் பிரச்னைகளின் அடிப்படை அனேகமாக ஒன்றுபோலுள்ளது. கனடாவைப்போல் இலங்கையிலும் தனிநாடு கிளர்ச்சி ஆரம்பித்துள்ளது. நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா யாழ்ப்பாணம் சென்றிருக்கையில் இதைச் சொன்னார். சமஷ்டி என்றால் பிரிவினையல்ல என்பது தெரிந்திருந்தும் சமஷ்டி அழிந்துவிட்டால் அது பிரிவினைக் கிளர்ச்சியில்தான் முடியுமென்றும் ஐயமுற்று இங்கு பல கட்சி அரசியல் தலைவர்களும் இதை எதிர்க்கிறார்கள் போலும். ஆனால் புதிய அரசியல் அமைப்பு நகல் தீர்மானங்கள் இந்நாட்டிலுள்ள தமிழ்பேசும் மக்களை இரண்டாம்பட்ச பிரஜைகளாகச் செய்கிறதென்று பொறுப்பு வாய்ந்த தமிழ்ப் பிரமுகர் ஒருவர் கருத்துத் தெரிவித்து மற்ற மக்களைப்போல் இந்நாட்டில் தமிழ்பேசும் மக்களும் சரிசமமாக மானத்துடன் வாழமுடியும்படியாக புதிய அரசியல் அமைப்பு இருக்கவேண்டுமென்றார். அவர் சமஷ்டிவாதியல்ல. நீவெங்கும் இரு சமூகத்தவரும் சரிசமமாக வாழக்கூடிய முறையில் புதிய அரசியல் அமைப்பு இருக்கவேண்டுமென்பதே அவர்கருத்து.

நாடு சுதந்திரமடைவதற்கு முன்னும் பின்னும் சுமார் 10 வருடகாலத்துக்கு தமிழும் சிங்களமும் சட்டபூர்மாக தேசிய மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டு செயலளவிலும் இருந்து வந்தன. நாடெங்கும் இரு மொழிகளும் சம அந்தஸ்துடன் இருந்தன. அந்த ஏற்பாட்டை மாற்றக்கூடாதென்றும் தனிச் சிங்களச் சட்டம் நாட்டின் ஒற்றுமையையும் சமூக நல்லுறவையும் கெடுக்குமென்றும் டாக்டர் என். எம். பெரேராவுள்ளிட்டு இடதுசாரித் தலைவர்கள் எல்லாரும் எச்சரித்தனர், தனிச் சிங்களச் சட்டத்துக்கு மாறாக அவர்கள் வாக்களித்தனர். ஆனால் இப்போது நிலைமையில்பெரு மாறுதல் ஏற்பட்டு விட்டதால், தாங்களும் மொழிக் கொள்கைபற்றி மனம்மாறி விட்டதாகவும் டாக்டர் என். எம். அவர்கள், தமது கட்சி மகாநாட்டின்போது தெரிவித்தார்.

சமஷ்டிவிஷயமாக தமிழ்த் தலைவர்களிடையே கருத்து வேற்றுமை இருப்பினும், தமிழும்சிங்களமும் நாடெங்கும் முன்பிருந்ததுபோல் அரசாங்க மொழிகளாக இருக்கவேண்டுமென்பதில் அவர்களிடையே ஏகோபித்த கருத்து நிலவுகின்றது வடக்கேயுள்ள தமிழராயினும்சரி, தெற்கேயுள்ள சிங்களவராயினுஞ்சரி அவர்களைச் சமமாக மதித்தே அரசியல் நிர்ணயசபை, புதிய அரசியல் சாசனத்தை ஆக்குகின்றதென்றும் இருஇனத்தவருக்கும் சமசந்தர்ப்பமளிப்பது சோஷலிசம் என்றும் நிதி அமைச்சர் வடபகுதியில் ஒருகூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார். ஆனால் அதன்படி காரியம் நடப்பதாயின் தமிழரின் தாய்மொழிக்கு இரண்டாவது இடம் அளிப்பது எப்படிச் சரியாகும்? தங்கள் தாய்மொழிக்கு முன்னிருந்த இடம் கிடைக்கவேண்டுமென்றும், தங்கள் சமூகத்தின் மானம் அதில்தான் தங்கியிருக்கிறதென்றும் சோஷலிசம் எனும் பெயரில் வகுப்புவாதம் மறைமுகமாகத் தலைதூக்குவதை அனுமதித்தால், நாட்டில் சமூக ஒற்றுமையும் முன்னேற்றமும் ஏற்பட முடியாதென்றும் வாதிக்கப்படுகின்றது.

நமக்கு ஜனநாயகம்புதிது. பல தவறுகள் செய்யப்படுவது இயற்கை. ஆனால் கனடாபோன்ற ஜனநாயக நாடுகளின் மேலான அனுபவங்கள் நமக்கும் வழிகாட்டி உதவவேண்டும். அப்படி உதவுவதாயின், வகுப்புவாதங்கள் தலைதூக்காமலும், அரசியல் தவறுகள் ஏற்படாமலும் தடுத்துக்கொள்ளமுடியும். கனடா பிரதமர் இங்கு செய்த விஜயமும், தமதுநாட்டின் அனுபவம்பற்றிக் கூறியுள்ளதும், இலங்கைக்கும் உதவியாகவும், அரசியல் தவறுகளைச் செய்யாமல், ஜனநாயகத்தைவெற்றிகரமாக நடத்திச்செல்லவும் நமக்குப் பயன்படவேண்டும், இங்கு புதிய அரசியலை நிர்ணயிக்கும் இம்முக்கிய காலத்தில், கனடிய பிரதமர் ட்ரூடோ விஜயம் செய்தது பலவிதங்களிலும் நமக்கும் பயன்படுவதாகும்.

0 0 0

சென்ற வாரம் இதே பத்தியில் தனிச் சிங்களச் சட்டம், அரசியல் சட்டத்தின் 29-வது பிரிவுக்கு முரணானதென்றும், அப்போதே நீதிமன்றத்தில் இதைப்பற்றி தமிழ்த் தலைவர்கள் வழக்காடி இருக்கவேண்டுமென்றும் எழுதியிருந்தேனல்லவா? அச்சமயம் திரு. வீரசிங்கம் அவர்கள் இந்தியா சென்று சட்ட நிபுணர்களை விசாரித்ததாகவும், சட்டம் தமிழருக்குச் சாதகமாக இருப்பதாகவும் அங்கு தெரிவித்தார்களாம். என்றாலும் நீதிமன்றத்துக்குச் செல்லாமல், நேரடி நடவடிக்கைகளில் தமிழரசுக் கட்சி ஈடுபட்டது. அரசாங்க ஊழியர் கோடீஸ்வரனுக்கு தனிச் சிங்களச் சட்டப்படி சம்பள உயர்வு நிறுத்தப்படவே, அவர் பிரிவிகவுன்ஸில்வரை சென்று வழக்காடினார் மாவட்ட நீதிமன்றத்தின் நீதவான் திரு. கிரெட்ஸர், தனிச்சிங்களச் சட்டம் 29-வது விதிக்கு மாறானதென்றும், மனுதாரருக்குச் சம்பள உயர்வை நிறுத்தக் கூடாதென்றும் தீர்ப்பளித்தார். இதை ஆட்சேபித்து அரசாங்கம் சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்ததில், கீழ்க்கோர்ட் தீர்ப்பு தள்ளப்பட்டுவிட்டது. ஓர் அரசாங்க ஊழியருக்கு அரசாங்கத்தின்மீது இவ்வித வழக்குத் தொடர உரிமை இல்லையென்றும் தீர்ப்பளித்தனர் இதை ஆட்சேபித்து திரு. கோடீஸ்வரன், பிரிவி கவுன்ஸிலுக்கு அப்பீல் செய்தார் அரசாங்கஊழியருக்கு இவ்விஷயமாக வழக்காட உரிமையுண்டென்றும், ஆனால் தனிச் சிங்களச் சட்டம், அரசியல் சாசனத்தின் 29-வது விதிக்கு முரண்பட்டதா என்பதும், மனுதாரின் சம்பள உயர்வு கோரிக்கைபற்றிய மனுவும் இலங்கையிலுள்ள சுப்ரீம் கோர்ட்டாராலேயே முடிவு செய்ய வேண்டுமென்றும் தீர்ப்பளித்தனர். (29-வது விதிக்கு தனிச் சிங்களச் சட்டம் முரண்பட்டதென்று தீர்ப்பளித்ததாக சென்ற வாரம் இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தது சரியல்ல) மேற்குறித்த தீர்ப்பின்படி, திரு. கோடீஸ்வரனின் மனு இலங்கை சுப்ரீம் கோர்ட்டில் வருகிற மார்ச் மாதம் 19-ம் திகதி ஐந்து நீதி அரசர்கள் முன் விசாரணைக்கு வருகின்றது. அந்த மனு விசாரணை மிக முக்கியமானது. சிறப்பாக தமிழர்கள் மிக ஆவலுடனும், கவலையுடனும் சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பை எதிர்பார்ப்பார்கள். த்தீர்ப்புபற்றியும் பிரிவிகவுன்ஸிலுக்கு ஆடு சாரினரும் அப்பீல் செய்யலாம் அதற்குள் இலங்கை குடியரசாகி விடுமாயின், அந்த அப்பீல் உரிமையும் அத்துடன் நீங்கிவிடலாம். புதிய அரசியல் அமைப்பிலே மொழிப் பிரச்னையையும் பற்றி புனராலோசனை செய்து. திருப்திகரமான திருத்தங்களைச் செய்வதாயின், எல்லாம் சுமுகமாக முடியலாம். இதற்கான அரசியல் ஞானமும், தாராள மனப்பான்மையும் அரசியல் நிர்ணய சபைக்கு இருக்குமா?


## திருமண அழைப்பு

திருவருள் முன்னிற்க, நிகழும் தை மாதம் 23-ந் திகதி (5-2-71) வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கும் 7 மணிக்கும் இடையில் வரும் சுப முகூர்த்தத்தில்

எனது மகன்
நகுலேஸ்வரன்
(இலங்கைச் சர்வகலா சாலை பேராதனை)

மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் திரு. க. முத்துவேற்பிள்ளை தம்பதிகளின் ஏகபுத்திரி
மாலதி
(இலங்கைச் சர்வகலா சாலை பேராதனை)

அன்னாரின் திருமண வைபவம் மணமகளில்லத்தில் (''சசிமங்கலம்'' சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய்) நடைபெறும். உறவினர்களும் நண்பர்களும் இவ் அழைப்பை ஏற்று அவ் வைபவத்திற் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றேன்.

''வளர்மதி''
சுந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
21-1-71

இங்ஙனம்
அன்புள்ள
திருமதி. நா. சிவபாதம்.
2746



## நிர்வாக உதவியாளர் தேவை

வட இலங்கை வர்த்தகர் கைத்தொழிலாளர் சங்கப்
(North Ceylon Chamber of Commerce & Industries)

காரியக் குழுவின் மேற்பார்வையின் கீழ் தன்னந்தனியராக எங்கள் சங்கத்தின் கடிதப்போக்குவரத்து, தட்டெழுத்து, வாசிகசாலைப் பரிபாலனம், கூட்ட ஒழுங்குகள் முதலிய சகலநிர்வாக, கந்தோர் வேலைகளையும் செய்யக் கூடிய ஒரு முற்போக்கான, உற்சாகமுள்ள, சேவை மனப்பான்மையுள்ள படித்த அனுபவஸ்தர் உடனே தேவை. ஆங்கிலம், தமிழ் அறிவு அவசியம். சிங்களமும் தெரிந்தால் விசேடம். வட மாகாணத்தின் வர்த்தக, கைத்தொழில், பொருளாதார விருத்தியில் மோகமுடைய இளைப்பாறிய அரசாங்க அல்லது தனித்துறை நிர்வாக அதிகாரி விரும்பப்படுவர். வசிக்க இடவசதியும் மாதம் ரூ. 150/- சன்மானமும் கொடுக்கப்படும். சகல தகவல்களுடன் உடனே விண்ணப்பிக்கவும்,

காரியதரிசி,
வ. இ. வ. கை. சங்கம்,
484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

# ரஷ்ய மொழியில் காட்டும் அக்கறை தமிழ் மீது உதாசீனம் ஏன்?

**ரஷ்ய மொழியை இலங்கையில் போதிக்க அரசாங்கம் முடிவு செய்திருக்கிறதல்லவா. இதனைச் சுட்டிக்காட்டி, சிங்களப் பாடசாலைகளில் தமிழ் மொழியையும், தமிழ்ப் பாடசாலைகளில் சிங்கள மொழியையும் போதிப்பதற்கு நடவடிக்கை எடுப்பது வரவேற்கத்தக்கதொரு விஷயமாக இருக்குமென்று அபிப்பிராயப்படுகிறார், தமிழில் நல்ல தேர்ச்சிபெற்றவரான ஓய்வுபெற்ற சிங்கள ஆசிரியர் திரு. டி. டி. நாணயக்கார, தனது யோசனையை அவர் இங்கு தமிழில் எழுதியிருக்கிறார்.**

இலங்கையர்களுக்கு ரஷ்யமொழி பயில்வதற்கு, பிரபல கல்லூரிகளிலொன்றான நாலந்தா வித்தியாலயத்தில் 'ஒருவலபத்து' அவர்களினால் ஒரு வகுப்புக் குதூகலமாக ஆரம்பிக்கப்பட்டிருக்கிறதுஎன்ற செய்தியை அறிந்து மகிழ்ச்சிடைந்தேன். இலங்கையில் ஆங்கிலபாடசாலைகள் இருந்த காலத்தில் கிரீக், லத்தீன் போன்ற சிறந்த பாஷைகளும் மிக உற்சாகத்துடன் கற்பித்த காலமும் முன்னர் இருந்தது. மேலும் சமஸ்கிருதம், பாளி போன்ற கிழைத்தேச பாஷைகளையும் விரும்பியவர்கள் படிப்பதற்கு வசதிகள் ஏற்பட்டிருந்தன. அரசாங்க உதவி கிடைக்கும்போது இப்படிப்பட்ட பாஷைகளைக் இலகுவாகவும் உற்சாகத்துடனும் கற்பிக்கலாம். பல நூற்றாண்டுகளுக்கு முன் ஆறு பாஷை வல்லுனர்கள் இருந்தநாடு நம்நாடு. இலங்கையிலுள்ள பிரஜைகள் பிரான்சு, ருஷ்ய, இந்தி போன்ற பிறமொழிகளைப் படித்து முன்னேறுவதைக் காண்பதில் நாம்மிக ஆசைப்படுகிறோம். ஆனால் இங்கே பெரியோர்கள் தம் கவனத்துக்கு எடுத்துக்கொள்ள வேண்டிய முக்கியமான ஒரு விஷயம் இருக்கிறது. பொருமையாலோ குழப்பம் உண்டாக்குவதற்காகவோ நான் இதைக் கூறவில்லை. பல வருடகாலமாக என் உள்ளத்தில் இருந்தவற்றைப் பொதுமக்களுடைய அவதானத்துக்குக் கொண்டுவருவதற்கு இதுவே நல்லசந்தர்ப்பம் எனக் கருதுகிறேன்.

பருத்தித்துறையிலிருந்து தெற்கே தேவேந்திரமுனை வரையும் கொழும்பிலிருந்து கிழக்கே மட்டக்களப்புவரையும் உள்ள இலங்கையிற் பிரபல்யமாக உபயோகப்படுகிற இரண்டு பாஷைகள் இத்தீவில் இருக்கின்றன. சிங்களம் தமிழ் என்ற அவ்விருபாஷைகளை இத்தீவில் எங்கும்பேசலாம். துரதிஷ்டவசமாகவடக்கே வாழும்தமிழர்களில் பெருந்தொகையினர்களுக்குச் சிங்களம் தெரியாது. அதுபோலவே தெற்கே இருக்கிற பெரும்பாலான சிங்களவர்களுக்குத் தமிழ்தெரியாது. இரு இனமும் சேர்ந்து வாழ்கிற சில பிரதேசங்களிலுள்ளசிலருக்கு மாத்திரமே இவ்விரு மொழிகளையும் பேசக்கூடிய ஆற்றல் உண்டு அதுவும் பேசுவது மாத்திரமே. புத்தகங்களை வாசித்து இலக்கியங்களை இரசிக்கவோ அன்றி ஓரளவுக்கு எழுதும் ஆற்றலோ இல்லை. பெருந்தொகையான தமிழர் சிங்களமும், சிங்களவர் தமிழும் அறிந்தால் முக்கிய இருசாதிகளான தமிழருக்கும் சிங்களவருக்குமிடையே நட்பு வளரும்— ஒற்றுமை விருத்தியடையுமென்பது யாவரும் ஒத்துக்கொள்ளக்கூடிய விஷயமாகும். பொறுப்புள்ள அமைச்சர்களும் நாட்டின் சுபிட்சம் விரும்பிய பிரபுக்களும் இதை உணர்ந்து பல மேடைகளிலிருந்து இவ்விஷயத்தைப்பற்றிக் கூறி வருகிறார்கள். ஆனால் இதுவரை உத்தியோக பூர்வமாகச் சிங்களப் பாடசாலைகளில் தமிழும் தமிழ்ப்பாடசாலைகளில் சிங்களமும் படிப்பிப்பதற்கான எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. ருஷ்யமொழிபடிப்பிக்க ஏற்பாடுகள் செய்வதை அறிந்து அதனைக் கொண்டாடுகிற நாம் இலங்கையிலுள்ள பிரபல இரு பாஷைகளான தமிழும் சிங்களமும் எல்லாப் பாடசாலைகளிலும் துணைப்பாஷைகளாகக் கற்பிப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுக்கும்படி அரசாங்கத்தை வற்புறுத்தாமல் இருக்கிறோம்.

அப்படிப்பட்ட திட்டத்தை அமுல் செய்தால் இப்பொழுதுஇதனைக்கொண்டாடுகிறவர்கள் அப்பொழுது என்ன செய்வார்கள் என்பதை நினைக்கும்போது



— டி. டி. நாணயக்கார —

சிரிப்புத்தான் வரும். ஆரம்பத்தில் ஒவ்வொரு தமிழ்ப் பாடசாலைக்குத் தகுதியுள்ள சிங்கள ஆசிரியரையும் சிங்களப் பாடசாலைக்குத் தமிழ் ஆசிரியரையும் நியமித்தால் போதும். மேலும் படிப்படியாக வேண்டிய இடங்களுக்குத் தேவையான ஆசிரியர்களையும் உதவி நன்கொடையையும் வழங்கலாம். சோஷலிச முன்னேற்றத்தைவிரும்பும் நாம், பலவருடங்களுக்குமுன் செய்திருக்கவேண்டிய இந்த விஷயத்தை இப்பொழுதுகூடச் செய்ய விரும்பாவிடில் இத்தீவில் நாம்எல்லோரும் எதிர்பார்க்கிற ஒருமைப்பாட்டை எப்படி அடைய முடியும்.

விவாதத்துக்குக் காரணமாக இருக்கிற இவ்விஷயத்தைப்பற்றி ஏதோ கூறுவதில் என்மேல் வருகிற வெறுப்பு எனக்கு நன்கு தெரியும். ஆனால் உள்ளத்தில் பதிந்திருக்கிற எண்ணத்தை அப்படியே சொல்வதிற் பிழை என்ன? சிங்கள நூல் இயற்றிய தமிழர்களைப்பற்றியும் தமிழிற் மாண்டித்தியம் பெற்ற சிங்களவர்களைப்பற்றியும் எமது சரித்திர நூல்களில் இருப்பது சரித்திர உண்மை. அக்காலங்களில் இருசாதியார்களும் ஒரே குடும்பம்போல வாழ்ந்தார்கள் என்பதும் அப்புத்தகங்கள்மூலமாக அறிய முடிகிறது.

1815-ம் ஆண்டில் ஆங்கிலேயர்களுடன் அமுல் செய்யப்பட்ட ஒப்பந்தத்தில் 4 சிங்கள அதிகாரிகள் மட்டுமே கையொப்பமிட்டனர். ஏனைய சிங்கள அதிகாரிகள் தமதுகையொப்பத்தைத் தமிழில் எழுதினார்கள். அவ்வளவு தூரத்துக்கு அக்காலத்தில் நற்சினேகிதம் உள்ள சாதியினராகிய சிங்களவரும் தமிழரும் வாழ்ந்திருக்கிறார்கள்.

சிங்களவர்களுக்கு ருஷ்ய பாஷை கற்பிப்பதில் இவ்வளவு அக்கறை காட்டும் அரசாங்கம்இந்நாட்டில் முக்கிய பிரச்னைகளில் ஒன்றானதமிழ் படிப்பிப்பதிற்காட்டும் உதாசீனம் தேசிய ஒருமைப்பாட்டை விரும்பியவர்களுக்கு மனவேதனையை அளிக்கும். ஆகக்குறைந்தது ஒரு சிங்களப் பாடசாலைக்காவது முன்மாதிரியாகத் தமிழைப் படிப்பிக்க ஆரம்பித்துஅதன் பலாபலனை அரசாங்கம் கவனிக்காமலிருப்பது வருந்தத்தக்கது. எரிந்துகொண்டிருக்கும் பாஷைப் பிரச்னை

(14-ம் பக்கம் பார்க்க)

# அண்ணா பிறந்தார், வாழ்ந்தார் - சாகவில்லை!

- கங்கா புத்திரன் -



பிறக்கின்றார்கள் பலபேர்கள் பிறந்து ஒருநாள் இந்த மண்ணைவிட்டு இறக்கின்றார்கள். இது சர்வ உலகிலும் காணுகின்ற சகச நிகழ்ச்சியாகும்.

"முடிசார்ந்த மன்னரும் மற்றுமுன்னோரும் முடிவிலொரு பிடிசாம்பராவர்" என்பது வேதாந்தியின் வாக்கு.

மனிதன் பிறந்து இறப்பதற்கு உட்பட்டகாலத்தில் வாழுகின்ற வாழ்க்கை உலகத்துப் பயனுடையதாகுமானால் அந்த மனிதன் இறப்பினால் இல்லாதவனாவதில்லை.

இந்த உண்மையை சரித்திர ஏடுகளில் சாகாவரம் பெற்று வாழ்கின்ற புருடர்கள் நிலைநிறுத்தியுள்ளார்கள்.

ஒற்றை விரலைக்காட்டிக் கொண்டு தமிழர்களாகிய நாம் தனித்தன்மை யுடன் வாழவேண்டும்" என்றுசிலையுருவில் நிலைபெற்றுள்ள 'அண்ணா'வென்று தமிழ் மக்களால்அன்புருக அழைக்கப்பட்டு வந்த சி. என். அண்ணாதுரையின் சிலை அவர் இறக்கவில்லையென்பதையல்லவா நமக்கு உணர்த்துகின்றது.

## பிற்பட்ட தமிழர்க்குரிய வாழ்க்கை

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த தமிழன் தன்பெருமைகளையெல்லாம் போலி மோகத்தினால் மறந்து வாழ்ந்த காலம் ஒன்று இருந்தது.

எங்கும் சுதந்திரம் என்பதேபேச்சு, எல்லோர்க்கும் சமம் என்பதுறுதியாச்சு என்று தேசிய விடுதலைப் பரணி பாடிய பாரதியின் உணர்ச்சியில் உந்தப்பட்டு ஆயிரம் ஆயிரம் பேர்கள் நாட்டின் இலட்சிய ஆகுதியில் தம்மைப்பலியிட்டனர். தம்மைபலியிடத் தோன்றிய வாலிபருள் தனியிடத்தைப் பெற்றவர் அண்ணா. இவர் புகழ்பெற்ற காஞ்சியில்பிறந்தார்

## சமுதாயம் ஒருசக்தி

சக்தியிலே ஈக்களும்கொசுக்களும் நிலையூன்றி வாழ்கின்றன. அந்த ஈக்களையும் கொசுக்களையும் ஒருவன் கையாற்கலைத்துக் கொண்டிருந்தாலும் ஆனால் கொசுக்களும் ஈக்களும் அங்கே இருந்துகொண்டேயிருந்தன

"வெறுமனே கையாற் கலைத்துக் கொண்டிருப்பதால் உன் கைதான் வலிக்கும் அந்தச்சக்தியை அகற்றிவிட்டால் அப்புறம் கொசுக்களுக்கும் ஈக்களுக்கும் அங்கு வேலை இருக்காது"

என்று ஓர் அறிவாளி அந்த மடையனைப்பார்த்துக்கூறியதுடன் கொசுக்கலைத்தவனையும் அப்புறப்படுத்திவிட்டார்

இந்தக்கதைக்கு ஓர் உதாரணமாகச் சமூகம் சகதியிலே புரண்டுகொண்டிருந்தபோது மூடக்கொள்கைகளும் குருட்டு நம்பிக்கைகளுமான ஈக்களும் கொசுக்களும் முட்டையிட்டுப்பல்கிப்பெருகின. சமுதாயம் நோயாளியாகிவிட்டது.

இந்நிலையில் சமூகத்தின் சகதியை அகற்றும் தொண்டர்களின் முன்னால் வந்த பெருமை உடையவர் அறிஞர் சி.என். அண்ணாதுரை.

## அண்ணாயார்?

அண்ணாதுரை ஒரு சமுதாயத்தலைவன் ஓர் சிறந்த இலட்சியவாதி, கற்றோரும் மற்றோரும் போற்றிய சிந்தனையாளன், நாவன்மை மிக்க பேச்சாளன் சிறந்த நாடக ஆசிரியன் ஒரு இனத்தின் அரசியல் தலைவன் என்ற பல உருவில் தமிழ் நாட்டில் விளங்கினார்.

ஒருசமயம் ஒருவர் வயது கூடியவர்களும் வயது குறைந்தவர்களும் 'அண்ணா' என்று அழைக்கின்ற ஒரு அருமையான பெயரைப் பெற்று விளங்கியவர் அண்ணா என்று குறிப்பிட்டார்.

உண்மையில் எவருக்கும் பெயர் இப்படி அமைவது துர்லபம் அதுமட்டுமல்லாது அப்பெயருக்கு தனிமதிப்பைத்தந்து தி. மு. க. என்ற கட்சிக்கு ஒரு அண்ணாவாக மிளிர்ந்தவர் அண்ணாதுரை

## புதிய இயக்கம்

தான்சார்ந்த இயக்கத்திலே கண்ட குறைகளைய முற்பட்டு, அதில் வெற்றி பெறமுடியாத நிலையில் உயிரூட்டமுள்ள இலட்சியங்களை உள்ளீடாக்கி அவர் அமைத்த கட்சிதான் திராவிட முன்னேற்றக் கழகமாகும். தி. மு. க. என்ற மூன்றெழுத்துக்குள் சுருங்கி விரிந்தஇலட்சிய அடிப்படையில் அமைந்த அக்கட்சி சமுதாயத்தின் அடிவேரைத் தொட்டு சமுதாயப்புரட்சியில்முன் நின்றது சொல்லும் செயலுமொன்றசெயல்பட்டது.

## தனித்தலைமை

பதினேழு ஆண்டுக்குள் ஆட்சியைக் கைப்பற்றக்கூடிய அளவுக்கு வளர்ந்து செழித்து வந்துள்ளதானால் அதற்குரிய தலைமைதான் மிக முக்கியமாகும்.

நல்ல தலைமையில் எந்தக் கட்சி இயங்குகின்றதோ அக்கட்சி தீவிரமான முன்னேற்றத்தைப் பெற முடியுமென்பதை நிலைநிறுத்தியது தி. மு. க. அந்தக் கட்சியின் தலைமைப் பொறுப்பை நிர்வகித்தவர் அண்ணா.

சொல்லில் ஒன்றை வைத்துச் செயலை இன்னொன்றாக்கும் சமுதாயப் புல்லுருவிகள் மலிந்துள்ள நாட்டில் சொல்லுக்கு அமைய வழி நடந்து சென்ற பெருமைக்குரியவர் அண்ணா.


## மரந்த கொள்கை

குறிப்பிட்ட சமுதாயத்தின் எல்லைக்குக் கட்டுப்பட்டு நிற்காமல் தேசிய

(15-ம் பக்கம் பார்க்க)

## கைரேகை அனுபவம் — 10

# சுக்கிரமேடும் ஆயுள் ரேகையும்



படத்தில் தெரிவது போல் C.பகுதியாகிய மேடு சுக்கிர மேடு எனப்படும். இந்த மேடு பெருவிரலுக் கடியில் அமைந்துள்ளது. இந்த மேட்டில் குறுக்கும் நெடுக்குமாக மெல்லிய ரேகைகள் இருக்கக் காணலாம். மெல்லிய மயிர்கள் போன்ற ரேகைகள் சில காலங்களில் இருக்கும். சில காலங்களின்பின் மறைந்து விடுகின்றன. சிந்தனை அதிகமாகவுள்ள காலங்களில் அந்தக் கோடுகள் அதிகமாகத் தோன்றுகின்றன. சிலர் மிகுந்த தெய்வ பக்தியையும், திடமான தீர்மானத்தையும் உடையவர்களாகக் காணப்படுவர் படத்தில் தெரிவது போல் சுக்கிரமேட்டில் இரண்டு அல்லது மூன்று மெல்லிய கோடுகள் நெருக்கமாகவும் ஆழமாகவும் சிலருக்கு அமைந்திருக்கும். இத்தகையவர்கள் ஒருபொழுதும் தங்கள் குறை குற்றங்களை மற்றவர்களுக்கு அனுவசியமாகக் கூறமாட்டார்கள். நடப்பதெல்லாம் தெய்வச்செயல் என்று தெய்வத்தின்மேலேயே பழியைப் போட்டுவிடுவார்கள். இந்த மேடு காணப்படாவிடில் அத்தகையவர்கள் உற்சாகமில்லாதவர்களாகவும் வாழ்வில் விசுவாசமற்ற தன்மையுள்ளவர்களாகவும் காணப்படுவார்கள். சாமானியமாக மேடு அமைந்திருந்தால் அத்தகையவர்கள் மற்றவர்களில் அன்புள்ளவர்களாகவும் இரக்கமும் தர்மசிந்தனையும் உள்ளவர்களாகவும் காணப்படுவர். சிலருடைய கையில் இந்தமேடு அளவுக்குமிஞ்சிப்பெரிதாயிருக்கும் இத்தகையவர்கள் பெண்களிற் பிரியம் உள்ளவர்களாகக் காணப்படுவர். பெண்களாயின் ஆண்களிற் பிரியமுள்ளவர்களாகக் காணப்படுவர். இவர்கள் தங்கள் குடும்பத்தில் எவ்வளவு சிக்கல்கள் இருந்தபொழுதும் வெளியே ஆடம்பரமாய் வாழ்வர். இத்தகையவர்களுள் சிலர் தாம் சில கருமங்களைச் செய்வதாக ஆசை வார்த்தைகூறி ஏமாற்று

**— மு. குணரத்தினம் —**

வார்கள், சிலருடைய கையில் சுக்கிரமேட்டில் எதுவித ரேகைகளும் இல்லாதிருக்கும், இவர்கள் எந்தப் பிரச்னையிலும் பிரவேசிப்பதில்லை.

ஒவ்வொருவருடைய கையிலும் மேடுகளிலும் பலவிதமான குறிகள் இருக்கக் காணலாம். ஆனால் ஒருவருடைய கையில் ஒரு மேட்டில் ஒரு குறியைத் தான் பெரும்பாலும் காணலாம். பிரத்தியேகமான முறையில் இரண்டோ அல்லது அதற்குமேற்பட்ட குறிகளையோ காணலாம். சில குறிகள் நிரந்தரமாக இருக்கின்றன. சில குறிகள் நிரந்தரமாக மறைந்து விடுகின்றன. முன்னைய அதிகாரங்களில், மேடுகளில் கறுப்பு, சிவப்பு, புள்ளிகள் இருப்பது நல்லதல்ல என்பதை அறிந்தோம். அவ்வாறே சுக்கிரமேட்டிலும் கறுப்புச் சிவப்புப் புள்ளிகள் இருப்பதும் நல்லதல்ல. தற்காலத்தில் பிரதான வைத்தியசாலைகளில் மேகநோயினால் அவதிப்படும் ஆண்களையும் பெண்களையும் காணலாம். மேகநோயும் மேகநோயைப் போன்ற வேறு கெட்ட நோய்களும் உள்ளவர்களில் அநேகரின் கையில் சுக்கிர மேட்டில் கறுப்புப்புள்ளி இருக்கக் காணலாம். சுக்கிர மேடு சிந்தனையின் பலாபலன்களை வெகுவிரைவில் காட்டக்கூடிய மேடாக இருக்கின்றது. இந்த மேட்டில் சூலம், முக்கோணம், நட்சத்திரம் ஆகிய குறிகள் இருப்பது நல்லதல்ல சுக்கிரமேட்டிலுள்ள இந்தக் குறிகள் பிரதானமாக நட்பினால் ஏற்படும் துன்பத்தைக் காட்டுகின்றன. இந்த மேட்டில் குறுக்கு நெடுக்குமான ரேகைகள் இருந்தால் உடலில் நோயிருப்பதையும் தேகம் மெலிவதையும் காட்டும். இந்த மேட்டில் சதுரம் இருப்பது நல்லதல்ல. சதுரம் இருந்தால் சிறைவாசம் அனுபவிக்கவேண்டிவரும். சதுரக்குறியுள்ளவர்களிற் சிலர் சிறைவாசம் பெறுதபொழுதும் குற்றமும், நன்னடத்தையும் பெற்றுள்ளனர். வட்டம் இருந்தால் கடுமையான நோய் உண்டென்பதை எடுத்துக்காட்டும். ஆயுள் முடிவு நோயினால் இருக்கும் என்ற விபரத்தை அறிவதற்கு ஆயுள்ரேகையின் தன்மையைப் பார்ப்பது நல்லது. சுக்கிரமேட்டில் குடை சங்கு போன்ற குறிகள் மிகச் சிலருக்கு மாத்திரம் இருக்கும். இத்தகையவர்கள் இராசசுக போகத்தை நம்பிக்கையாக அடைவார்கள். ஆனால் இந்த இரண்டு குறிகளும் தோன்றுவது அபூர்வத்திலும் அபூர்வம்.

சுக்கிரமேட்டிலிருந்து மெல்லிய ரேகைகள் இதர கிரகமேடுகளுக்குச் செல்லும்பொழுது பலன்கள் வேறுவேறாகத் தோன்றுகின்றன. சுக்கிரமேட்டிலிருந்து ஒருரேகை சூரியமேட்டுக்குச் செல்வதைச் சிலரின் கைகளில் காணலாம் இதன் பலனைப்பற்றி முன்னைய அதிகாரங்களில் அறிந்தோம். சிலருடைய கையல் சுக்கிர மேட்டிலுள்ள ரேகையொன்று ஆயுள் ரேகையைத் தொட்டுக் கொண்டிருக்கும். இப்படியானவர்களுக்கு எதிரிகள் இருப்பார்கள். இவர்கள் எதிரிகளினால் துன்பமடைவர். இப்படியான குறியுள்ளவர்களை எதிரிகள் தங்கள் ஆத்திரத்தைத் தீர்ப்பதற்காக இரவில் வழிமறித்து அடித்தும், ஏசியும், வீட்டுக்குக் கல்லெறிந்தும் வீடு வேலி ஆகிவற்றிற்குத் தீ வைத்தும் துன்புறுத்துவர். சிலரின் கைகளில் சுக்கிர மேட்டிலுள்ள ஒரு ரேகை குருபேட்டை (A-பகுதி) நோக்கிச் சென்றிருப்பதைக் காணலாம். குருமேட்டைப் பற்றி வரவிருக்கும் அத்தியாயங்களில் அறியலாம்.

ஆனால் சுக்கிர மேட்டின் ரேகை குருமேட்டுக்குச் செல்வதால் குருமேட்டின் தன்மைக்கேற்றவாறு பலன்கள் நிகழும், அதாவது அத்தகையவர் ஒரு நல்ல காரியத்தில் ஈடுபடுவர். அப்படி ஈடுபட்டுள்ள காரியம் எத்தகையதென ரேகைகளைக் கொண்டு நிச்சயிக்கலாம். விதிரேகையைக் கொண்டு தொழிலையும் சூரியரேகையைக்கொண்டு செல்வச் செழிப்பையும், ஐக்கிய ரேகையைக்கொண்டு குடும்ப வடயத்தையும் தீர்மானிக்கலாம். எப்படியாயினும் இத்தகைய குறியுள்ளவர் தான்எடுத்துக்கொண்ட கருமத்தில் தீவிர முயற்சி செய்வர். இவர்களுக்குத் தாங்கள் எடுத்துக்கொண்ட விடயம் வெற்றியைத்தரும்.

படத்தில் தெரிவதுபோல் C-பகுதி) மேட்டைச் சுற்றியுள்ள ரேகையைப் (ரேகை இலக்கம்-7) பார்க்கவும். இந்த ரேகை ஆயுள் ரேகை எனப்படும். இந்த ரேகையைக் கொண்டு வாழ்வின் காலங்களையும் வாழ்வில் ஏற்படும் நோய் விபத்து ஆகியவைகளையும் அறியக்கூடியதாகவுள்ளது. 'விளையும் பயிரை முளையிலே தெரியும்' என்பதுபோல் இந்தக்கோடுகளைக் கொண்டு பல தன்மைகளையும் அறியலாம். அதாவது தாவரங்களைப் பற்றிப் படிக்கும் பொழுதுதாவரங்கள் கொம்பருள்ளவை, கொம்பரில்லாதவை, விதையிலிருந்து உண்டாகின்றவை என்றவர்க்கங்களைப் படிக்கிறோம். உதாரணமாக ஒரு வாழை நன்றாக வளர்ந்திருந்தால் வாழை குலையீனும் என்று திடமாகக் கூறுகின்றோம். வாழை குருக்கனுயிருந்தால் குலை போடாதென்று கூறுகின்றோம். பொத்தி போட்டதும் குலை நன்றாக வரும் என்று எண்ணுகின்றோம். அவ்வாறே ரேகைகளின் அமைப்பையும் தன்மைகளையும் கொண்டு அனுபவத்துடன் பலன்களைக் கூறக்கூடியதாக இருக்கின்றது, ஆயுள் ரேகை பலவிதமான அமைப்புக்களாகவுள்ளது. ஆயுள் ரேகையின் அமைப்பைக் கொண்டு பின்வரும் விடயங்களை அறியலாம்.

அ. ஒருவருடைய வாழுங் காலத்தை அறிதல்:-

எங்கள் ஒவ்வொருவருடைய கையிலும் ஆயுள் ரேகை நீளமானதாகவும், கட்டையானதாகவும், வெட்டுப்பட்டும், வெளிறியும், பின்னலாகவும் இருக்கக் காணலாம். எங்கள் ஒவ்வொருவருடைய கையிலும் ஒரேமாதிரியான ரேகை அமைந்திருப்பதில்லை. நீண்ட ரேகைகள் ஆயுட்காலம் அதிகம் என்பதையும், குறுகிய ரேகைள் ஆயுட்காலம் குறைவு என்பதையும் காட்டும்.

ஆ. ஒருவருடைய நோயை அறிதல்:

எங்கள் ஒவ்வொருவருடைய கையிலும் வெவ்வேறு விதமான அமைப்புள்ள ஆயுள்ரேகையைக் காணலாம். ஆயுள்ரேகை வெளுத்தும், அகலமானதாகவும், சங்கிலி போலவும் இருக்கக் காணலாம். சிலருடைய கையில் சுக்கிர மேட்டில் அனேக ரேகைகள் குறுக்கும் நெடுக்குமாய் இருக்கக் காணலாம். இத்தகைய தன்மைகளைக் கொண்டு ஒருவருக்கு நோய் உண்டென்பதை அறியலாம். இத்தகைய தன்மைகளைக் கொண்டு ஒருவருடைய தேகம் ஆரோக்கியமற்றதென்றும் இரத்தம், புஷ்டியற்றதென்றும், பலவீனமுடையவரென்பதையும் அறியலாம்,

இ. ஒருவருடைய குணத்தை அறிதல்:-

எங்கள் எல்லோருடைய கைகளிலும் வெவ்வேறு நிறமான ஆயுள்ரேகைகள் இருக்கக் காணலாம் எல்லோருடைய கைகளிலும் ஒரே நிறமான ரேகை இருப்பதில்லை ஆயுள்ரேகை சிவப்பாயும், அழுந்தியும், அகலமானதாகவும் இருக்கக் காணலாம். இத்தகையவர் முன்கோபக்காரரென்றும் ஆத்திரப்பட்டுத் தீங்கான காரியங்களைச் செய்பவரென்றும் கருதப்படும். 'ஆத்திரக்காரனுக்குப் புத்தி மத்திமம்' என்று கூறப்படும். ஆத்திரம் கொண்டவர் சூழ்நிலை சந்தர்ப்பத்திற்கேற்றவாறு சோலி, தொடர்ந்தரவான கருமங்களிற் ஈடுபடுவர். எல்லாம் முடிந்த பின்பு, தான் செய்த தவறை உணர்வர்.

---

எங்கள் கிராமம்
தொடர்வரிசையில்
அடுத்த வாரம்
9— 2— 71
**நெல்லியடி**
எழுதுபவர்
நெல்லை க. பேரன்

---

### 'நிக்சனமிக்ஸ்'

'இகனமிக்ஸ்' என்ற ஆங்கில பதத்தின் பொருள் பொருளியலாகும்.

'நிக்ஸனமிக்ஸ்' என்று ஜனதிபதி நிக்ஸனுடைய நாமத்தையும் 'இகனமிக்ஸ்' சையும் சேர்க்கை செய்து புதிய யூம் ஒன்றை வாஷிங்டன் பத்திரிகையாளர் சிலர் உருவாக்கியுள்ளனர்.

நிக்ஸன் நிர்வாகத்தின் இரண்டாண்டு காலத்திற்குப் பின்னர் அமெரிக்கா பொருளாதாரம் க்ஷீணித்து குட்டிச் சுவராகியிருப்பதை வர்ணிக்கவே 'நிக்ஸனமிக்ஸ் என்ற சொல் பிரயோகிக்கப்படுகிறது.

### சந்தனம் கமழும் இந்தியா

இந்திய விஜயத்தை மேற்கொண்ட பிரபல அஸர்பைசான் ஓவியர் தொகிறுல் நாரிமானமேதோல் 'மரகத இந்தியா, சந்தனம்கமழும்இந்தியா பற்றிய பெரும் சித்திரங்களை தீட்டியுள்ளார்.

'கிழக்குலகின் மாணிக்கமாக இந்தியா எனக்குத் தரிசனமளித்தது. அதையே கலையுருவில் அளித்துள்ளேன்' என்று அவர் கூறினார்

இந்தியாவில் அவர் தங்கியிருந்த ஒருமாதகாலத்தில் 100க்கும் அதிகமான ஓவியங்களைப் படைத்தார். இவைகளில் சாதாரண மக்கள் சித்திரிக்கப்பட்டுள்ளனர்.

---


"லேடன்" **LEYDEN**
தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரி சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ கால்மேஸ்
(Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
74A, கே. கே. எஸ். ரேட், யாழ்ப்பாணம்.
போன்: 330




# ஊர்வலம் செல்கிறது!

**அவள் ஓர் அழகி, அவள் ஒரு பணக்காரி, அவள் வாழப் பிறந்தவள். வாழ்ந்தாளா? வாழ முடியாமல் செய்த சக்தியெது? உண்மை இங்கே மௌனமாகின்றது. பொய்மையில் வெடிச் சத்தத்துடன் ஊர்வலமாகச் செல்கின்றது.**

— கே. ஆர். டேவிட் —

விண்ணதிரும் வெடிகள் வெடித்த-அங்கு குழுமி நின்ற மனித உள்ளங்களை ஒரு நிமிட அதிர்ச்சிக்குள்ளாக்கி நிலை தளரச் செய்துவிட்டு மறைந்துபோய்விடுகின்றன. தொடர்ந்து பல வெடிகள்...... கிட்டத்தட்ட நூறு யார் நீளமுள்ள அந்தப் பிரேத ஊர்வலம் ஆமை வேகத்தில் நகர்ந்துகொண்டிருக்கின்றது.

மலர் வளையங்களால் அலங்கரிக்கப்பட்ட அந்த விலை உயர்ந்த சவப்பெட்டிக்குள் பொன்னி பிணமாக மடிந்து போய்க்கிடக்கிறாள்

எத்தனை புகழ்மொழிகள்.. அனுதாபங்கள்... பொன்னி கடந்த கால வாழ்வுபற்றிய சிறப்புரைகள்... உயிரற்றுப் பிணமாகிவிட்ட அவளுடைய காதுகளுக்கு இவைகள் கேட்குமா...—?தனக்கு இவைகள் கேட்கக்கூடாதென்றுதானோ என்னவோ- பிணமாகச் சாய்ந்துவிட்டாள்.

அவள் உயிரோடிருந்தபோது அவளை வெறுத்தவர்கள்... உறவிருந்தும் உறவென்று கூற மறுத்தவர்கள்... திரும்பிப் பார்க்க வெட்கப்பட்டவர்கள்... அவளையும் ஒரு பெண்ணாக மதிக்காதவர்கள்... வாய்விட்டுக் கூற முடியாத வேதனைகளுக்குள்ளாக்கியவர்... இன்னும் பலரும்... ஒரு முகப்பட்டு 'அனுதாபம்' என்ற வரம்பிற்குட்பட்டு நின்று புகழ்ந்து முடித்துவிட்டனர்.

இவ்வளவு பெரிய ஊர்வலத்தை நடாத்துகிறார்களே, அவள் என்ன பெரிய அரசியல் தலைவியா...? அல்லதுபொதுநலவாதியா..அல்லது யாருமே வாழமுடியாத பெரும் வாழ்வை வாழ்ந்துவிட்டவளா...?

இவ்வளவுக்கும் அவள் ஒரு பைத்தியக்காரி!

பைத்தியக்காரி பொன்னி என்று கூறினால் அந்த ஊரில் தெரியாதவர்களே இருக்க முடியாது.

திரண்டு, சுருண்டு முறுக்கேறி கழுத்துவரை நீண்டிருக்கும் தலைமயிர்...இன்றைய நாகரீக மங்கையரைப் போன்று... இதை யாரும் நாகரீகமாகக் கொள்ளவில்லை! ஏனென்றால் அவள் ஒரு பைத்தியம்...! கறுப்பையே தனது நிறமாகக் கொண்ட ஒருசட்டை, கீழும் மேலும் இரு முடிச்சுகள்.. அளவுக்கு மீறிய அவளுடைய அங்க வளர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியாமல் தோல்வியை ஒப்புக்கொண்ட நிலையில் இருக்கும் ஒரு சில ஆண்களைப்போல் கட்டி இருப்பாள். கறுத்த தளதளப்பான உடல்...

'கண்ணாடிப் பெட்டிக்குள் வைக்கப்பட்ட பொருள்' இப்படி அவளது உடையையும், உடலையும் ஒப்பிட்டுக் கூறிவிடலாம்!

இந்த நிலையிற்றான் பொன்னியை ஊரிற் காணலாம்.

அவளை ஒருமுறை பார்த்தவர்கள் இரண்டாந் தடவையும் பார்க்கத்தான் செய்வார்கள்.

நீர்க்குமிழிபோல இவளுடைய வாழ்க்கையில் வந்துபோன 'கதாநாயகர்கள்' அனந்தம்.

சில நாட்களுக்கு முன்பு... ஊரின் சந்தியிலிருந்து பட்டினம் செல்லும் வீதியிற் கிட்டத்தட்ட அரைமைல் தூரத்தில் ஒரு சந்தி. இந்தச் சந்தியை மருவினாற் போல் ஒரு வைரவகோயில். அதோடு ஒரு தங்கு மடமும் காணப்படும்... பொன்னி வந்துகொண்டிருக்கும் போது அந்த மடத்தில் 'சீட்டு' விளையாடிக்கொண்டிருந்த சில முரடர் அவள் கையைப் பிடித்திழுத்து...? ...!... இப்படிப்பட்ட...

உணர்ச்சியற்ற மரக்கட்டையாகிவிட்ட அவளால் அந்தக் 'கையாலாகாதவர்களின்' ஒருவரின் பெயரைக் கூட கூறிவிட அவளுக்குச் சக்தியோ சிந்தனையோ இல்லை.

இவளைப்பற்றிய பேச்சுக்கள் சர்வசாதாரணமாகிவிட்டாலும் இவளுடைய கடந்தகால வாழ்வின் சிறப்புப்பற்றிய விஷயம் அந்தரங்கமாகவே இருந்துகொண்டுவந்தது. உண்மையை அறியாதவர்கள் இல்லாமலில்லை. அவர்களுக்கு உணர்ச்சியும் இல்லாமலில்லை'...

0 0 0

அதை வெளியில் கூறிவிட பயந்தான் காரணம் பொன்னியின் கடந்தகால வாழ்வு பற்றியோ சொத்துக்கள் பற்றியோ யாரும் பேசக்கூடாதென்பது கந்தையாவின் தனிக்கட்டளை! மீறியவர்கள் ஏதோ ஒருவகையில் தண்டிக்கப்படுவர் - தண்டிக்கப்பட்டுமுள்ளனர் கிராமத்தில் கந்தையா தான் பெரும் பணக்காரர். சிறப்புப் பெயரால்கூட அழைப்பார்கள். சர்வவல்லமைமிக்கவரெனப் பெயர் பெற்றவர்.

கந்தையாவின் தங்கை மகள்தான் பொன்னி.

கந்தையாவிற்கு ஒரேஒரு தங்கைதான் பூரணம்.

பூரணம் அழகானவள் குணமானவள் - சாதாரண அழகல்ல -தங்களுடைய அழகின் அந்தரங்கத்தை புரிந்துகொண்ட பெண்களே வர்ணிக்கும் அழகுடையவள்.

பூரணம் வசதியான வாலிபன் ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்டாள். அழகுதான் அதற்குக் காரணம் என்று கூறவும் வேண்டுமா? இயற்கையை அவன் வாழ்த்தினான். ஏனென்றால் அவளைச் சீரும் சிறப்புமாக வாழவழி வகுத்தது அந்த இயற்கை தான்.

அழகை மையமாகவைத்து உருவான பூரணத்தின் வாழ்வு அவளுடைய குணத்தால் பூரணம் பெற்றுக் கோபுரமாக மாறியது.

கந்தையா பூரணத்தை அண்டியே வாழ்ந்தான். பூரணத்தின் வாழ்வு பூரணமாகிவிட முத்திரையாக ஒரு பெண் குழந்தைக்குத் தாயானாள் வைடூரியம் போலத் தோன்றிய அந்தக்குழந்தைக்குப் பொன்னரியம் என்று பெயர் சூட்டினாள்.

பைத்தியக்காரி பொன்னிக்கு பூரணம் தம்பதிகள் அன்போடுவைத்தபெயர் பொன்னரியம்.

பூரணம்தம்பதிகளின் பூரணத்தை நிலைநிறுத்த முதல் முத்திரையாகப் பிறந்த பொன்னரியமே கடைசிமுத்திரையாகவும் அமைந்துவிட்டாள். அவர்களுக்கு வேறு குழந்தைகளே பிறக்கவில்லை

0 0 0

காலவிருட்சத்தில் ஆண்டுகள் எத்தனையோ மலர்கள் அரும்பாகி,மொட்டாகி,மலராகி வாடிவதங்கிப்போய்விட்டன...

பொன்னரியம் கன்னிவாழ்வின் கடைப்பகுதியை நெருங்கிவிட்டாள்.

அவளைத் தொட்டுவிட வட்டமிட்ட 'இளவட்டங்கள்' எத்தனை... கருவாகி, உருவாகி, உரம் பெற்ற அவர்கள் ஆசைகள், நப்பாசைகளாகிவிட... அவர்கள் அவளைப்பற்றிக்கூறிவிட்ட வார்த்தைகள்... தூற்றல்கள் காதால் கேட்கத்தான் முடியுமா?

இவளை மையமாக வைத்து தங்களுக்கு ஆதரவு தேடிக்கொள்ள - இவளை வாழ்த்திவிட்ட - புகழ்ந்த - ஆதரவு கொடுத்த உள்ளங்கள்தான் எத்தனை

இவ்வளவுக்கும் தன்பணம்தான் காரணமென்பதை உணாத்துவிட அவளுடைய அறிவு வளர்ச்சியடைந்திருக்கவில்லை. செல்வத்தில் வளர்ந்த அவள் வெள்ளையுள்ளம் படைத்தவள் என்பது எல்லோருக்கும் தெரியும். ஒரு நாள் 'விபத்து' என்ற உருவில் வந்த காலன் பூரணம் தம்பதிகளைக் கொண்டுசென்றுவிட்டான். பூரணம் தம்பதிகள் சமாதியாகிவிட பொன்னரியம் தனித்து நின்றாள்.

பொன்னரியத்தின் பொறுப்பு கந்தையாவிடம் கைமாறியது. கந்தையா பணக்காரக் கந்தையாவானான்!

உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் அவளுடைய கொள்ளையழகு- துயரத்தால் கொள்ளைபோய்விட, நிதர்சனமற்றநிலையில் - கந்தையாவின் ஆதரவோடு ஏதோ வாழ்ந்தாள்.

தனது நிலையையும் பணத்தையும் உணர்ந்த கந்தையா கடமை என்ற போர்வையில் தனது அதிகாரத்தால் பொன்னரியத்திற்குத் திருமணம் செய்து வைக்கமுனைந்தான். திருமணமும் நடக்க வேண்டும். தனது அதிகாரமும் நடக்கவேண்டும் ஒரே கல்லில் இரு கனிகள்!

ஊரிலுள்ள ஒருதரப்பட்ட பைத்தியங்களின்மீது தனது கண்ணோட்டத்தைச் செலுத்தினான்... நீண்டநாள் சிந்தனையின் பின் அவனது பார்வை சாஸ்திரி கணபதிப்பிள்ளையின் மீது நிலைகுத்திநின்றது.

சாஸ்திரி கணபதிப்பிள்ளைக்கு வாழ்க்கையில் நடுப்பகுதியை தாண்டிவிட்ட வயது- காலத்தால் நரைத்த தலைமயிர் - உரம்படிந்த தேகம் - அந்தத் தேகத்தில் கடவுள் பக்தியை எடுத்துக்காட்டும் திருநீற்றுக்கீறுகள் -கையிலே சில ஏட்டுச் சுவடிகள் சகிதம் இவரைக் காணலாம்,

கணபதிப்பிள்ளை முன்பே திருமணமானவன்; திருமணமாகி முதலாம் வருடமே அவள் அவனைவிட்டுப் பிரிந்து பழைய -புதிய உறவுகளோடு உள்ளூர் வைத்திய சாலையொன்றில் பணிபுரிந்துகொண்டிருக்கிறாள்.

கந்தையாவின் முயற்சியால் சாஸ்திரி கணபதிப்பிள்ளை மணமகனாக நிர்ணயிக்கப்பட்டு முடிவும் செய்யப்பட்டுவிட்டது.

பலரும் புடைசூழ-மேளங்கொட்ட -வாழ்த்தொலிகள் காதைப்பிளக்க ஒரேமகள் மாங்கல்யம் தாங்கிய கழுத்துடன் மணமகளாய் மணமகனோடு மனைமகளாய் ஊர்வலம் வரும் காட்சியைக் கண்டுவிட பூரணந்தம்பதிகள் கண்டுவிட்ட கனவுகள் கனவுகளாய்ப்போய்விட — பதிவுத் திருமண காரியாலயத்தில் திருமணம் நடந்தது!

மனித வர்க்கத்தைக்காக்க மனித வர்க்கத்தால் உருவாக்கப்பட்ட சட்டம் - கந்தையாவின் பணத்தால் திரையிடப்பட அதே சட்டம் பொன்னரியத்தையும் கணபதிப்பிள்ளையையும் மணமக்களாக்கிவிட்டு மௌனமாகிவிட்டது.

உணர்ச்சியற்ற வண்டு அவன்; புத்தம் புதுமலர் அவள்; இயற்கைக்கு மீறிய தொடர்பு சட்டம் செய்து வைத்த பெரும் நற்கைங்கரியம்!

தாய் தந்தையரின் பிரிவு - விருப்பற்ற திருமணம், தெளிந்த நீரோடையாக இருந்த அவள் உள்ளத்தில் இருபெரும் பாறுங்கற்கள்! சிந்தித்தாள் - நிதர்சனமற்ற அவளது சிந்தனை தொடர்ந்தது.

கிட்டத்தட்ட ஆறுமாதங்கள் சென்றிருக்கும், கணபதிப்பிள்ளைபொன்னரியத்தை விட்டுப் பிரிந்து கோயிலுக்கு வந்துவிட்டான்.

பொன்னரியம் பொன்னியாகி மீண்டும் தனித்து நின்றாள்.

கடந்த ஆறுமாத காலத்தில் கண்டுவிட்ட 'மொட்டான புதிய அனுபவங்கள் அவளது உள்ளத்தோடு சங்கமித்து உள்ளத்தழும்பாகி மாறாத வேதனையாகப் பரிணமித்துப்போயிருந்தது.

சிந்தித்தாள் ...... 'நிம்மதி கிடைக்காது' என்று சிந்தித்தாள். இப்போது அந்த வெறும் சிந்தனையிலே நிம்மதியைக் கண்டாள்— குறிக்கோளற்ற சிந்தனைக்கு முடிவேற்படுமா? ...

வெறுஞ் சிந்தனையோடு தன்னையறியாமலே நடந்தவள் இப்போது சூனியமான உள்ளத்தோடு நடந்தாள் - அந்த நடை பயிற்சியாகி பழக்கமாகிவிட்டது — தினமும் நடக்கிறாள்.

காலை ஊரிலிருந்து புறப்பட்டுவந்து பத்துமைல் தொலைவிலுள்ள அம்மன் கோயிலொன்றின் மடத்திலிருக்கும்கணவனோடு இருந்துவிட்டுதிரும்பவும் நுணுவிலுக்கே வந்துவிடுவாள் - தினப்பழக்கம்!

உணர்ச்சியோடு இருந்த போது கணவனை வெறுத்தவள் - உணர்ச்சியற்ற நிலையில் அவனைத்தேடிச் செல்கிறாள்-இது பைத்தியக்காரச் செயலா? ... அல்லது ... இதுதான் கணவன் மனைவி உறவா? இது தொடர்ந்தது.

நேற்றுப் பின்னேரம் கைதடிப்பாலத்தடியில் இறந்துகிடந்தாள் பொன்னி! உண்மைக்குத் திரைபோடப்பட்டது. கௌரவத்தோடு பிண ஊர்வலம் சென்று கொண்டிருக்கிறது.

பொன்னியின் இறுதியாத்திரையை மையமாக சிறு பணச்செலவுடன் தனது யோக்கியத்தையும் 'மருமகன்' என்ற உறவையும் கிராமமக்கள் மத்தியில் ஒப்புக்காக நிலைநிறுத்துகிறான்.

கண்ணுக்கெட்டிய தூரத்தில் பிணஊர்வலம் சென்றுகொண்டிருக்கின்றது. எல்லோருடைய தலைகளுக்கும் மேலாக ...... பொன்னியின் சவப்பெட்டி — அதுகூடத் தெளிவாகத் தெரிகிறது

மீண்டும் ஒரு பீரங்கிவெடி ... சத்தம் ஓய்ந்தவிடவில்லை தொடர்ந்து பல வெடிகள் ... பொன்னியின் ஊர்வலம் தொடர்கிறது. கந்தையாவும் செல்கிறார். அவர் கண்களில் நீர் எப்படி வந்தது. அது அவருக்கே தெரியாது.

(யாவும் கற்பனை)

## சோவியத் வரலாறு

'சோவியத் யூனியன் வரலாறுச் சுருக்கம்-பாகம் 1' என்ற நூலின் மலையாள மொழிபெயர்ப்பை 'கேரள பாஷா ஸ்தாபனம்' வெளியிட்டுள்ளது. இந்த நூலின் மூலப் பிரதிகள் சோவியத் விஞ்ஞானப் பேரவையின் வரலாற்றுக் கழகத்தால் வெளியிடப்பட்டுள்ளன. இ. இ. ஸ்மிர்னோவ் (பிரதம ஆசிரியர்), எம். வி. வியாத்கின், எஸ்.எம் லேகின், என். வய் நஸ்கோவ் ஆகியோர் இந்நூலின் தொகுப்பு ஆசிரியர்கள் ஆவர்.

கார்க்கியின் படைப்புக்களை மொழி பெயர்த்ததற்காக1968-ல் 'சோவியத் லாண்ட்' நேரு பரிசு பெற்ற திரு. கே. நாயர் இந்நூலை மலையாளத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

இதில் 11 அத்தியாயங்கள் உள்ளன. தொடக்க கால வரலாற்றிலிருந்து 1917 பெப்ரவரியில் நடைபெற்ற பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சிவரை. இந்நூலில் இடம்பெற்றுள்ளன. திரு. என். வி. கிருஷ்ண வாரியார் இந்த வெளியீட்டின் பொது ஆசிரியராகவும், திரு. என். விஜயன் இதன் பதிப்பு ஆசிரியராகவும் உள்ளனர்.

வட்டியுடன் இனும் !
ரூபா 500|- ஐஞ்ஞூறுக்கு
வருடம் 7 சதவீத வட்டி கொடுக்கப்படும்.
இதை ஏழு நாள் அறிவித்தலில்
எப்பொழுதும் எடுக்கலாம்
ஒவ்வொரு மாதமும்
அதிட்டமுள்ள ஒருவருக்கு
ரூபா 25|- இருபத்தைந்து
இனுமாகக் கொடுக்கப்படும்
மறு விபரங்களுக்கு:
தம்பி அன் கோ,
வண்ணார்பண்ணை

# வெள்ளி மல்லிகை

'வாலிபத்தின்வெற்றி' என்று ஒரு ரஷ்ய திரைச்சித்திரம் பழையநாள் படம். அதிலே ரஷ்யநாட்டு வாலிபர்கள் ஸ்டாலினின் பிறந்தநாள் கொண்டாட்டத்தின்போது நடன அழகு லாவண்யம் பொலியப் பலவகையான உடற்பயிற்சி செய்து காண்பிக்கிறார்கள். அன்று கொழும்பு நகர மேயராகவிருந்த டக்டர் குமாரன் ரத்னம் தலைமை வகித்து இப்படத்தின் திரைக்காட்சியைத் தொடக்கி வைத்தார். படத்தில் ஒரு காட்சியில் மைதானத்தின் மத்தியில் வாலிபர்கள் வட்டவடிவமாகச் சுற்றடுக்குவரிசையில் நிலத்தில் முழுப்பேரும் ஒரே திசைக்குக் கால்நீட்டி நிமிர்ந்து படுத்துக்கொண்டே கதிரவன் வரவு கண்ட செந்தாமரைப் பூவாக மலர்கிறார்கள். சோவியத் முதல்வர் ஸ்டாலினின் தலையைபெரிய வர்ணச்சிலையாக நிலத்தில் வார்த்து வைத்தாற்போல அதுமாதிரி மற்றொரு அழகு டிரில்லில் ஸ்டாலினின் முகத்தை அப்படியே காண்பிக்கிறார்கள்.

ராமையாபிள்ளையுடனும் கூடச் சின்னப் பெண்ணாகக் கொழும்பு வந்திருந்தார். இலங்கை இந்திய தூதரக முதலாவது காரியதரிசியின் இல்லத்தில் ஒரு தேநீர் விருந்தும், பத்திரிகை நிருபர்கள் அவரைச் சந்தித்துப் பேசுவதற்குப் பேட்டியும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

'வாலிபத்தின் வெற்றிப் படம் பார்த்திருப்பீர்கள், மிஸ் கமலா. படத்திலே வரும் அந்த அழகு டிரில் பற்றி உங்கள் கருத்து என்ன?'

ஏதாவது கேட்கவேணுமென்று தோன்றியபோது இந்தக் கேள்விதான் என் வாயில் வந்தது பத்திரிகைநிருபர்கள் மத்தியில் கமலா ஒரு நாற்காலி போட்டு உட்கார்ந்திருந்து கலந்துரையாடியதை வழுவூரார் சிறிதே எட்டத்தில் ஒரு மூலையில் போய் அமர்ந்து செவிமடுத்துக் கொண்டிருந்தார்.

'வாலிபத்தின் வெற்றி'ட்ரில் காட்சிகள் அழகாகத்தானிருக்கின்றன. எங்கள் நாட்டிலே நடைபெறும் சர்க்கஸ் கம்பங்கூத்து எல்லாவற்றையும்விட அற்புதமாயிருக்கிறது. ஆனால் எங்கள் பரதநாட்டியம் இதற்கெல்லாம் வேறுபட்டு நிற்கும் மேலான கலை. அப்படித்தான் நான் சொல்வேன், நாட்டியமாடுவதனால் உடற்பயிற்சி ஏற்படுகிறதென்பது உண்மை. சென்னையிலுள்ள என் 'சாந்தோம்' இல்லத்தில் நானே தினமும் உடற்பயிற்சி அப்பியாசங்கள் செய்து வருகிறேன். ஆனால் உடற்பயிற்சியாக டிரில் செய்வதுபோல நடனம், நாட்டியம் ஆடுவதென்பது எங்கள் நாட்டுக் கலைத்தத்துவத்துக்கு உடன்பாடானதல்ல. பரதநாட்டியம் தெய்வ வழிபாட்டுக்கே அர்ப்பணிக்கப்பட்டது. ஆடும்போது இறைவன்முன் ஆடுகிறோம், இறைவன்முன் தலைதாழ்த்தி பக்தியோகம் செய்கிறோம் என்ற ஒரே நினைவுதான். உடலைப் பற்றிய நினைவே இருப்பதில்லை. தன்னை மறந்து தன் நாமம் கெட்டு இறைவன் தாளில் தலைகுவித்து நிற்பதாக யாரோ பாடியிருக்கிறார்களே. அதே நிலைதான்! அதுசமயம் ஆன்மா இறைவனை நாடியே மெல்ல மெல்லப் போய்க்கொண்டிருக்கிறது. இதே நல்லுணர்ச்சி கலையை ரசிப்பவர்களிடமும் ஏற்பட வேண்டும். அது தான் கலையின் வெற்றி. எங்கள் தமிழகத்துக் கலைகளான நாட்டியம், சங்கீதம், சிற்பம், ஓவியம் அனைத்தும் இதே மனோன்னதநேரத்தை அடிப்படையாகக் கொண்டவைதாம் — கலைகளின் ஜீவனே இதுதான்!'

இவ்வாறு உள்ளுணர்ந்த அனுபவ வாக்காகக் கூறிய கலைமணி இதனைச் சொல்லி முடித்தபோது 'இன்றைக்கிரவு டவுண் ஹோலில் நடனத்தில் நடராஜ தாண்டவமும் ஆடப்போகிறேன், கூடுமானால் அவசியம் வந்து பாருங்கள்' என்று அன்பு அழைப்பும் விடுத்தார்.

## கலை மடந்தையின் கன்னிச் சிவப்பு

அவ்விதமாக ஸ்டாலினின் முகத்தில் குறுநகை அரும்பும்போது ஏதோ திகைப்பூட்டும்' ட்ரில். காட்சியைப் பார்த்தாற்போல் நமக்கு வாய் ஆவென்று திறந்துவிடுகிறது. இதே டிரில் வியூகமாகவே செங்கொடியும் வடிவமைப்பாகி காற்றில் (நிலத்தில்தான்) படபடவென்று அடித்துத் துடிக்கிறது.

இந்த அழகு டிரில் காட்சிகளையெல்லாம் உயரத்திலிருந்து வர்ணப்படம் பிடித்து படம் பார்ப்பவர்கள் பல்கனி ஆசனத்திலிருந்து பார்ப்பதுபோல வெள்ளித்திரையில் காண்பிக்கிறார்கள்.

'வாலிபத்தின் வெற்றி' படம் காண்பித்த அந்நிய நாட்களில்தான் திரை உலகப் புகழ்பெற்ற நடன நட்சத்திரம் குமாரி கமலா தோட்டத் தொழிலாளர் குழந்தைகளின் கல்வி உதவி நிதிக்காக நடனம் ஆடுவதற்கு தன் தாயாருடனும் தங்கையுடனும் ஆடல்குரு

-அ. செ. மு.-

இதுமாதிரி ஆளுக்கொரு கேள்வி கேட்டு ஓர் அரை மணிநேரம் எங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த நாட்டிய திலகத்தை திணறடித்துக்கொண்டிருந்தோம். பரதமேகலை கூறியதைக் குனிந்த தலையுடனே ரிபோர்ட் எடுத்துக்கொண்டிருந்தபோது, மற்றொரு சகோதர நிருபரின் கேள்விக்குப் பதிலளித்த கமலா 'நாங்களெல்லாம் பிராமணர்களாச்சே; அதெல்லாம் ஒன்றும் சாப்பிடுவது கிடையாது. ஆனால் இதோ நிற்கிறாளே என் தங்கை, அவளுக்கு மீன் பிடிக்கத் தெரியும். இன்றைக்கிரவு டவுண்ஹாலிலே ஆடிப்பாடி வலைவீசி மீன்பிடிக்கப்போகிறாள். நீங்கள் வந்தால் பார்க்கலாம்' என்று கூறியது என் காதில் வீழ்ந்தது. நிருபநேயர் என்ன கேட்டிருப்பாரோ!

பத்திரிகை நிருபர்கள் இப்படி எவ்வளவோ கேட்பார்கள். மிக்க அக்கறையுடனே.

லலிதா பத்மினி ஜோடி ஒருசமயம் வந்தார்கள். உதட்டுக்குச் சிவப்பும் முகத்துக்குப் பூச்சும் கண்ணுக்கு மையும் கைவிரல் கால்விரல்களுக்கெல்லாம் சாயமும் ஏற்றி பட்டணத்து நாகரிகத்தைத் தலையிலே அள்ளிக்கொட்டிக்கொண்டு ரதமலானை விமான நிலையத்தில் கேரளத்து யானைத்தந்தத்தில் கடைந்தெடுத்தஜோடிச் சிலைகளாக வந்திறங்கினார்கள். பம்பலப்பிட்டி கிறீன்லன்ட்ஸ் ஹோட்டல்வரை அவர்களைத் துரத்திக்கொண்டு பின்னால் வந்த பத்திரிகை நிருபர்கள் ஓட்டல் மாடியிலே அவர்களைச் சுற்றி வளைத்துக் கொண்டார்கள். நிருபர்களைச் சூழ்ந்துகொண்டு பின்னால் மற்றொரு பெருங்கூட்டம். பத்திரிகைக்காரர் கேட்ட கேள்விகளுக்கு இரு சகோதரிகளும் ஒருவர்ஓயமற்றொருவராகப்பட்பட்டெனப் பதிலளித்தார்கள். இரு சகோதரிகளுக்கும் கமலாவுக்கும்கூட, ஆங்கிலம் நன்றாகப் பேசவருகிறது.

ரசிகர் கூட்டத்தில், என் பின்னால் நின்ற ஒருவர் யாரோ ஒருவர் என் காதுக்குள்ளே குனிந்து குசுகுசுத்தார். 'வீட்டிலே என்ன மொழி பேசுகிறீர்கள் என்று கேளுங்கசார்!என்றவர் என் தோளில் மெல்லச் சுரண்டினார்படபடவென்று சரமாரியாகக் கேள்விக்கணைகள் கேரளச் சகோதரிகளை நோக்கிப் பறந்துகொண்டிருந்த மின்வேகம் புயல்வேகத்தில் நான் என்ன கேள்வி தொடுப்பது என்று யோசித்துக்கொண்டிருந்தவேளை, யாரோ ஒரு சினிமா நண்பர் என் காதில் போட்டதையே பிரயோகித்தேன். கேள்விகளுக்குப் பதிலளித்த லலிதா, இந்தக் கேள்விக்கு விடையாக உதட்டைச் சுளித்து வாயைக்கோணி அதற்குமேல் எதுவும் பேசாதிருந்தார். பத்மினியோ 'வீட்டிலே பேசும்மொழி மலையாளம்' என்று அக்கேள்விக்கு உடனே பதிலளித்தார். கேள்வியும் பதிலும் முதல்தரமாகிவிட்டன. லலிதாவின் முகபாவனை அப்ளோஸ் பெற்றது. நிருபர்கள் தலைகவிழ்ந்தார்கள். (எவனோ ஒரு சினிமாக் கிறுக்கனின் முன்பாகத்தான்) 'மலையாள மகுடி' ஏட்டில் பதிவாயிற்று.

'What is your tongue at-home?'- என்று ஆங்கிலத்தில் தான் கேட்டேன். 'டங்' என்பதற்கு தமிழிலே 'நா' என்று பொருள் 'எங்கள் வீட்டுமொழி எங்களுக்குள்ள சொந்த 'நா' மலையாளம்' என்று பத்மினி கூறியபோது 'அப்போ வீட்டிலே ஒருமொழி, வெளியிலே பேசுவது இன்னொரு மொழி, படங்களில் நடிக்கும்பொழுது மற்றொரு பேச்சுமொழி, மேடையிலே திரையிலே ஆபூர்வமாகக் கைவந்ததொரு நடன மொழி நடிப்புமொழி — என்று இப்படியாக ஐந்து மொழிகள் சித்திக்கப்பெற்றிருக்கிறீர்கள். மலபாரிலே நாகவழிபாடு சிறப்பாகஉண்டாம். ஐந்துதலைப் பாம்பும் அங்கு இன்னமும்உண்டோ? ஐந்துதலைப் பாம்பு படம்விரித்தாடுவதுபோல் ஆடவருமா, அல்லது ஐந்து தலைப்பாம்புகூட அஞ்சிநடுக்கும் கஞ்சமலைப் பிடாரனுக மகுடி ஊதி பாம்பையே ஆட்டி வைப்பீர்களா, அம்மணிகாள்!' என்றெல்லாம் கேட்டுத் தெளியலாம், அரட்டை அடிக்கலாம். ஆனால் நிருபர்கள் எங்கே விட்டார்கள்? அந்தளவுக்கு போதிய அவகாசம்தான் ஏது?

0 0 0


பரதக்கலையில் மிக்க ஆர்வம்கொண்டு தங்கள் பிள்ளைகளுக்கு அக்கலையைப் பெரும்பணம் செலவிட்டுக் கற்பித்து தமதில்லங்களில் கலைவாணி உபாசனை செய்துவந்தகொழும்புவாழ் தமிழ்க் குடும்பங்களில் பல்வைத்தியடக்டர் பாலேந்திராவின் குடும்பமும் ஒன்று. அவ்விதமாக பரதக்கலைமேல் உள்ள சிரத்தையுடனே டக்டர் நகரமண்டப நிகழ்ச்சிக்கு இலவசமாக ஓர் அனுமதிச்சீட்டு அனுப்பி வைத்தார். அதனால் பரத கன்னியின் அழைப்பினை ஏற்று நகரமண்டப கலைஅரங்கில் அரியதொரு நடன சித்திரகூடம் பார்த்து மகிழும் வாய்ப்பை இழக்காதவன் ஆனேன்,

அகரவரிசையில் ஒரு பாடல்

### அன்பிருந்தால் ...

— அரியாலையூர் செல்வபாரதி —

அன்பிருந்தால் அவனியில் அழிவில்லை;
ஆக்க முண்டாம் ஆன்மீகம் வளரும்
இன்பம் நிலைக்கும் இதயம் குளிரும்
ஈகை சிறக்கும் ஈரம் ஊறும்
உண்மை நிலவும் உயர்ச்சி ஓங்கும்
ஊக்க முண்டாம் ஊர்களும் ஒடுங்கும்
எழுச்சி நிலைக்கும் என்றும் நாட்டின்
ஏக்கம் தீரும் எதிர்ப்பும் அகலும்
ஐயம் அகலும் ஐக்கியம் உலவும்
ஒற்றுமை நிலைக்கும் ஒளியும் நிலவும்
ஓய்வு கிடைக்கும் ஓமம் வளரும்
ஔவை மொழிகள் அவனியில் நிலைக்கும்.



சோவியத் யூனியனின் விலிஉய் பகுதியிலுள்ள நீர் மின் விநியோகக் கட்டுப்பாட்டு நிலையத்தை இப் படத்தில் காணலாம்.



நாடக உலகிலும், சினிமா உலகிலும் புதுமை செய்ய வேண்டுமென்று துடியாய்த் துடிப்பவர் கலைஞர் எஸ். அருமைநாயகம். ஈழத்தில் தயாரான 'நிர்மலா' படத்தின் டைரக்டரான இவர், கலைவாழ்வுக்கே தன்னை முழுக்க முழுக்க அர்ப்பணித்து உழைப்பவர். ''லேடி டைப்பிஸ்ட்'' என்ற தனது நகைச்சுவை நாடகத்தை நாடெங்கிலும் மேடையேற்றி வருகிறார். அந்த நாடகத்தில் இப்படித் தோன்றுகிறார். நவாலி பெற்றெடுத்த இந்தக் கலைஞர் 'அருமை'!



கலையுலகுக்கு அருமையாகக் கிடைத்த 'அருமை' தனது ''லேடி டைப்பிஸ்ட்'' டுடன் இப்படித் தமாஷ் செய்கிறார்.!

## விமர்சனம்:

# இரு நாடகங்கள்!

நாவலப்பிட்டி பெண்கள் சமூகமன்றம் நடாத்திய கலைவிழாவில் நாவல் நகர் சித்தி பரீதாவின் 'இலட்சியப் பெண்', கிங்ஸ்லிசெல்லையாவின் 'சொன்னதைச் செய்வேன்' ஆகிய இரு நாடகங்கள் இடம்பெற்றன.

'இலட்சியப்பெண்' முற்றிலும் பெண்களால் நடிக்கப்பெற்ற நாடகம் பெண்ணொருத்தியின் சோக வாழ்வை மையமாகக் கொண்டு சித்தரிக்கப்பட்டுள்ளது. கதைவசனமெழுதிய சித்திபரீதாவே கதாநாயகி மாலதியாகவும் நடித்தார். இதனால்தானோ என்னவோ பாத்திரமறிந்து நடித்ததன்மூலம் தன் நடிப்பாற்றலை அவர் வெளிக்காட்டியிருக்கின்றார்.

கதையின் முழுக்கருத்தையும் திரைமறைவில் கூறிச் சமாளித்தது ஆரம்பநாடக கர்த்தாக்களான பெண்கள் சமூகமன்றத்திற்கு வெற்றியேயாகும்.

இதன்மூலம் நடிப்பைவிட கருத்தை வெளிக்காட்ட வேறு முயற்சிகள் மேற்கொண்டிருந்தால் தோல்வியையே தழுவியிருப்பார்.

மாலதியின் தாயாராக நடித்த ராணி ராமையாவின் நடிப்பில் முழுமையைக் காணக்கூடியதாக இருந்தது. ஆனால் ஜோதி ராமையாவின், நவமணி ராஜூ ஆகியோர் மேடையில் நடித்துக்கொண்டிருக்கும்போதே வசனங்களை மறந்து பின் சமாளித்தது நாடகத்தின் விறுவிறுப்புக்குத் தடையாக இருந்தது போல அமைந்துவிட்டது ஓரிரு காட்சிகள்.

ஹாஸ்யம் இல்லாத தமிழ் நாடகங்களே இல்லை எனலாம் அவற்றிற்கு சவால் விடுவதாக அமைந்துள்ளது இந்நாடகம் ஹாஸ்யமே இல்லை.

இதற்கு அடுத்தபடியாக நடந்தது கிங்ஸ்லி செல்லையாவின் 'சொன்னதைச் செய்வேன்' ஹாஸ்ய நாடகம் முற்றிலும் பிரபல நடிகர்களான குமாரி ஹெலன் 'மஞ்சள் குங்குமம்' புகழ் உதயகுமார் மற்றும்பலர் நடித்த நாடகம்.

முன்னணி நடிகர்கள் நடிக்கக்கூடிய நாடகமா அல்லது ஈழத்தில் கதைப்பஞ்சமா அல்லது கருத்துப் பஞ்சமா என்ற கேள்வி தானகவே எழுகின்றது.

முன்னணி நடிகர்கள் நடிப்பு என்பதால் எதையும் ரசிகர்கள் சுவைத்துவிடுவார்கள் என்பது தயாரிப்பாளரின் அதீத கற்பனை போலும்.

'இலட்சியப் பெண்ணை'யும், 'சொன்னதைச் செய்வேனை'யும் இணைத்துப் பார்க்கும்போது இலட்சியப்பெண் தானகவே உயர்ந்துவிடுகின்றன். இலட்சியப்பெண் ரசிகர்களை அலட்சியம் செய்துவிட முடியவில்லை.

—பி. மகாலிங்கம்.

# "சுடரும் சூறவளியும்!"

## ஏ. வி. எம். தயாரிப்பு

ஏ வி எம் சார்பில் தயாரிக்கவிருக்கும் தமிழ்ப் படத்திற்கு "சுடரும் சூறவளியும்" என்ற பெயர் வைக்கப்பட்டுள்ளது.

இப்படத்தில் ஜெமினி கணேசன், முத்துராமன், எம் ஆர் ஆர் வாசு, நிர்மலா ஆகியோர் நடிக்கிறார்கள்.

கதை வசனங்களை குகநாதன் எழுத கண்ணதாசனின் பாடல்களுக்கு எம் எஸ் விஸ்வநாதன் இசையமைக்கிறார்.

எஸ் ஆர் புட்டண்ணா டைரக்ட் செய்கிறார்.



ரஷ்யாவில் மேடையேற்றப்பட்ட பிரபல நாடகமொன்றில் இப்படி இவர்கள் தோன்றி ரசிகர்களை மகிழ்விக்கிறார்கள்.

# கலை அரங்கம்

## புதிய கலர்ப் படத்தில் நடிகர்திலகம்



தங்கராஜ் மூவீஸ் என்னும் ஸ்தாபனத்தினரின் பெயரிடாத முதல் ஈஸ்ட்மன் கலர் தயாரிப்பின் படப்பிடிப்பு ஏ. வி. எம். ஸ்டூடியோவில் ஜனவரி 9-ம் தேதி சனிக்கிழமையன்று துவங்கியது.

ஜோதிபட் என்னும் ஆறு வயதுச் சிறுமி காமிராவை முடுக்க படத்தின் டைரக்டர் பி. மாதவன் கிளாப் அடிக்க படத்தின் படப்பிடிப்பு துவங்கியது.

இப்படத்தில் 'நடிகர் திலகம்' சிவாஜி கணேசன் டாக்டராக புதிய வேடத்தில் நடிக்கிறார். இதைத் தவிர டாக்டரின் தந்தையாகவும் வந்து இரட்டைவேடத்தில் நடிக்கிறார்.

டாக்டர் உமாபதிக்கு நிறையப் பெண் தோழிகள் உண்டு. உமாபதியின் தந்தையும் ஒரு காலத்தில் பெண் பித்துப் பிடித்து அலைந்து, தனது சொத்தில் பெரும் பகுதியை இழந்தவர்தான்.

தன் மகனும் இதேநிலைக்குப் போய்விடுவானே என்று அஞ்சி சொத்துக்களையெல்லாம் ஏழை நர்ஸ் பத்மாவின் பெயருக்கு எழுதிவைத்துவிடுகிறார்

ஆக, சொத்தை மீண்டும் பெறவேண்டுமானால் அந்த ஏழை நர்ஸை திருமணம் செய்துகொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் டாக்டருக்கு ஏற்படுகிறது.

இந்தத் திருமணம் நடைபெற்றதா அதன் விளைவுகளென்ன என்பதை கதை சுவையாகச் சித்தரிக்கின்றது.

நர்ஸ் பத்மாவாக சௌகார் ஜானகி நடிக்கிறார். ஹாஸ்ய பாகத்தில் நாகேஷ் நடிக்கிறார்.

கதை வசனங்களை பாலமுருகன் எழுத எம். எஸ். விஸ்வநாதன் இசையமைக்க பி என. சுந்தரம் ஒளிப்பதிவு செய்ய பி. மாதவன் டைரக்ட் செய்கிறார். இப்படத்தை கே. சதானந்த்ராவும், டி. எ. தங்கராஜும் கூட்டாக தயாரிக்கின்றனர்.

## கலர்ப்படத்தில் ஜெமினி

சாஸ் எண்டர்பிறைஸஸ் என்னும் புதிய திரைப்படக் கம்பெனியார் ஈஸ்ற்மென் கலர்ப்படமொன்றை தயாரிக்கிறார்கள்.

பெயரிடப்படாத இப்படத்தில் ஜெமினிகணேசன் ஜெய்சங்கர் நாகேஷ் கவுசல்யா ஆகியோர் நடிக்கிறார்கள்.

கதை வசனம் டைரக்ஷன் பொறுப்புகளை ஏ கே சுப்பிரமணியம் ஏற்க கண்ணதாசன் பாடல்களுக்கு சங்கர்—கணேஷ் இசையமைக்கின்றனர். பாஸ்கர ராவ் ஒளிப்பதிவுசெய்கிறார்

# தொழிலும் கலை… வளர்ந்துள்ள இள…

பெயருக்கேற்ற வகையில் அழகிய இளம் பெண்களைக் கொண்ட கிராமம் இளவாலை இளமை+வாலை= இளவாலை. இதன் எல்லைகளாக சேந்தன்குளம் கீரிமலை, அளவெட்டி, தெல்லிப்பழை, பண்டத்தரிப்பு, மாதகல் ஆகிய கிராமங்கள் அமைந்துள்ளன இத்தனை கிராமங்களுக் கிடைப்பட்ட பிரதேசம் தான் இளவாலை. ஆனால்இது தன்னகத்தே பல

தேசம் இதன் இயற்கையழகை இரட்டிப்பாக்குகின்றது. போயாதினம் என்றுல் சேந்தான்குளம் கடற்கரை கோல்பேஸ் கடற்கரையையே ஞாபகமூட்டும். இராமாயணத்தில் வரும் மாரீசன் மறைந்திருந்த பகுதியே மாரீசன் கூடல் எனப் பெயர்வந்தகாரணம் எனக் கூறுகின்றனர் முன்னோர். கருகம்பனையில் தேவகன்னிகைகள் வாழ்ந்ததாக பெரியோர் கூறுகின்றனர்

## எங்கள் கிராமம் - 9

குக்கிராமங்களைக் கொண்டிருக்கிறது. விளான், மாரீசன் கூடல், சித்திரமேழி, போயிட்டி, பத்தாவத்தை, கருகம்பனை, முள்ளானை என்பனவே இளவாலையின் உப கிராமங்களாகும்.

வடபகுதியின் கற்பக விருட்சங்கள் எனத்திகழும் பனஞ் சோலைகள் இளவாலையின் இயற்கை அழகை மேலும்மெருகூட்டுகின்றன. வடக்கே கடற்கரைப் பிர

ஆனைவிழுந்தான் என்னும் இடத்தில் பழங்கால அரசர்கள் இருந்ததாகவும் செய்திகள் கூறுகின்றன.

பசும்பால், தயிர், மோர் என்பவற்றிற்குப் பெயர் போன இடம் சித்திரமேழியாகும். கரையோரப் பகுதியை அடுத்து வாழும் மக்கள் கடற்றொழிலையே செய்கின்றனர். வெற்றிலைச் செய்கையில் பெயர் பெற்ற கிராமம் இளவாலையே.

பசுக்கள் அதிகமாக வளர்க்கப்பட்டன என்பதற்கு அடையாளமாக 'ஆவலை' என்ற இடமும் நெற்செய்கையில் சிறந்து விளங்கியது இளவாலைக்கிராமம் என்பதற்கு அத்தாட்சியாகக் ''கதிர் கட்டியவத்தை'' என்று பெயர்கொண்ட ஒரு இடமும் இருக்கின்றன.

பத்தாவத்தை, பொல்வத்தை, கவணவத்தை, வேர்வலை ஆகியஇடங்களின் பெயர்கள் சிங்களப் பெயர் களாகக்காணப்படுகின்றன. வட பகுதியில் திராட்சைச் செய்கையில் பெயர் பெற்று

விளங்கும் இடம் இளவாலையில் உள்ள சென். ஜேம்ஸ் பகுதியாகும். மேற்படிபகுதி சாயத் தொழிலிலும் பெயர் பெற்று விளங்கியது. இதனாலேதான் இப்பகுதி இன்றும் 'வேர்க்குத்தி கடவை' என்று அழைக்கப்படுகிறது. நவீன விஞ்ஞான முறைகள் வளர்ந்தபடியால் இத்தொழில் கைவிடப்பட்டது. இந்த இடம் திராட்சைச் செய்கையில் பிரசித்திபெற்று விளங்குவதால் திராட்சையூர் என்ற பெயர் எதிர்காலத்தில் வழங்கக்கூடும் என

எதிர்பார்க்கப்படுகிறது. முதலில்லாவருமானம் தரும் முருங்கைகளும் அதிகம்செய்கைபண்ணப் படுகின்றன இளவாலைப் பகுதியில்.

வட இலங்கையில் வேள்விக்குப் பெயர் போனஇடம் கவணவத்தையே. இங்கு குறிக்கப்பட்ட நாளில் பெருந்தொகையான ஆடுகள் சேவல்கள் பலியிடப்படுகின்றன இளவாலை வியாகுலமாதா கோவில்வட்ட பகுதியில் கத்தோலிக்க மக்களுக்குப் பெயர்போனது, கத்தோலிக்க மக்களுக்காக ஏறக்குறைய 15 ஆலயங்கள் இருக்கின்றன அவற்றின் திருநாட்கள் குறிக்கப்பட்ட நாளில் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

கலைக்கோவிலாகத் திகழும் இளவாலை கலைத்துறையில் மறைமுகமாகவே பெரும் பணியாற்றிவருகிறது. புத்தகக்கலைஞர், பத்திரிகைக் கலைஞர், வானொலிக்கலைஞர் என்று பல்வேறுதுறைகளிலும் சிறந்து விளங்கும் கலைஞர்கள் இருக்கின்றனர். பாடசாலைகளில் உபயோகிக்கப்படும் சில நூல்களின் ஆசிரியர்கள் இங்குதானிருக்கின்றனர். பெண்களுக்கான மகாவித்தியாலயமும ஆண்களுக்கு என்றியரசர் கல்லூரியும் கலைக்கூடங்களாகத்திகழுகின்றன. மெய்கண்டான் வித்தியாலயத்தில் ஏனைய கிராமங்களில் உள்ள சிறுபாடசாலைகளிலும் அதிக

## இ. பேர்னட்

மான மாணவ மாணவியர் கல்விபயிலுகின்றனர். கன்னியர்களுக்கான பெரிய தாபனம்ஒன்றும்இங்கிருக்கிறது. அநாதைப் பிள்ளைகள் பலர் பரிபாலிக்கப்படுகின்றனர் (பெண்கள்). நாடக மன்றங்களும் இங்கு அதிகம் இருக்கின்றன. வானொலிப் புகழ் திருமறைக் கலாமன்ற இயக்குநர் வண. சவரிமுத்து அடிகளார் இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கொடைவள்ளலும் சமாதான நீதிபதியுமாய் விளங்கிய திரு. சிருப்பர் கனகசபை இளவாலையிலுள்ள முள்ளானையைச் சேர்ந்தவராவர். இலங்கையில் தயாரிக்கப்பட்ட 'கடமையின் எல்லை' படத்தின் நடிகர் ஒருவரும் இளவாலையைச்சேர்ந்தவராகும்பண்டிதர் வித்துவான்களையும்பட்டதாரிகளையும் ஆசிரியர்கள் அதிகமானோரையும் கொண்ட கிராமம் இளவாலை.

இளவாலைக் கிராமத்தின் ஆட்சி நிர்வாகம் மிகவிசித்திரமானதென்றேகூறவேண்டும் கிராமம் ஒன்றுதான் பண்டத்தரிப்புக் கிராமசபைக்கும் தெல்லிப்பழைக் கிராமசபைக்கும் உரித்தானவை. ஆனால் இளவாலை கிழக்குப் பிரிவில் உள்ள சென் ஜேம்ஸ் (திராட்சையூர்) மட்டும் 3 கிராமசபைகளின் ஆட்சிக்குட்பட்டிருக்கிறது. பண்டத்தரிப்பு, தெல்லிப்பழை, அளவெட்டி ஆகிய 3 கிராமசபைகளும் நிர்வாகம் செலுத்துகின்றன.

தொழில் வள… தால் பெரும்பா… விவசாயத்தை… வாழுகின்றனர். … செய்கை, உப… டுதல் என்பன… தொழிலும் … நடைபெறுகிற… தொழிலும் … றது. வெளியூர்… பிடித்தொழில் … றனர். இங்கு… நீரிலிருந்து "பன… பனங்காயிலிருந்… இளவாலையில்உ… யப்படுகிறது.

விளான் வெ… சேந்தான்குளம் … மைல் நீளமா… (பிரதான வீதி … சாரதிகள் பல… பம் அனுபவிக்கு… ஒன்றுதான். த… யையும் பயிற்சி… இந்த வீதியில்… கின்றனர். இள… திக்கு மின்சார… பட்டு 1 வருட… யாகிவிட்டது. … குக்கிராமங்களி… நிலையங்கள் அ… பெண்கள் தொ… றனர்.

சைவர்களாக… கிறிஸ்தவர்களா… லும் தம… சமய… ந்த பக்தியுள்… குள்ளவர்கள். … ஆலயம் சைவ … வொரு கிரா… அமைக்கப்பட்டு…

டந்தோறும் … விழாக்கள் சிற… நடைபெற்று …

இளவாலைக்கி… கிராமமாயி … இயற்கையழகி… துறையிலும், … யிலும் ஏனை… டன் போட்டி… பதைப் பார்த்… ஆச்சரியப்படுவ… பதில் எவரு… படவேண்டிய … மில்லை.

விளையாட்டு… வட இலங்கை… பெற்ற பாட… கிருக்கின்றன, … தாட்டத்தில் … மகா வித்திய… பந்தாட்டத்தி… சர் கல்லூரியு… வகிக்கின்றன. … டுத்துறையில்… கல்வியிலும் … கள் சிறந்து வி… றன. இலங்கை… திகளிலும் … வும், உயர்… பதவிகளிலும் … கின்றனர், … களில் கல்… யாழ். மேற்றி… வந். டாக்டர் … னுஸ் பிள்ளை … ஆரம்பத்தில் … இளவாலைப்ப… கல்வி பயின்று… துணை ஆயர் … குப்பிள்ளை … இளவாலை எ… லூரி அதிபரா… தார். இளவா… குரவராகவும் … தார். இதே…

# மாதிரிப் படிவங்களில் புராதன கலைச் செல்வங்கள்!



பிரிட்டன் ஒரு கடலாதிக்க வல்லரசாக விருந்து தனது சாம்ராஜ்யத்தை உலகின் சகல பகுதிகளுக்கும் விஸ்தரித்த காலத்தில் பூமியில் கிடைப்பதற்கரிய புராதன கலைச் செல்வங்களை தாயகம் கொண்டு சேர்த்தது. இலங்கை உட்பட பூமியின் பல்வேறு மூலைகளிலிருந்தும் ஆதிநாகரீக சின்னங்கள் இங்கிலாந்திற்குக் கொண்டுவரப்பட்டன. இவை இன்று உலகோர் வியக்கத்தக்க புராதன யுகக் கலைக்களஞ்சியமாக லண்டனிலுள்ள நூதனசாலையை அலங்கரிக்கின்றன. விலை மதிக்கமுடியாத இந்த ஆதிநாகரீக சிற்பங்களை பிரிட்டிஷ் கைவினைஞர்கள் அப்படியே தத்ருபமாக மாதிரிப் படிவங்களாகச் செய்து

விடுகிறார்கள். புராதன வெண்கலத்திலும், கருங்கல்லிலும், பளிங்குக் கல்லிலும் உருவாக்கப்பட்ட இந்தச் சிற்பங்கள் அப்படியே நிதர்சனமான முறையில் மறுபிரதிகளாக வார்க்கப்படுகின்றன.

சொற்ப செலவில் பெறக்கூடிய இந்த மாதிரிப் படிவங்களை வாங்கி வீடுகளை அலங்கரித்துவருகிறார்கள். உலகடங்கிலுமுள்ள கலைப் பிரியர்கள். வட லண்டனிலுள்ள ஒரு சிற்பச்சாலையில் மறுபிரதி எடுக்கும் இவ்வேலை மிகமும்முரமாக நடைபெற்று வருகிறது. புராதன நாகரீக கலைச் செல்வங்களைச் சேகரித்துவைத்து ஆராயவிரும்பும் வெளிநாட்டு சர்வகலாசாலைகளும் நூதனசாலைகளும் இம்மாதிரிப் படிவங்களைப் பெறுவதில் பெரிதும் அக்கறை காட்டிவருகின்றன.

பிரபல ஆங்கில சிற்பியான டெரிக் கிலசி இந்தச் சிற்பச்சாலைக்கு பொறுப்பாயிருக்கிறார். இவரும் இவரின்கீழ் பணியாற்றும் கைவினைஞர்கள் கோஷ்டியொன்றும் அவுஸ்திரேலியாவிலுள்ள மெல்போர்ன சர்வகலாசாலைக்கென மாதிரிப் படிவங்களை அமைப்பதில் தற்சமயம் ஈடுபட்டிருக்கிறார்கள். 2 1/2 அங்குல விட்டமுள்ள புராதன பட்டயத் தகடுகள் தொடங்கி பெரிய அளவிலான செதுக்கோவியங்கள்வரை வார்ப்புடுவங்களாக இந்த சர்வகலாசாலை கோரியிருக்கிறது. பாரசீக, அஸீரிய, பாபிலோனிய, எபிரேயிய எழுத்துப் பொறிப்புகள் இவற்றில் உள்ளதால் இந்த சர்வகலாசாலை மாணவர்கள் புராதன மொழிகளைப் பயில்வதற்கு உதவியாக இருக்கும். அது மட்டுமன்றி ஆதிநாகரீக வரலாற்றையும் புராதன சமூக பழக்கவழக்கங்களையும் படித்தறிவதற்கு இந்தச் சிற்பங்கள் ஏதுவாக இருக்கும்.

தத்ரூபமான மாதிரிப் படிவங்களாக லண்டன் நூதனசாலையிலிருந்து பெறக்கூடிய சிற்பங்களினதும் புராதன நாகரிகச் சின்னங்களினதும் தொகை மிகப் பெரிது. இலங்கையில் திருகோணமலைக்கு சமீபமாகப் பெறப்பட்ட துர்க்கையின் வெண்கலச் சிலையிலிருந்து அவுஸ்திரேலிய பிராந்தியத்தைச் சேர்ந்த பாவியல் குறியீடுகள் பூமியில் தோன்றிய எண்ணற்ற ஆதிநாகரீக வடிவங்களை இங்கு காணலாம்.

# லயும்
# ளவாலை

வளத்தை எடுத்
ம்பாலானமக்கள்
தயே . நம்பி
னர். நெற்
உப உணவு பயிரி
பனவாகும். சிவல்
ஆங்காங்கே
கிறது. மீன்பிடித்
நடைபெறுகி
ரியூர்களிலும்மீன்
தில் நடத்துகின்
குள்ளோர். பத
'பனங்கட்டி'யும்
ிருந்து பனாட்டும்
ல்உற்பத்தி செய்
து.

வெளியிலிருந்து
ளம் வரை 3
மான பாதை
ரீதி செல்கிறது.
பலரும் தனியின்
ிக்கும் வீதி இது
. தம் கைவரிசை
பிற்சித்திறனையும்
பில்தான் காட்டு
இளவாலைப் பகு
சாரம் இணைக்கப்
ருடம் பூர்த்தி
து. ஆங்காங்கே
களில் நெசவு
அமைக்கப்பட்டு
தொழிலாற்றுகின்

ாகஇருந்தாலும்
களாக இருந்தா
சமயங்களில் மிகு
புள்ளவர்கள் இங்
ள். கத்தோலிக்க
சவ ஆலயம் ஒவ்
கிராமத்திலும்
பட்டுள்ளன. வடு

ம் அவற்றின் திரு
சிறந்தமுறையில்
று வருகின்றன.
லக்கிராமம் சிறு
பிருந்தாலும்
அழகிலும் தொழில்
ம், கலைவளர்ச்சி
ைய கிராமங்களு
ட்டிபோட்டு நிற்
ார்த்து அனைவரும்
படுவார்கள் என்
படுமே சந்தேகப்
டிய அவசிய

ட்டுத் துறையில்
கையில் பிரசித்தி
ாடசாலைகள் இங்
றன, வலைப்ப
தில் இளவாலை
யாலயமும் உதை
த்தில் என்றியர
ரியும் முன்னணி
றன. விளையாட்
பில்மட்டுமல்லாது
ம் இப்பாடசாலை
து விளங்குகின்
ங்கையின் பலபகு
ஆசிரியர்களாக
ர்ந்த அரசாங்க
லும் பணியாற்று
இப்பாடசாலை
ல்வி பயின்றோர்.
ற்றிராணியார்
டர் எமிலியா
ளை ஆண்டகை
தில் சில காலம்
ப்பகுதியிலிருந்தே
ன்றார். திருமலைத்
யர் வந். தியோ
ஆண்டகையும்
என்றியரசர் கல்
பராகப் பணிபுரிந்
வாலைக் கட்டளைக்
வும் பணிபுரிந்
தேவாலயில்தான்

துணை ஆயர் பதவியும் கிடைத்தது. இளவாலையையும் அதன் உபகிராமங்களையும் சேர்ந்த அதிகமானோர் குருக்களாகவும் கன்னியர்களாகவும் பல பகுதிகளில் பணிபுரிகின்றனர். வெளிநாடுகளில் நிரந்தரப்பிரசைகளாகவும் வாழ்கின்றனர் (சிங்கப்பூர்).

இன்னும் பல்வேறுதுறைகளிலும் முன்னேறிக்கொண்டிருக்கும் இளவாலையின் புகழைக் கூறிக்கொண்டேபோகலாம். ஆனால் தித்திக்கும் திராட்சை பயிரிடப்படும், சென் ஜேம்ஸ் பகுதி இளவாலையின் புகழை என்றும் எடுத்தியம்பிக் கொண்டேயிருக்கும்.

# ஆய்வுக் கூடத்தில் புதிய ஹார்மோன் உற்பத்தி

**குள்ளன் நெட்டையாகலாம்; மொடியன் தடியனாகலாம்; புற்றுநோய் வராமல் தடுக்க வழி பிறக்கலாம். இன்னும் எத்தனையோ நன்மைகள் இடைக்க வழியுண்டு.**

மனித உடம்பு உற்பத்தி செய்யும் இரசாயனப் பொருட்களைச் செயற்கை முறையில் உருவாக்க விஞ்ஞானிகள் நெடுங்காலமாக முயன்றுவருகிறார்கள். நோய்கள் இயற்கைக்கு மாறான வளர்ச்சிகள் அல்லது வளர்ச்சிக்குறைவுகள் ஆகியவை பற்றி ஆராய்ந்து அவற்றை நீக்க வழிகாண்பதே அவர்கள் நோக்கம். உடம்பு இயற்கையாக உற்பத்திசெய்யும் இவ்வகை இரசாயனப் பொருட்களில் சிலவற்றை ஏற்கனவே ஆய்வுகூடங்களில் செயற்கை முறையில் உற்பத்திசெய்கிறார்கள். ஆனால் மற்றும் பல இரசாயனப் பொருட்கள் - இவற்றில் சில மிக முக்கியமானவை. செயற்கை முறையில் உருவாக்க முடியாதனவாகவே இருக்கின்றன.

செயற்கைமுறையில் ஆகக்கூடிய உடல் இரசாயனப் பொருட்களின் வளர்ந்து வரும் பட்டியலில் அமெரிக்க விஞ்ஞானிகள் இப்போது புதிதாக ஒரு பொருளைச் சேர்த்திருக்கிறார்கள்

- வால்ட்டர் ஃபிராலிக் -

எச்.ஜி. ஏச் (Human Growth Hormone) என்னும் பெயர் பெற்றுள்ள இது. உடல் வளர்ச்சிக்குத் துணை செய்யும் 'ஹார்மோன்' ஆகும் மனிதனின் உயரம், எடை ஆகியவற்றை ஒழுங்குபடுத்தும்பொருள் இது குறிப்பிட்ட உணவுச்சத்துக்களை உடம்பு எவ்வாறு பயன்படுத்தவேண்டுமென்பதை வகுப்பதும் இந்த 'ஹார்மோன்'தான் மனிதனைப் புற்றுநோய் பற்றும்போது உடம்பில் ஏற்படும் விளைவுகளைக் கட்டுப்படுத்தும் ஆற்றலும் அதற்கு இருக்கக் கூடும்

செயற்கை முறையில் எச். ஜி. எச். உருவாக்க வழிகண்டுவிட்டபோதிலும் உடனடியாக அதற்கு நடைமுறைப் பலன் எதுவும் ஏற்பட்டுவிடவில்லை, ஆனால் வருங்காலத்தில் இது மாபெரும் நன்மைகள் விளைவிக்கப் போகிறதென்று ஆராய்ச்சி விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

எடுத்துக்காட்டாக, விரைவில் செயற்கை எச்.ஜி.எச். வேண்டிய அளவு இடைக்குமென்பது உறுதி. இதுவரையில் இது பற்றாக்குறையாக இருப்பதால் விஞ்ஞானிகளின்ஆராய்ச்சி தடைப்பட்டுள்ளது. இறந்துபோனவர்களின் உடலிலிருந்து இது சிறு அளவுகளில் கிடைக்கி

(12-ம் பக்கம் பார்க்க)

'ஈழநாடு' பரிசு பெற்ற காவியம்

# தித்திக்கும் தேன் நிலவோ!

— ச. வே. பஞ்சாட்சரம் —

## 14. ஒளிப்பெருக்கு!

நச்சிபுகழ் நாடெங்கும் நாளடைவில் பரவிவர
அச்சகங்கள் நாளிதழ்கள் அவன் வலிமை பறைசாற்ற
நாலா திசையிருந்தும் நண்ணுபல ஊரிருந்தும்
காலால் வழிநடந்தும் கட்டைவண்டி, உந்தியிலும்
மிதிவண்டி கள்தமிலும் வீடுதேடி வந்தவருள்
சதிபிறர்க்குப் புரிந்துதமைத் தாமே அழித்தவரும்
ஆண்டிகளும். மாணவரும், அரசாங்க ஊழியரும்
ஆண்டவனின் அடியவரும் யோகியரும் முதியவரும்
தீராப் பிணியினரும் தின்றுவருந் துன்பினரும்
சோரா உழவர்களும் தொழில்பலவுஞ் செய்பவரும்
இருந்தார்கள்! நச்சியது இனியமுகம் கண்டின்பம்
அருந்தாமல் அருந்தினராய் ஆனந்தம் உறுகின்றார்!
ஊர்ச்சுருட்டுக் கொட்டிலெல்லாம் உடல்வெறியை ஊக்குவிக்கும்
பேர்பெற்ற நாளிதழ்கள் பெருங்குரலில் படித்தல்போய்
பாரதமாங் காவியத்தின் பழகுதமிழ்க் கதைத் தொடராய்
சீரறிவு தழைப்பதற்குத் தினம்படிக்கப் படுகிறது!
படமடுவத் தில்தெய்வப் பாங்குரைக்கும் திரைப் படங்கள்
நடைபெற்று வருமங்கு நாள்தோறும் பெருங் கூட்டம்!
நாகையர் வேலைசெய்யும் நறுஞ்சுருட்டுக் கொட்டிலிலே
வேகமுடன் கைசுருட்ட வீட்டுநெறி சிந்திக்கும்
வீரசிங்கம் என்பவரோ ''மெய்யோநா கையா! நம்
ஊரவர் உன் பிள்ளையை நம் ஊர்ப்புறத்தில் மடங் கட்டி
யோகத்தில் அமர்த்திடவும் ஓம்பிவழி பட்டிடவும்
யாகமன்ன தானங்கள் அருமறைகள் ஓதுவித்தல்
என்பனவும் அவரருட்கீழ் இயற்றிடவும் விரும்புகிறார்
உன்விருப்பம் கேட்டென்னை உரைத்திடவுங் கூறியுள்ளார்
சம்மதமோ தடையுண்டோ சாற்றிடுக!'' எனக் கேட்டார்!
''எம்மிருவர் வயிற்றுக்கோ என்றுமினிக் குறையாது!
அப்பிள்ளை வானடைய அம்முயற்சி உதவிடுதல்
தப்பாதேல் தப்பில்லை சம்மதமே இப்பொழுதே!''
எனச்சுருக்க மாய்ப்பேசி இருந்துபினர் தொடர்ந்தவரோ
நேர்த்தியினுஞ் சிலவுண்டு நிகழ்த்திடற்குத் தென்னகத்தில்
பார்த்தவற்றை இவ்வாண்டில் பண்பாக நிறைவேற்றி
வைப்பதற்கும் பரமனருள் வழங்குவரேல் நன்றென்றார்!
ஒப்புதலைத் தந்ததற்கு உவப்படைந்தார் வீரசிங்கம்!
அடியார்கள் நெஞ்சமெனும் ஆலயங்கள் வீற்றிருக்கும்
பொடியசரும் மேனியரும் பூவமரும் நான்முகனும்
கோலமயில் வாகனனும் குஞ்சரமு கத்தவனும்
நீலநிற மேனியனும் நித்தசத்தித் தாயவளும்
ஈழமணி நாட்டடைந்த எண்ணரிய ஆலயங்கள்
ஊழலற்ற எண்ணமோடே உவந்து சென்று வணங்கிவர
பத்திவெறி உந்திவரப் பகலந்தி வேளையிலே
சுத்தமனம் சுத்தஉடல் துலங்குமவன் கிளம்பிடுவன்!
நாளுக்கொரு கோயிலினை நண்ணியிர வங்கிருந்து
வேளைக்கிருள் தேயுமுனர் வீடுவழி கொண்டிடுவன்!
தொலைவிலுள கோயிலுக்கும் சுருங்காத ஆவலுடன்
கலத்தினிலும் காலினிலும் சென்றுவழி பட்டிடுவன்.
ஆலயங்கள் அத்தனையும் நல்குமரும் அனுபவங்கள்
சீலமுயர் நெஞ்சகத்தில் தித்திக்கப் பேணுகிறான்!
எஞ்சாமல் ஆலயங்கள் எல்லாம் வணங்கியபின்
நெஞ்சுமெல நினைகிறது தென்னகத்துக் கோயில்களை!

(வளரும்)

திருவாசகத்தேன்

# "ஆராலும் காண்டற்கரியான் எமக்கெளிய பேராளன்"

— க. வை. ஆத்மநாதசர்மா —

செங்கண் நெடுமாலுஞ்
சென்றிடந்துங் காண்பரிய
பொங்கு மலர்ப்பாதம்
பூதலத்தே போந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட்
டெந்தரமும்
ஆட்கொண்டு
தெங்கு திரள்சோலைத்
தென்னன்
பெருந்துறையான்
அங்கணன் அந்தணனாய்
அறைகூவி வீடருளும்
அங்கருணை வார்கழலே
பாடுதுங்காண்
அம்மானாய்.

''அம்மனை'' என்பது மகளிர் பாடிக்கொண்டு ஆடும் விளையாடல்களுள் ஒன்று. திருவருள் வயப்பட்ட பெரியோர் காண்பன எல்லாம் இறைவனது காட்சி, கேட்பனவெல்லாம் இறைவனது திருப்புகழ்கள் செய்வன வெல்லாம் இறைபணியாம்'

மணிவாசகப் பெருமான், திருப்பெருந்துறையில் பரம்பொருளாம் இறைவனால் ஆட்கொள்ளப்பெற்றார். அப்பால், பரமாசாரியப் பிரானார் தமக்குத்தந்த அருள் வாக்கின்படி சிதம்பரத்தை நோக்கித் தயாத்திரை செய்வாராய்த் திருவண்ணாமலைக்கு வந்து வீதிவலம் வரும்போது, சிறுபெண்கள் அம்மனை விளையாட்டயர்வதைக்கண்டார். அவர்க்குப் புத்திகூறுவார்போல -''ஓ! பெண்காள்! வீண் பாடல்களைப்பாடாதிர்; எம்பிரான் பெருமைகளைக் குறித்துப் பாடுவீராக'' எனஒவ்வொரு பாடலின் இறுதியிலும் ''பாடுதுங்காண் அம்மானாய்'' எனக்கூறி இந்த இருபதுபாடல்களையும் தந்தருளியுள்ளார்.

சிவந்த கண்களையும் நெடிய திருமேனியையும் கொண்டவர் மகாவிஷ்ணு. அதனால் அவர் திருநெடுமால் எனப்படுவார். அவர் தம்மைமறந்து அகந்தை வசப்பட்டு, வராகவடிவெடுத்துப் பூமியை அகழ்ந்து சென்றும் தனக்கு முன்னே தோன்றிய பேரொளியின் அடியைக் கண்டாரல்லர். பக்தி கொண்டு காணமுயலாதவராற் காணுதற்கரிய, பரம்பொருளாம் இறைவனது அன்றலர்ந்த செந்தாமரைப் பூப்போன்றதிருவடிகள் பூமியிற் பொருந்த. திருப்பெருந்துறையிலே குருந்தமர நீழலிலே தமியேனது காட்சிக்கு அமைந்தன.

தென்னைகள்மலிந்தசோலை சூழ்ந்த திருப்பெருந்துறையிலே அழகும் நன்மையும் வாய்ந்து அருள் நிறைந்த கண்களோடு, அழகிய தண்ணளி கொண்ட உள்ளத்துடன் பரமாசாரியனாக உருவத் திருமேனிகொண்டு எழுந்தருளிய எம்மிறைவன் யோருக்கு அறைகூவுவது போலவலியவந்து தமியேனைக்கவர்ந்து விட்டான்; தரங்கெட்ட தமியேனை ஆட்கொண்டு என்பிறப்பையெல்லாம் அழித்தருளி விடுதலை தந்தான். அம்மனையாடும் ஓ! பெண்காள்! வீண் பாடல்களைச் செப்பாதிர். அழகிய கருணை பொலியும்விரக்கழல் அணிந்த எம்பிரானரது திருவடிகளையே குறித்துப் பாடியாடுவீராக. (1)

பாரார் விசும்புள்ளார்
பாதாளத் தார்புறத்தார்
ஆராலுங் காண்டற்(கு)
அரியான் எமக்கெளிய
பேராளன் தென்னன்
பெருந்துறையான்
பிச்சேற்றி
வாரா வழியருளி
வந்தென் உளம்புகுந்த
ஆரா அமுதாய்
அலைகடல்வாய்
மீன்விசிறும்
பேராசை வாரியனைப்
பாடுதுங்காண்
அம்மானாய்.

பூமியில் வசிக்கும் மக்களேயாக, வான உலகங்களில் வாழ்வாரேயாக பாதலஉலகில் வசிப்பவரேயாக. இன்னும் இவையல்லாத வேறு எவரேயாயினும் தமது சுய முயற்சியாலே காண முடியாத எம்பிரான் பெருமையுடையவர். தெற்கு நாட்டை உடைமையாகக் கொண்டவர். திருப்பெருந்துறையிலேபரமாசாரியராக எழுந்தருளியுள்ளவர், பேரன்பாகிய பித்தினை விளைவிப்பவர், இனிமேல் பிறவியிலே புகாதபடி தடுத்து ஆண்டருளியவர். தமியேனது உள்ளத்திலே குடிபுகுந்தவர், ஒருபோதும் நிறைந்து தெவிட்டாத பேரமுதாக உள்ளவர். அலைபொருந்திய சமுத்திரத்திலே ஒரு சாபங்காரணமாக சுறாமீன் வடிவு கொண்டு பலரைத் துன்புறுத்தி அலைந்த திருநந்திதேவரை அகப்படுத்துவாராய்த் தாமே வலைஞனாகத் தோன்றி வலைவீசி அச்சுறாமீனை அகப்படுத்தி அறிவுறுத்தி அருள்புரிந்த பேரன்புக் கடலாயிருப்பவர். அம்மனையாடும் மகளிர் இத்துணைப் பேரன்பு பொருந்திய சிவபிரானைக் குறித்துப் பாடுவீராக. (2)

இந்திரனும் மாலயனும்
ஏனோரும் வானோரும்
அந்தரமே நிற்கச்
சிவனவனி வந்தருளி
எந்தரமும் ஆட்கொண்டு
தோட்கொண்ட
நீற்றனாய்ச்
சிந்தனையை வந்துருக்குஞ்
சீரார் பெருந்துறையான்
பந்தம் பறியப்
பரிமேற்கொண்
டான்தந்த
அந்தமிலா ஆனந்தம்
பாடுதுங்காண்
அம்மானாய்.

தேவஅரசனாகும் இந்திரன், விட்டுணு, பிரமா, இன்னும் எத்தனையோ தகுதி வாய்ந்த வானுலக வாசிகளெல்லாம் காத்திருப்பவும் அவர்களையெல்லாம் நாடாமல் பரம்பொருளாம்இறைவன் பரமாசாரிய மூர்த்தமாய் இப்பூமியிலே எழுந்தருளிவந்து என் போன்ற தரங்கெட்டவர்களையும்ஆட் கொண்டருளுகின்றான்; தமது திருமேனி எங்கணும் திருநீற்றை விரவப்பூசி ஆன்மவருக்கங்களின் பிறவிப்பிணியை நீக்கியருளுகின்றான். நினைப்பவர் நெஞ்

(12-ம் பக்கம் பார்க்க)




சிறுவர் கவி நயம்—20

# திசைகள்

அன்புள்ள தம்பி தங்கைகளே,

சென்ற பத்தொன்பது வாரங்களாகப் பலவகைப்பட்ட பாடல்களைக் கேட்டீர்கள்; வாசித்தீர்கள். அவற்றில் பல உங்களுக்கு நேர்வழி காட்டும் பாடல்கள். சில பொதுவான பாடல்கள். பலூன்காரனும்பாட்டியும் கோழிக்குஞ்சும், வெண்சட்டியும், காய்கள் கட்டிய வெருளியும் உங்களுக்கு மன மகிழ்வை ஏற்படுத்தியிருக்கலாம். இவ்வாரம் நீங்கள் உங்கள் வகுப்பிலே படிக்கும் பூமிசாஸ்திரப்பாடம் சம்பந்தமான பாடல் ஒன்றைப் படிக்கப் போகிறீர்கள். அது அறிவு சம்பந்தமான பாடல திசைகள் சம்பந்தமான பாடல்.

## —இரசிகமணி கனக செந்திநாதன்—

திசைகளைப்பற்றி உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என்பன அவை. உங்கள் ஆசிரியர் அத்திசைகள் பற்றிச் சொல்லியும் தந்திருப்பார். ஆனல் திசைகள் பற்றிப் பாடியுள்ள கவிஞர் நல்ல சந்தத்திலே கைகளையும் அவயவங்களையும் நீட்டி மடக்கி ஆட்டி அபிநயத்தோடு செய்யக்கூடிய முறையிலே இப்பாடலைப் பாடியிருக்கிருர். திசைகள் பற்றித் தெரியாத மாணவர்கள் பாடலைப் பாடி அதன்படி செய்து அறிந்து கொள்ளலாம், தெரிந்த மாணவர் பாடி மகிழலாம். திசைகளைப்பற்றி அறிந்த நன்கு மாணவர்கள் பாடுகிருர்கள். சூரியன் காலையிலே உதிக்கும் திசையைப் பார்க்கிருர்கள்: கண்கண்ட கடவுள் அவன். ஆகவே அவனைக் கரம் கூப்பி வணங்குகிருர்கள். வணங்குதலோடு பாடலை ஆரம்பிக்கிருர்கள்.

காலையிலே சூரியனைக்
காணுவோம் கிழக்கிலே
நாம்
காணுவோம் கிழக்கிலே
கண்ட திசை
நாம் வணங்கி
நின்றுகொள்வோம்
பார்த்துமே - நாம்
நின்றுகொள்வோம்
பார்த்துமே.

நான்கு பிள்ளைகளும் பாடி முடித்தபின்னர் மற்றப் பிள்ளைகள் அவர்கள் செய்ததுபோல் கும்பிட்டுச் சேர்ந்து பாடுகிருர்கள். ஒரு முறையல்ல மூன்று முறை. பாடலும் அபிநயமும் களைகட்டுகிறது, பாடல் மேலும் தொடர்கிறது.

பாலகர் நாம்
கைகளையும்
பக்கமாக
நீட்டுவோம்- நாம்
பக்கமாக நீட்டுவோம்
பார்த்திடாத
முதுகின் பக்கம்
மேற்கெனவே
சாற்றுவோம்-நாம்
மேற்கெனவே
சாற்றுவோம்.

சூரியன் உதிக்கும் திசையைப் பார்த்துக்கொண்டு நிற்கும் பிள்ளைகள், பார்க்கும் திசையைக் கிழக்கு என்றும் பார்த்திடாத முதுகுப் பக்கத்தை மேற்கு என்றும் சுலபமாகச்சொல்லி, சந்தத்துடன்பாடி அபிநயத்துடன் முடித்துவிட்டார்கள், இனி இருப்பவை இரண்டு. அவை வடக்கு. தெற்கு என்பவை. அந்தத் திசைகளுக்கு என்ன கூறப்போகிருர்கள்? ஆஹா! அதையும் கவிஞர் சுலபமாகப் பாடிவிட்டார்.

உணவு உண்ணும்
வலது கையை
உல்லாசமாய் ஆட்டு
வோம்-நாம்
உல்லாசமாய் ஆட்டு
வோம்
உண்மையாக அத்திசை
யைத்
தெற்கெனவே சாற்று
வோம்-நாம்
தெற்கெனவே சாற்று
வோம்.

அபிநயத்தோடு ஆட்டிய கை, உணவுஉண்ணும் வலது கை. தெற்கு என்றவர் ஆட்டாமல், நீட்டியுள்ள கைப் பக்கம் வடக்கு என்று அறிவுறுத்துகிருர் ஆசிரியர். திசைகள்பற்றிய இந்தப் பாடலை முடிக்கும்போது அழகாக, பிள்ளைகளுக்கு ஏற்றவிதமாக முடித்திருக்கிருர் கவிஞர்.

வடக்குக் கிழக்குத் தெற்கு
மேற்கு
வரிசையாகச் சொல்
லுவோம்-நாம்
வரிசையாகச் சொல்
லுவோம்
வந்தனங்கள் நாமளித்துப்
பின்திரும்பிச் செல்
லுவோம்-நாம்
பின்திரும்பிச் செல்லு
வோம்.

அறிவும், சந்தமும், அபிநயமும் ஒன்றுசேர இப்பாடலை இயற்றியவர் 'இதம்' என்ற புனைபெயரில் எழுதும் குழந்தைக் கவிஞர் வ. இளையதம்பி. குடும்பசிட்டியைச் சேர்ந்தவர் வெகு அடக்கமான இவர் கவிஞர் என்று தம்மைக் கூறிக் கொள்ளாமல் ஆரவாரமில்லாமல் 1950 ம் ஆண்டு தொடக்கம் எழுதி வருகிருர் மழலைவிருந்து என்ற அவரது நூல் வெளிவரத் தயாராகிறது.

பாடல் முழுவதையும் ஒருசேரப் பாடுங்கள்:-

காலையிலே சூரியனைக்
காணுவோம் கிழக்
கிலே-நாம்
காணுவோம் கிழக்கிலே
கண்டதிசை நாம் வணங்கி
நின்றுகொள்வோம்
பார்த்துமே - நாம்
நின்று கொள்வோம்
பார்த்துமே
பாலகர் நாம் கைகளையும்
பக்கமாக நீட்டு
வோம்-நாம்
பக்கமாக நீட்டு வோம்.
பார்த்திடாத முதுகின்
பக்கம்
தெற்கெனவே சாற்று
வோம்- நாம்
தெற்கெனவே
சாற்றுவோம்.
உணவு உண்ணும் வலது
கையை
உல்லாசமாய் ஆட்டு
வோம்-நாம்
உல்லாசமாய் ஆட்டு
வோம்
உண்மையாக அத்திசையை
தெற்கெனவே சாற்று
வோம்- நாம்
தெற்கெனவே
சாற்றுவோம்.
ஆட்டாமல் நீட்டியுள்ள
கை யெதென்று
பார்த்துமே-நாம்
கை யெதென்று
பார்த்துமே
பாட்டுடனே பாட்டாகப்
பாடுவோம் வடக்கிதே-
நாம்
பாடுவோம் வடக்கிதே.
வடக்குக் கிழக்குத் தெற்கு
மேற்கு
வரிசையாகச் சொல்
லுவோம்-நாம்
வரிசையாகச் சொல்
லுவோம்
வந்தனங்கள் நாமளித்துப்
பின்திரும்பிச் செல்லு
வோம் நாம்
பின்திரும்பிச் செல்
லுவோம்.

இன்றே வருக! நன்றே கொள்க!!
தங்க, வைர நகைகள்
வியாபாரத்தில்
முன்னணியில் நிற்கும் சிறந்த
நாணயமுள்ள ஸ்தாபனம்
ராணி
ஆபரண மாளிகை
224, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
மனேஜர்: A. KARAPUTUGALA.

## குருவிகள்

-க. நவசோதி-

சிறிய எங்கள் உரு கண்டு
ஆகா பாப்பா அழலாமோ!
சிறிய கையால் எம்மைப் பிடிக்க
ஆரு முயற்சி ஆகாதே!

மலர்ந்த மலரும் விட்டோமே
பழுத்த பழமும் உண்டோமே

சரிந்த வேலியில் ஏறுவதேன் - ஐயோ
விழுந்து கதறும் பாலகரே!

சொல்லால் பெரியோர் போற்றுவரே
கல்லால் நமக்கு எறியாதீர்!
எங்கள் பாட்டைக் கேட்டிடுவீர்
கண்கள் வெட்டா துறங்கிடுவீர்!

(குருல்லோ என்ற சிங்களக் குழந்தைப் பாடலின் தழுவல்)

## நிலா

சோ. சுப்பிரமணியம்

வட்ட வட்ட வண்ண நிலா
வானிற் தோன்றும் வெள்ளி நிலா
என்னைப்போலப் பாலர் பலர்
உன்னை வேண்டி அழைக்கையில்
அன்பை ஏனோ மறுக்கின்ருய்
அழகைத் தானே விரிக்கின்ருய்
மேகம் உன்னை மறப்பதேன்
காகம் என்னைப் பிடிப்பதேன்
அன்னை உன்னைக் காட்டியே
அமுதை மிகவாய் ஊட்டவே
சின்னக் கதைகள் பலசொல்லி
சிரிக்க வைத்தே மகிழ்விப்பாள்
வட்ட நிலாவே என்னை நீ
வந்தே அணைய மாட்டாயோ
செட்டை எனக் குண்டானல்
சிட்டாய்ப் பறந்தே நான்வருவேன்

## :-: விடிவு வரும் :-:

வித்தியாரத்தினம் ஏ. எம். அபூபக்கர்

இறைவா உன்னை விழிகளினல்
இனிது காணும் குறிகொண்டு
திறந்த உலகின் திசையெங்கும்
தேடித் தேடித் திரிகின்றேன்;
சிறந்து வாழும் செல்வர்கள்
சிரித்தே என்னை நகைக்கின்ருர்;
இறக்கு முன்னர் உனைக்காண்பேன்
எல்லாம் இனிது சொல்வேனே!

உற்ருர் உறவு யாதுமில்லை
உடைமை எதுவும் எனக்கில்லை
பற்றுப் பாசம் பொருள்இன்னும்
பகைமை மகிழ்ச்சி அனைத்தையுமே
முற்றத் துறந்து வெகுதொலைவில்
வீசி எறிந்தேன்; உனைக்காணும்
வற்ரு ஆசையில் தொடர்கின்றேன்;
வண்ணம் காண விழைகின்றேன்!

நீண்டு வளர்ந்த சாலைகளில்
நெரிசல் மிகுந்த பாதைகளில்
கூண்டு போன்ற முடக்குகளில்
கூனிக் குறுகி நடக்கின்றேன்;
தூண்டும் உள்ளம் வெறிகொள்ள
தொடர்ந்து தொடர்ந்து அலைகின்றேன்;
மாண்ட பொழுதின் நினைவின்றி
மருட்சி நீங்கித் திரிகின்றேன்!

என்ருே ஒருநாள் புலர்பொழுதை
இருகண் குளிரக் கண்டிடுவேன்
என்னும் நம்பிக் கையுடனே
ஏக்கம் சிறிதும் இல்லாமல்
உன்தன் உலகில் இருள்வெளியில்
உருண்டு புரண்டு திரிகின்றேன்;
இன்பச் சுடராம் விடிவினையான்
எண்ணி என்னை இயக்குகிறேன்!

அன்றென் குழந்தைப் பருவத்தில்
அப்பா வருவார்; பழங்கொணர்வார்;
தின்று வைக்கத் தீன்கொணர்வார்
தெவிட்டா மிட்டாய் பலகொணர்வார்
என்று நினைத்தே இருந்ததுபோல்
எனக்கோர் தூது தரும்விடிவை
இன்று நினைத்தே ஏங்குகிறேன்;
இருகண் பதித்துக் காக்கின்றேன்!

எதிர்பார்த் திருக்கும் விடிவினிலே
எனக்கோர் புதிய செய்திவரும்
புதிய உளமும் புத்துடலும்
புளகம் நிறைந்த புதுவாழ்வும்
புதிர்போல் என்னை வந்தடையும்;
பூரிப் பினையும் தந்துதவும்;
எதிரே நிற்கும் அதுவென்னை
எப்போ தடையும்? யானறியே

# பாரதி கண்ட பெண்மை காண..

வேத காலத்தில் பெண்மை வாழ்ந்தது- வாழ்விக்கப்பட்டது - போற்றப் பட்டது. பெரும் பெரும் யாகங்களில்- பூஜைகளில் அவளின் ஆலோசனைகள் முக்கிய இடம் பெற்றன. புனித கைங்கரியங்களில் அவளின் பங்கு முதலிடம் பெற்றது. அத்தகையபெண்மைக்கு பெண்மையின் சக்திக்கு இடையில் ஓர் அடைக்கும்தாழ் ஏற்படுத்தப்பட்டது. நாட்டைக் காக்கப் புறப்பட்ட ஜான்ஸிராணி, அன்னியனின் ஊடுருவலை எதிர்த்து நின்ற ராணி லட்சுமிபாய் இவர்கள் வழிவந்த பெண்மை அடக்கப்பட்டது. அவள் சக்திகள் வீட்டுக்குள்ளும் அடுக்களைக்குளளும் விரயமாகின. சுதந்திரங்கள் அத்தனையும் இழந்து. படிப்பறிவோ உலகறிவோ அற்ற ஜடமாய். குடத்துள் இட்ட விளக்காய் இந்த இடைக் காலத்துள் பெண்மை அழிந்து வந்தது.

## "நகுலாஸ்"

இன்று பழையபடி தரணியிலே பெண்ணானவள் தலையெடுக்க ஆரம்பித்துவிட்டாள. அவள் கூண்டுக்கு வெளியேவந்ததுமட்டுமல்ல உலகத்தை உருவாக்குவதிலும் தனக்கெனச் சரி பங்கு எடுத்துக் கொண்டிருக்கிறுள். இன்றைய ஆணினம் பரந்த மனங்கொண்டு பெண்மைக்கு மதிப்பளித்து இடையிலேற்பட்ட இழிவுக்கு ஈடு செய்வது போற்றப்படத்தக்கதன்றோ!

ஜெர்மன் போன்ற நாடுகளில் பெண்கள் பல தொழில்களை முக்கிய பொறுப்பேற்று திறமையுடன் நடத்தி வெற்றி பெற்றுவருகிறுர்கள். பிரதமராகவும், அரசியாகவும், இன்னும் இன்னேரன்ன பல பொறுப்புள்ள பதவிகளை ஏற்று நாடு போற்ற வாழ்கிறுர்கள் நமது பெண்கள்.

இவ்வாறு படிப்பிலாயினும் சரி, தொழில் துறைகளிலாயினும் சரி, நாட்டைக்காக்கும்துறைகளிலோ அன்றி சமுதாயப் பணியிலாயினும் சரி அவள் விரைவுடன் ஆணுக்குச் சரிசமமாக வளர்ச்சி பெற்றுவிட்ட பின்னும் அவள் பின் தங்கிய நிலையிலேயே இருக்கிறுள்.

அன்று ஆண் ஆளப்பிறந்தவன். ஆண் தான் வாழவைக்கப் பிறந்தவன், அவனுல்தான் உலகை வாழவைக்கவோ கட்டியாளவோ முடியும் என்ற நிலைபோய், ஆணைனமே பெண்மையின் சக்தியை உணர்ந்து அவளை சுதந்திரமாக வாழவிட முன் வந்துவிட்ட பின்னும் அவள் பின்தங்கிய நிலையிலேயே இருக்கிறுள்.

காந்தி கண்ட பெண் சுதந்திரம், பாரதி கண்ட பெண்மை இன்னும் பூரணத்துவம பெருமலே இருக்கின்றது.

ஆம். பெண்மை வாழவேண்டுமென்று நினைக்கின்ற- பாடுபடுகின்ற இந்த இருபதாம் நூற்றுண்டிலும் பெண்மையை இழிவுபடுத்தும் அவள் சக்தியைப் பழித்துரைக்கும் உள்ளங்களும் இருக்கததான் செய்கின்றன. பாரதப் பிரதமர் இந்திராகாந்தி கைக்கொண்ட பல நற்காரியங்கள் பயன்படாமல் வெற்றிப்பாதையிலிருந்து விழுந்துவிட்டதற்கு இன்று அவரின் நிலை ஆட்டம் காணும் நிலையிலுள்ளதற்கு அந்த உள்ளங்கள் காரணமென்று கூறத்தான் வேண்டியிருக்கிறது. பலமும் அறிவும் நிறைந்த ஆணினம் ஒத்துழைத்தால் பெண்ணானவள் பல படி முன்னேறி எத்துணை காரியங்களைச் சாதிக்க முடியும்.

இறைவனை சிவனே பெண்மையைத் தனதொரு பாகமாக்கி அவள் சக்தியிலே உலகை இயங்கவிட்டிருக்கும்போது, ஆணினம் அதனைப் பூரணமாக உணர்ந்து அவள் அறிவுக்கும், திறமைக்கும் ஏற்ற இடத்தைக் கொடுத்து ஏற்றி வைக்க முன்வந்தால் உலகத்தில் எத்தனை காரியங்களைச் சாதிக்க முடியும். உலகமே இந்நல்ல பண்பும் பலமும் நிறைந்த கூட்டுறவால் பயன்பெறுமல்லவா?

## சிரிக்கலாம்

### புதியவழி

பாட்டி:
ஏண்டாம்பா மணி. மிளகாயைத்தூளாக்கிக் குடுக்கப்போறுங்களாமே. செங்கட்டியையும் ஓட்டையும் சேர்த்து சனங்களைக் கொல்லவோ?

மணி: ஓம்பாட்டி குடும்பக் கட்டுப்பாட்டுப் பிரசாரம் செய்ய முடியாததை இந்தவழி செய்யும் எண்டு தெரிஞ்சுபோச்சு.


0 0 0

### ஊருக்கு உபதேசம்

சேகர்! சீதன ஒழிப்புப் பிரசாரம் செய்கிறுயே. உன் மனைவி எவ்வளவு கொண்டுவந்தாள்?

செல்லம்: ஹீ ... ஹி... பத்தாயிரம் காசும். ஐயாயிரம் நகையும். ஒரு வீடும் வளவும்.

## புரட்சித் திருமணம்



தலைநகரில் நடைபெற்ற ஒரு புரட்சிகரமான திருமணம். கொழும்பு கதிர்காம யாத்திரிகர் தொண்டர்சபை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற இத்திருமணத்தில் சுதேசியத் துணிகளுக்கு முக்கியத்துவமளிக்கும் பொருட்டு மணமகள் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட கூறைச்சேலையையே அணிந்திருந்தார். மணமகனும் மற்றும் சுற்றத்தவரும் நண்பர்களும் வடமாகாணத்தில் உற்பத்தி செய்யப்பட்ட ஆடைகளையே அணிந்து காணப்பட்டனர்.


மணமகன் - லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர் வெளியீட்டாளரும் சமாதான நீதவானுமாகிய திரு. சு. த. சின்னத்துரையின் புதல்வன் செல்வன் அருளானந்தன். மணமகள் செனட்டரும் சமாதான நீதவானுமாகிய திரு. த. நீதிராசாவின் புதல்வி செல்வி அமிர்தாம்பிகை.

## வீட்டுக்குறிப்பு

பித்தளைப் பாத்திரங்களைத் துலக்கியதும் அவை கறுத்துக் களிம்பேருது பளபளவென்றிருக்க எரிந்த கடதாசியின் சாம்பரை நன்கு தேய்த்து துண்டினுல் நன்ருகத் துடைத்து விடவும்.

0 0 0

புகையேறிய லாந்தர் சிம்னியை பளபளவென்று சுத்தமாக்க நீருக்கிய உமியைத் தேய்த்து நன்ருகத் துடைத்துவிடலாம். சிம்னி பளபளவென்று துலங்கும்.



லிதுனியாவிலுள்ள பிரமாண்டமானதொரு ஜவுளி உற்பத்தி மின்ஆலையின் ஒரு பகுதியை இப்படம் சித்திரிக்கிறது. இவ்வாலையின் முக்கிய தொழிலாளரில் ஒருவரான திருமதி புரோன்டாஸ்கயிற் என்பவர் இயந்திரங்கள் சரியான நிலையில் உள்ளனவா எனக் கவனிக்கிருர்.

## அடை

தேவையான பொருட்கள்:—

| | |
|---|---|
| புழுங்கலரிசி 1/4 | கொத்து |
| பச்சையரிசி 1/4 | ,, |
| உழுத்தம்பருப்பு 1/4 | ,, |
| துவரம்பருப்பு 1/4 | ,, |
| கடலைப்பருப்பு 1/4 | ,, |

அளவான உப்பு
செத்தல்மிளகாய் 15
பெருங்காயம் சிறிதளவு
நல்லெண்ணெய் சிறிதளவு

செய்கைமுறை:- அரிசி பருப்பு, செத்தல்மிளகாய் இவற்றை ஒன்ருகப்போட்டுத் தண்ணீரில் 1 மணிநேரம் ஊறவிடவும். ஊறியபின் ஆட்டுக்கல்லில் இட்டு அருவல் நொருவலாக அரைக்கவும். பின் அடுப்பில் தோசைக்கல்லை வைத்து நல்லெண்ணெயைக் கல்லின்மேல் தடவி அரைத்துவைத்துள்ள கலவையை சிறு உருண்டைகளாகத் தட்டிக் கல்லில்போட்டு வேகவைத்து எடுத்துக் கறியுடன் சேர்த்துச் சாப்பிடலாம். மிகவும் சுவையாக இருக்கும்.

குடும்பச் சுடர்



தயாரிப்பு: குணம்

# பஞ்சாமிர்தம்

## எது பெரிது?

ரயில் தண்டவாளத்தின்மீது ஒரு சின்னஞ்சிறு புழு ஊர்ந்து செல்கிறது. சற்று தூரத்தில் ஒரு பிரமாண்டமான ரயில் என்ஜின் முழங்கிக்கொண்டு வருகிறது. அதன் காற்றுப்பட்டாலே புழுவுக்கு உயிர் போய்விடும். கடைசி கணநேரத்தில் புழு தண்டவாளத்திலிருந்து நெளிந்து கீழே இறங்கி உயிர் தப்பிவிடுகிறது. ஒன்று உயிருள்ள பிராணி. மற்றது உயிரற்ற வெறும் பிண்டம். உருவத்திலும் எடையிலும் அற்ப புழுவைக் காட்டிலும் ராட்சஸ என்ஜின் லட்சம் மடங்கு பெரியது. ஆனால் புழுவில் ஜீவனிருக்கிறது என்ஜினுக்கு ஜீவனில்லை. புழுவின் ஆத்மா பரமாத்மாவுடன் தொடர்புடையது

—சுவாமி விவேகானந்தர்

## அவர் எழுதிய தமிழ்

நாம் மிகவும் அலட்சியம் செய்துவிடத் தகுந்த அநேக சிறு நிகழ்ச்சிகள் சிற்சில சமயங்களில் ஆச்சரியப் படும்படியான காரியங்களைச் சாதித்து விடுகின்றன. அந்த வெகு சிறிய நிகழ்ச்சி திடீரென்று உண்டாக்குகின்ற உணர்ச்சியினால் தீராத விவகாரங்கள் தீர்ந்து விடுகின்றன. நடக்காத காரியம் நடந்து விடுகிறது. மனிதனுக்குள் மறைந்திருந்து கொண்டு சாதாரண சமயங்களில் செயலற்றுக் கிடக்கின்ற ஒரு நம்பிக்கையை அந்தச்சிறு நிகழ்ச்சி கிண்டிவிடுகிறது. அதனால் குருட்டு நம்பிக்கை என்று மறக்கிறவர்கள்கூட மறந்தாற்போல் அந்தத் திடீர் உணர்ச்சிக்கு ஆளாகி விடுகிறார்கள். தான் என்ற அகந்தைகூடத் தனக்குப் புலப்படாத ஒரு சக்திக்குத் தலைவணங்கி விடுகின்றது:

நாமக்கல் வே. இராமலிங்கம்பிள்ளை

## இருப்பதி யாத்திரையா?

திருப்பதி வெங்கடாசலபதியை தரிசிக்கப் போகிறவர்கள் பின்வரும் விதிகளை அனுஷ்டிக்க வேண்டுமென்று எழுதாத சட்டம் இருக்கிறது. (1) தலையில் மலர் அணியக்கூடாது. (2) கட்டிலின்மீது படுக்கக்கூடாது. (3) பாதரட்சை அணிந்து நடக்கக்கூடாது. (4) மச்சம் மாமிசம் உண்ணலாகாது. (5) இழிமொழிகளைப் பேசக்கூடாது. (6) மதுபானம் பருகலாகாது (7) அரிசி குத்தலாகாது. (8) காரமான பதார்த்தங்களை வறுக்கக்கூடாது. (9) பூமி அதிரும்படி நடக்கக்கூடாது. (10) பெருங்கூச்சலிடக்கூடாது. (11) பொய் பேசக்கூடாது. (12) ஸ்வாமிக்கு தளிகை நிவேதனம் ஆவதற்குமுன் எவரும் உண்ணப்படாது. (13) ஸ்வாமிகள் சமர்ப்பிக்கப்படாத எந்தப் பொருளையும் சாப்பிடக்கூடாது. (14) சன்னதியில் அர்த்தசாமப்பூஜை முடியுமுன்பு எவரும் தூங்கிவிடக்கூடாது.

## வைரமான பாதுகாப்பு

உலகத்தில் மிகப்பெரிய வைரக்கல் 1905-ம் ஆண்டு தென்னாபிரிக்காவிலுள்ள ஒரு வைரச் சுரங்கத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. அதன்நிறை 1.6 ருத்தல். 3,106 கறட். ட்ரான்ஸ்வால் அரசாங்கம் அதை விலைக்கு வாங்கி இங்கிலாந்து மன்னர் எட்வேர்ட்டுக்கு பரிசாக அளித்தது. அதை எப்படிக் கொண்டுசேர்ப்பது என்பதுதான் பிரச்னை. திருடர், கொள்ளைக்காரர் பயம் அதிகம். பத்திரிகைகள் உலகெலாம் இச் செய்தியை அறிவித்துவிட்டன, துப்பாக்கி கத்தி முதலிய ஆயுதங்களுடன் நாலு இராணுவ வீரர் ஒரு தோல்பையுடன் சுரங்கத்திலிருந்து புறப்பட்டு 30மைல் வனாந்திரத்தைப் பக்கத்துணையுடன் கடந்துசென்று ரயிலேறி கேப்ரவுனுக்குப் போனார்கள். அங்கே கப்பலில் இரும்புப் பெட்டிக்குள் தோற்பையை வைத்து இங்கிலாந்து போகுமளவும் இரண்டுபேர் மாறி மாறிஇரவுபகலாகக் காவல் புரிந்தனர். சதாம்ப்டன் துறைமுகத்திலிருந்து லண்டனுக்கு விசேஷ ரயில் வண்டியில் பலத்த பாதுகாப்புடன் அந்தத் தோற்பை அனுப்பப்பட்டது. ரயில்வே நிலையத்திலிருந்து பொலிசாரும் சி. ஐ. டி.க்களும் புடைசூழ அது வங்கிக்குக் கொண்டுசெல்லப்பட்டது.

தோற்பையை வங்கி மனேஜர் திறந்துபார்த்தபோது அதற்குள் வெறும் கரித்துண்டுதான் இருந்தது!

'குல்லினன்' என்ற பெயருள்ள அந்த வைரக்கல் உண்மையில் ஒருவித சந்தடியுமில்லாமல் சாதாரண பார்சல் தபால்மூலம் ஏற்கனவே வங்கிக்கு வந்து சேர்ந்து விட்டது!

## ஜூரியின் சஜலம்

ஒருவன் ஒரு பெண்ணைத் தகாத நடத்தைக்கு வரும்படி அழைத்தான் என்பது வழக்கு. அவன் பிரயோகித்த சரியான வார்த்தைகள் என்னவென்று நியாயவாதி கேட்டதற்கு அப்பெண் கூச்சப்பட்டு மறுமொழி சொல்ல மறுத்துவிட்டாள். அந்த வார்த்தைகளை ஒரு கடதாசித்துண்டில் எழுதித் தரும்படி நீதிபதி உத்தரவிட பெண் சம்மதித்து எழுதிக்கொடுத்தாள், நீதிபதி அதை வாசித்துவிட்டு நியாயவாதிகளிடம் கொடுத்தார் அவர்களும் அத்துண்டை வாசித்துவிட்டு ஜூரிமாரிடம் கொடுத்தார்கள். ஒவ்வொருவராக வாசித்துவிட்டு அடுத்திருந்தவருக்குத் துண்டைக் கொடுத்தார்கள், ஒரு ஜூரிகனவான் அரைத்தூக்கத்திலிருந்தபடியால் அவருக்கு நடந்ததொன்றும் தெரியாது. அவருக்கு முன்னாலிருந்த அழகான பெண்ஜூரி அத்துண்டை வாசித்துவிட்டு அவரைத் தட்டி எழுப்பி துண்டை நீட்டினாள். அவர் அதைப்பார்த்து வாயெல்லாம் பல்லாக இளித்துக்கொண்டு தலையை அசைத்தவண்ணம் துண்டைப் பொக்கட்டுக்குள் போட்டுக்கொண்டார்.

— தயாரிப்பு: வழிப்போக்கன்




**ஆதி சங்கரர் அருளிய சிவானந்தலகரி**

ஆசிரியர்:
பண்டிதர் ச. சுப்பிரமணியம்
வெளியீட்டோர்:
அமர பாரதி பரீக்ஷா ஸமிதியின் இலங்கைக் கிளை
(கோப்பாய்)

விலை:
சாதாரண பதிப்பு ரூ. 2-50
உயர்பதிப்பு ரூ. 3-25

பாரமார்த்திகம் அல்லது தத்துவ நோக்கில் சீவான்மாவும் பரமான்மாவும் ஒன்று என்று வாதிக்கும் சங்கரர், வியாவகாரிகம் அல்லது நடைமுறையில் சீவான்மாவிற்கும் கடவுளுக்கும் உள்ள உயர்வு தாழ்வைப்பற்றி எந்தத் தத்துவஞானியும்சொல்கிற அளவிற்கு அப்படியே ஏற்றுக்கொண்டவர். ஒப்புக்காக இந்தப் பேதத்தை ஏற்றுக்கொள்ளாமல் உளமார ஏற்றுக்கொண்டு அவ்வழியே நடந்து நூற்றுக்கணக்கான பத்திரஸம் ததும்பும் பாடல்களை இதய தாபத்துடன் கொட்டித் தீர்த்தவர் சங்கரர்.

இத்தகைய பாடல்களைப் படிக்கும்போது சங்கரருடைய அத்துவிதத் தத்துவத்தையும் சிவபரமான்மா ஒருமையையும் நாங்கள் நினைத்துக்கூடப் பார்க்கமுடியாது. சங்கரருடைய பக்திப் பாக்களில் முதலாம் வைத்து எண்ணத் தகுந்த ஒன்று அவர் இயற்றிய சிவானந்தலகரி. பல்வகை யாப்புகளில், உள்ளத்தை உருகவைக்கும் சொற்கோவைகளையும் கருத்தாழத்தையும் கொண்டு விளங்கும் நூறு பாடல்களின் தொகுதி இது. இதிலுள்ள ஒவ்வொரு பாடலும் சுவை சொட்டும் பக்தி மணி. இப்படிப்பட்ட தேர்ந்தெடுத்த உயர்சாதி மணிகளைக் கொண்ட விலைமதிப்பற்ற நவரத்தின ஹாரமே சிவானந்தலகரி.

சிவானந்தலகரியைமொழிபெயர்ப்பது என்பது கடினமான காரியம். ஸம்ஸ்கிருதத்தில் பரிச்சயமும், தமிழில் ஆழ்ந்த அறிவுமுள்ள உபய பண்டிதமணிதான் இப்படி ஒரு மொழிபெயர்ப்பைப்பற்றி நினைக்கமுடியும். இருமொழிகளிலும் தேர்ச்சி பெற்ற பண்டிதர் ச. சுப்பிரமணியம் அவர்கள் சிவானந்தலகரியை தமிழ்ப் பாக்களாக மொழிபெயர்த்து அளித்துள்ளார்கள். ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசங்கராச்சாரிய சுவாமிகளின் ஸ்ரீமுகத்துடனும் வியாகரண சிரோமணி பிரமஸ்ரீ தி. கி. சீதாராமசாஸ்திரிகள் அவர்களது முகவுரையுடனும், பண்டிதர்பிரமஸ்ரீ ச. ப. சர்மா அவர்களது மதிப்புரையுடனும், அமரபாரதி பரீக்ஷாஸமிதியின் இலங்கைக்கிளையின் வெளியீடாக வெளிவந்துள்ளது இந்நூல். சைவசித்தாந்த கலைச்செல்வர் திரு: க. வச்சிரவேல் முதலியார் அவர்களும் ஸ்ரீமதி இரத்தின நவரத்தினம் அவர்களும் அணிந்துரை வழங்கியுள்ளனர்.

இவ்வாறான நூல்களை மொழிபெயர்க்கும்பொழுது மூலத்தின்பொருளும் அதன் ஒழுங்குமுறையும் மாறுபடாமலும், மூலத்திலுள்ள உவமைபோன்ற அணிகள் பொருந்துமாறு தமிழில் இடம்பெறுமாறும் முடிந்தால் மூலத்திலுள்ள ஓசைநயம் அப்படியே இடம்பெறுமாறும். பார்த்துக் கொள்ளவேண்டியது அவசியம். இவ்விஷயத்தில் மொழிபெயர்ப்பாளர்போற்றப்படுமளவிற்குஇவற்றைப் பாதுகாத்துள்ளார்: மூலத்தில் உள்ளதற்கு மேலதிகமாகச் சில புதிய கருத்துகள் மூலத்திற்கு ஒத்தவகையில் தமிழ்நூல் மரபையொட்டிச் சேர்க்கப்படுவதும், யாப்பமைதியில் ஒரு சில மாறுபாடு செய்யவேண்டியதும் இத்தகைய மொழிபெயர்ப்புகளில் தவிர்க்கமுடியாது. ஏனெனில்மொழிபெயர்ப்பு என்பது தரம் வாய்ந்த கடினமான கலை. இதைக் கையாள்வதில் திறமையும் நளினமும் வேண்டும்.

மொழிபெயர்ப்பாளர் இவற்றைத் திறம்படக் கையாண்டிருக்கிறார். மொழிபெயர்ப்பில் பல இடங்களில் சைவத் திருமுறைகளில் அடிக்கடி பயிலுஞ் செஞ்சொற்களையும் சொற்றொடர்களையும் பாவினங்களையும் மொழிபெயர்ப்பாளர் கையாள்வதால் பழந்தமிழ்ப் பாடல்களைப் படிப்பதுபோன்ற பிரமை சில

(14ம் பக்கம் பார்க்க)

## திருவாசகத்தேன்

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

சத்தை நெக்குநெக்குஉருகச் செய்யும் சிறப்பு வாய்ந்த திருப்பெருந்துறையிலே ஆன்மநாயகனெழுந்தருளியுள்ளான் தரிசிக்கும் பேறு பெற்றவர்களது பாசத்தளைகளை அறுத்தருளும்வண்ணம் வேதமாகிற வெண்கொற்றக்குதிரையில் ஆரோகணித்துப் பரிமேலழகனாக அருள்புரிகின்றான். அம்மனை ஆடும் பெண்காள்! எல்லையில்லாத அப்பிரானாரது இன்பப்பெருக்கைக் குறித்துப் பாடுவீராக. (3)

(தொடரும்)

# ஆய்வு கூடத்தில்...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

றது. இதையே அவர்கள் நம்பியிருக்கவேண்டியிருந்தது.

மனிதர்களில் சிலர் குள்ளமாக இருக்கிறார்கள், சிலர் நெட்டையாக இருக்கிறார்கள் இதற்குக் காரணங்கள் என்ன? எவ்வாறு இதைத் தவிர்க்கமுடியும் என்பது பற்றி ஆராய்ச்சி இனி விரைவாக்கப்படலாம். மனிதர்களும் மற்ற உயிர்களும் ஓர் அளவுவரை வளர்ந்து பின்னர் வளராமலிருப்பதேன்? சிலர் ஏன் தடித்துவிடுகிறார்கள், சிலர் ஏன் ஒடிசலாகவே இருக்கிறார்கள் என்றும் விஞ்ஞானிகள் கண்டறியக்கூடும்.

ஸான்ஃபிரான்சிஸ்கோ நகரிலுள்ளகலிஃபோர்ணியா பல்கலைக்கழக ஹார்மோன் ஆய்வுக்கூடத்தில் செயற்கை முறையில் எச். ஜி. எச். உருவாக்கும் வழி கண்டு பிடிக்கப்பட்டது. ஆய்வுக்கூடத்தின் நெறியாளர் டாக்டர் சோ ஹா வே லீ. டாக்டர் டி. ரமாஸ் ஐரோ ஆகிய இருவரும் கண்டுபிடித்தார்கள். டாக்டர் லீயும் அவரது துணைவர்களும் 1956-ல் ஆய்வுக்கூடத்தில் இந்த ஹார்மோனைத் தனியாகப் பிரித்துப் பார்த்தார்கள். 1966-ல் அதிலுள்ள இரசாயன அமைப்பைக் கண்டுபிடித்தார்கள் ஆனால் ஆய்வுகூடத்தில் செயற்கை முறையில் இதை உருவாக்க அவர்களுக்கு மேலும் நான்கு ஆண்டுகள் பிடித்தது.

அடித்தலைச் சுரப்பி உற்பத்தி செய்யும் 16 வகை ஹார்மோன்களில் ஒன்று: எச். ஜி. எச். மூளையின் அடியில் பட்டாணி வடிவத்திலுள்ள ஓர் உறுப்பு, அடித்தலைச் சுரப்பி (பிச்சுட்டரி கிளாண்ட்) உடம்பு உற்பத்தி செய்யும் இரசாயனப் பொருட்கள், ஹார்மோன்கள்; பெரும்பாலும் இவற்றைச்சுரப்பிகளே உற்பத்தி செய்கின்றன. உடம்பின் அளவையும் அலுவல்களையும் ஒழுங்கு படுத்துபவை இந்தஹார்மோன்கள்தாம்

### பத்துக்கு எட்டு

டாக்டர் லீயும் அவரது துணைவர்களும் பல ஆண்டுகளாக உழைத்து, எட்டு வகை ஹார்மோன்களைப் பிரித்துப் பகுத்துள்ளனர், ஏழின் இரசாயன அமைப்பைக் கண்டறிந்துள்ளனர். ஆனால் இவற்றில் இரண்டைத்தான் இதுவரையில் செயற்கை முறையில் ஆக்க முடிந்துள்ளது.

முடக்குவாதம், சில 'அலர்ஜி' நிலைகள், வளர்சிதை மாற்ற நோய்கள், புற்றுநோய் ஆகியவற்றிக் சம்பந்தப்பட்ட சில இயக்கங்களை அடித்தலைச்சுரப்பிகள் ஒழுங்கு படுத்தலாம் என்றுநினைக்கிறார்கள் இந்த நோய்களையெல்லாம் தீர்ப்பதற்கு அடித்தலைச் சுரப்பி பற்றியும் அது உற்பத்தி செய்யும் ஹார்மோன்கள் பற்றியும் நன்கு அறிவது. வழிகாட்டி உதவக்கூடும்

32 ஆண்டுகளாக அடித்தலைச் சுரப்பி ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளவர், டாக்டர் லீ. பால் பெருகுவதற்கு எச். ஜி. எச். தூண்டுதலாக இருக்கிறதென்றும் அவர் புலப்படுத்தியுள்ளார். ஆண், பெண் இருபாலாரிடத்தும் குறிப்பிட்ட சில பால் உறவு ஹார்மோன்களின் செயல்களை ஊக்குவிப்பதும் இதுவே என்றும் அவர் காட்டியுள்ளார்,

### நோய்த்தடுப்பு

நோய்த்தடுப்பு எதிர் உயிரணுக்களை உடம்பு கூடுதலாக உற்பத்தி செய்வதற்கும் அது துணை செய்கிறது. விலங்குகளைப் பயன்படுத்தி நடத்திய ஆராய்ச்சிகளில், சில அளவுகளில் ஊசிமூலம் (எச். ஜி. எச்.) ஹார்மோன் செலுத்திவந்தால், எலும்பு முறிவு விரைவாகக் குணமடைய அது துணை செய்கிறது; குருதியில் 'கொலஸ்ட்ரால்' அளவைக் குறைக்கிறது. மாரடைப்பு உட்பட இதய, குருதி நாள நோய்களுக்குக் குருதியில் 'கொலஸ்ட்ரால்' அளவு பெருகுவதேகாரணம்என்று கருதுகிறார்கள்.

குறிப்பிட்ட அளவில் ஊசி வழியாக எச். ஜி. எச். செலுத்திவந்த விலங்குகளுக்கு ஊட்டம் மிக்க தீனி போட்டும் அவற்றின் உடம்பு கொழுக்கவில்லை என்று கண்டறிந்துள்ளார்கள். மனிதர்களிடத்தும் இவ்வாறு செய்து பார்க்க முடியுமா என்று முடிவு செய்ய விஞ்ஞானிகள் முயன்று வருகிறார்கள்.

டாக்டர் லீ, சீனாவில் கான்ட்டன் நகரில் 1913-ல் பிறந்தார். 1933-ல் நாங்சிங் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றார். 1935-ல் மேற்படிப்புக்கு அமெரிக்கா வந்தார். பெர்க்லி நகரிலுள்ள கலிஃபோர்ணியா பல்கலைக்கழகத்தில் "டாக்டர்" பட்டம் பெற்றார்; பின்பு ஆசிரியர் குழாத்தில் சேர்ந்தார்.

# நிலவுத் தரையில் "ரிக்ஷா" வண்டி

## அப்பலோ — 14 வீரர்கள் இழுத்துச் செல்வர்

அம்புலித் தரையில் நிலா வீரர்கள் நடைபோடுவது இப்போது பழகிப் போன ஒரு காட்சி. ஆனால் அப்பலோ -14 நிலா வீரர்கள். நிலாவில் நடப்பதுடன் அங்கு இரண்டு சக்கரத் தள்ளுவண்டி ஒன்றையும் இழுப்பார்கள் ஆலன் பி. ஷெப்பர்டு, எட்கர் டி. மிச்சல் ஆகிய இருவரும் 14-வது அப்பலோ கலத்தில் அம்புலி சென்று, நிலாவில் நடந்து அங்கு விஞ்ஞானக் கருவிகளை அமைப்பதுடன், திரும்புகாலில் நிலாப்பொருட்களையும் தம்முடன் எடுத்துவருவார்கள். கருவிகளைக்கொண்டு செல்வதற்கும், நிலாக் கற்களை எடுத்து வருவதற்கும் அவர்கள் முதன்முறையாக ஒரு தள்ளுவண்டியைப் பயன்படுத்துவார்கள்.

தள்ளுவண்டிக்கு அவர்கள பல புனைபெயர்கள் சூட்டியிருக்கிறார்கள் அவற்றில் ஒன்: 'ரிக்ஷா' ரிக்ஷா வண்டி தெரியாதவர்கள் இருக்க முடியாது ஆனால் அமெரிக்க விண்வெளி நிலையமான நாஸா. இந்த வண்டிக்குச் சூட்டியுள்ள பெயர் 'மாடுலர் எக்விப்மெண்ட் டிரான்ஸ்போர்ட்டர்'— அல்லது சுருக்கமாக எம். இ. டி.

பூமியில் அதன் எடை 20 கிலோகிராம். கருவிகள் எல்லாம் அதில் வைக்கப்பெற்றிருக்கையில் அதன் எடை 40 1/2 கிலோ

நிலாவில் ஈர்ப்புவிசை பூமியிலுள்ளதில் ஆறில் ஒரு பங்குதான் எனவே, கருவிகளுடன் ரிக்ஷாவின் எடை அங்கு 6 3/4 கிலோ அது மேலும் ஆறு நிலா-ராத்தல் எடையுள்ள கற்களைத் தாங்க முடியும்

விண்வெளி விமானிகளின் காற்றழுத்தமுள்ள கையுறைகளுக்கு இடமளிக்கும் வகையில் ரிக்ஷாவின் கைப்பிடிகள் உருவாக்கப்பட்டுள்ளன ஷெப்பர்டு அல்லது மிச்சல் கையுறை அணிந்த தமது கையைச் சற்றே திருகி, நுழைத்தவுடன் ரிக்ஷாவின் கைப்பிடி அதில் மாட்டிக்கொள்கிறது. பின்பு ஒரு ராத்தல் விசையுடன் தள்ளுவண்டியை இழுக்க முடியும்- அதாவது இழுப்பது மிகவும் எளிது

ஆலிபூதம் போன்ற நிலா உடுப்பை அணிந்துள்ள விண்வெளி விமானிகளின் நடமாடும் திறனை வண்டி பெருக்குமென்றும், அவர்களது ஆற்றலை மிச்சப்படுத்துமென்றும் எதிர்பார்க்கிறார்கள்

### ரிக்ஷாவின் பணிகள்

வேலைப்பளுவும், உடல் இயக்கமும் உடல் வெளியிடும் வெப்பத்தின் அளவையும் அதிகப்படுத்துகின்றன உழைப்பைக் குறைக்கும் தள்ளுவண்டி விண்வெளி வீரர்கள் எடுத்துச் செல்லும் ஆக்ஸிஜன் தீர்ந்துபோவதைக் குறைக்கும்; இதே போல, அவர்கள் அணியும் நிலா உடுப்புக்களிலுள்ள காற்றைத் தூய்மைப்படுத்தும் ஏற்பாடு, குளிர் வசதி ஏற்பாடு ஆகியவற்றின் வேலைப்பளுவையும் குறைக்கும் இதன்காரணமாக, நிலா ஊர்திக்கு வெளியில் நிலாவில் விண்வெளி வீரர்கள் தங்கும் காலம் நீடிக்கத் துணை செய்யும்

பூமியில் நடத்திய சோதனைகளில். ரிக்ஷா வண்டிக்கு டயர்கள் தேவையென்று அதை உருவாக்கியவர்கள் கண்டறிந்தனர் இங்கு உருவாக்கப்பட்ட செயற்கை நிலாத் தரையில். நிலாவில் உள்ள குறைவான ஈர்ப்பு ஆற்றல் சூழ்நிலைகளில்கூட வண்டிச்சக்கர இரும்பு வளையங்கள் நேரடியாக நிலாத் தரையில் படுவதால் வண்டி புதைந்துபோகுமாறு செய்தன, எனவே டயர்கள் தேவை ஆனால் டயர்களுக்குள் ஒன்றரை ராத்தல் காற்றுத்தான் அடைக்கப்படுகிறது ஆக. பூமியில் அவை கிட்டத்தட்டக் காற்றற்றவை போலவே இருக்கும் ஆனால் நிலா ஈர்ப்பு விசையில் டயர்கள் சரியாக இருக்கும். பூமியில் வண்டியின் டயர்களுக்கு அங்குலத்துக்கு 16 1/2 ராத்தல் அழுத்தம் தேவை"

ரிக்ஷா வண்டியில் 'மட்கார்டுகள்' போன்ற தடுப்புகள் உண்டு. சக்கரங்கள் நிலாப் புழுதியைக் கிளப்பிவிடுமென்றும். இவை வண்டியின்மேலுள்ள கருவிகளில் போய்ப்படிய இடமுண்டு என்றும் சோதனைகளின் போது புலப்பட்டதால், இந்தத் தடுப்புகள் இணைக்கப்பெற்றன, உண்மையிலேயே இவை தேவைதானா என்பதை நிலாவீரர்கள் 14-வது அப்பலோ பயணத்தில் நேரில் கண்டு முடிவு செய்வார்கள்.

நிலா ஊர்திக்குள் தள்ளுவண்டியை வைப்பதற்கு இடம் கிடையாது. நிலா ஊர்திக்கு வெளியில் அதைப் பொருத்தியிருக்கிறார்கள். நிலாவில் இறங்கியதும் விமானிகள் பல கொக்கிகளை அகற்றி, வண்டிகளைப் பிரித்து எடுப்பார்கள். நிலாவில் ஊர்தி இறங்கும்போது அதிலுள்ள 'ஜெட்' இயங்குவதால் ஏற்படும் வெப்பத்திலிருந்து பாதுகாக்கும் பிளாஸ்டிக் உறையைக் கழற்றி மடித்து வைக்கப்பட்டிருந்த வண்டிக்கால்களையும், சக்கரங்களையும் விடுவிப்பார்கள்.

ரிக்ஷா வண்டியின் இரு புறங்களிலும் ஒவ்வொரு பிளாஸ்டிக் பையும், பின்புறத்தில் இரு பைகளும் தொங்கவிட்டிருக்கிறார்கள். நிலா வீரர்கள் நிலாக் கற்களைச் சேகரிக்கையில் எந்தப் பை அருகில் இருக்கிறதோ, அதற்குள் போடுவார்கள். நிலாக் கற்களைத் தனித்தனியாகப் பொட்டலம் கட்டுவதற்கு வண்டியின் மேல்புறத்தில் ஒரு கருவியிருக்கிறது.

### பல பல கருவிகள்

படமெடுக்கும் கருவிகள் பலவற்றை வைப்பதற்கு ரிக்ஷா வண்டியில் அறைகள் உண்டு. கூழாங் கற்கள். காலடித் தடங்கள், டயர் தடங்கள் போன்ற நுட்பமானவற்றை மிக அண்மையிலிருந்து முப்பரிமாணப் படமெடுக்கும் கருவிக்கும் அதில் இடமுண்டு.

வண்டியில் மற்றும் பல அறைகளில் பெரியவையும் சிறியவையுமாகப் பல கொறட்டுக் கரண்டிகளும், ஒரு மண்வெட்டியும் உண்டு. நிலாத்தரையைத் தோண்டி அதன் அமைப்பைத் தெரிந்துகொள்வதற்கே மண்வெட்டி:

நிலத்தில் துளையிடும் ஆறு குழாய்களும் வண்டியில் உண்டு நிலாத் தரையில் பல அடி ஆழத்திலிருந்து மண்ணை அகழ்ந்தெடுக்க நிலா வீரர்கள் இவற்றைப் பயன்படுத்துவார்கள். பூமிக்குத் திரும்பிவரும்போது இவற்றிலுள்ள மண் கொட்டிவிடாமலிருக்க வலுவான மூடிகள் உண்டு.

வண்டியில் சுத்தியல்கள், நிலவுள்ளியல் பூதக்கண்ணாடி, பிரஷ், எழுத்தாணி. நிலாவில் உண்மையான செங்குத்துத் திசையைக் காட்டும் ஒரு ஊசலிக் கருவி ஆகியனவும் உண்டு. நிலாத் தரையையும், ஊசலிக் கருவியையும் சேர்த்துப் படமெடுக்கையில், படத்தில் எது சரியான கீழ்ப்பகுதி என்று விஞ்ஞானிகள் அறியத் துணை செய்யும். இவை அண்மைப் படங்கள்.

ஊசலிக்கருவியுடன் பல நிற அட்டை ஒன்றும் பிணைத்திருக்கிறார்கள். நிலாப் படங்களில் இந்த வர்ண அட்டையும் இடம் பெறுவதால். விஞ்ஞானிகள் நிலாவின் நிறங்களை ஆய்ந்தறிய நிலா வீரர்கள் துணைசெய்தவர்களாவார்கள்.

**- வால்ட்டர் ஃபிராலிக் -**

விண்வெளி விமானி மிச்சல் ஒரு சோதனை நடத்துவதற்காக 310 அடி நீளத்துக்கு நிலாத்தரையில் 'கேபிள்' கம்பி அமைப்பார். இதில் அவருக்குத் துணை செய்வதற்கு நில அளவைக் கொடி ஒன்றுதேவைப்படும். கம்பியின் ஒரு முனையில் இந்தக் கொடிக் கம்பத்தை அவர் நாட்டுவார்: நிலாத் தரையில் மேடு பள்ளங்கள் இருந்தாலும் அவர் கம்பி முனை இருக்குமிடத்தைக் கொடியின் உதவியுடன் அறிய முடியும்.

### ஆபத்துக்குதவும் கயிறு

ஆபத்து வேளைகளில் உதவுவதற்காக வண்டியில் 100 அடி நீளமுள்ள கயிறும் ஒரு பையில் வைத்திருக்கிறார்கள். நிலா வீரர் ஒருவர் கால்தவறிப் பள்ளம் எதிலாவது விழுந்துவிட்டால். மற்றவர் இந்தக் கயிற்றைப் பயன்படுத்தி அவரை வெளியே கொண்டுவர முடியும்.

நிலா வீரர்கள் நிலாத் தரையில் நடக்கும் சில இலக்குகளுக்கு மேலே உள்ள நிலாக் காந்தப் புலத்தை அளவிடுவதற்குக் காந்த அளவுக் கருவி ஒன்றும் ரிக்ஷா வண்டியில் உண்டு. வண்டியிலிருந்து 50 அடித் தொலைவுவரையில் காந்தப் புலங்களை நிலா வீரர்கள் அளவிட வசதியுண்டு.

வண்டி நின்ற நிலையில இருக்கையில். அதை ஒரு பட்டறை-மேசையாகவோ, புகைப்படக் கருவித் தாங்கியாகவோ பயன்படுத்திக் கொள்ளவும் முடியும்:

இப்படியாகப் பலப்பல விஞ்ஞானச் சோதனைகள் நடத்தும் கருவிகளை நிலா ரிக்ஷா தன்னிடம் பெற்றிருப்பதோடு. தானே ஒரு தொழில்நுட்பச் சாதனைக் கருவியாகவும் பயன்படும். அதன் டயர் தடங்களைப் படமெடுத்தல். அது பலவகைப் பணிகளை நிறைவேற்றுவதைப் பார்வையிடுதல் ஆகியவற்றின் வாயிலாக வருங்காலத்தில் நிலாத் தரையில் போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்போகும் வாகனங்களுக்கு வடிவமைப்பதில் நிலா வீரர்கள் பெருந்துணை செய்ய முடியும்.

### அம்புலிக் கார்

'ரோவர்' என்ற பெயரில் நிலாக் கார் ஒன்றிற்கு வடிவம் அமைத்துள்ள வல்லுநர்கள், நிலாத்தரையில் நிலா ரிக்ஷா பயணம் செய்கையில் தெரியவரும் விவரங்களை அறிவதற்காக ஆவலோடு காத்திருக்கிறார்கள். 'ரோவர்' ஒரு புதுமையான

(14ம் பக்கம் பார்க்க)

# 8-வது சோவியத் ஐந்தாண்டுத் திட்டம்

# சில பலாபலன்கள்

**1966—1970ல் திட்டமிடப்பட்ட தொழில்துறை வளர்ச்சியும் நடைமுறை வளர்ச்சியும்**

| 23-வது கட்சிக் | 1966 | 1967 | 1968 | 1969 | 1970 |
|---|---|---|---|---|---|
| காங்கிரஸ் தீர்மானித்த வளர்ச்சி விகிதம் (1965-ம் ஆண்டைவிட இத்த சதவிகிதம் கூடவேண்டும்.) | 106 7 | 114.5 | 126-127 | 136-138 | 150 |
| நடைமுறைவளர்ச்சி (சதவிகிதத்தில்) | 108.7 | 119.6 | 129.5 | 138.7 | ...... |

8-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் (1966—70 முக்கிய பொருளாதாரக் கடமை என்ன? விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றம், தொழில்துறை முன்னேற்றம், உற்பத்தி ஆற்றலிலும் உழைப்பு ஆற்றலிலும் முன்னேற்றம் - இவற்றின் அடிப்படையில் தொழில் துறையை மேலும் அபிவிருத்தி செய்வதும், விவசாயத்துறையின் வளர்ச்சியில் ஓர் உறுதியான வேகத்தைக் காண்பதும் ஆகும். தேசிய வாழ்க்கைத் தரங்களை உயர்த்தவேண்டும் என்பதே முக்கிய கொள்கையாகும். இந்தக் கொள்கை எந்த அளவில் முழுமையாக நிறைவேற்றப்பட்டது? கடந்த ஐந்து ஆண்டுகளில் சோவியத் பொருளாதாரத்தின் அடிப்படைக் குணும்சங்களில் என்ன மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன?

8-வது ஐந்தாண்டுத்திட்டத்தில் தொழில்துறை அபிவிருத்தி முதலிடம் வகித்தது. ஏனெனில் சோவியத் பொருளாதாரத்தின் கேந்திரத்துறை அது; தேசிய வருமானத்தில் 52 சதவிகிதம் அதிலிருந்து கிடைக்கிறது. இரண்டாவதாக, விவசாயம், போக்குவரத்து, தகவல் போக்குவரத்து ஆகிய துறைகளின் தொழில் நுட்ப வளர்ச்சியின் நிலை, தொழில் துறையைத்தான் சார்ந்துள்ளது. சொல்லப்போனால் பயனீட்டுப் பண்டங்களின் உற்பத்தி உட்பட தேசப் பொருளாதாரத்தின் முன்னேற்றம் அனைத்தும் தொழில் துறையின் வெற்றிகளைத்தான் சார்ந்துள்ளது.

தொழில் துறையின் வளர்ச்சி எவ்வாறு உள்ளது? உற்பத்தி இலக்குகள் மீறப்பட்டனவா? அரசாங்கப் புள்ளி விவரங்களைப் பார்ப்போம்:-

**-- பி. ரகித்ஸ்கி --**

விஞ்ஞான- தொழில்நுட்ப முன்னேற்றமானது தொழில் துறைவளர்ச்சியில் முதலிடம் பெற்றுவருகிறது ஆனால் இதுவே முக்கிய குறிக்கோள் அல்ல. இந்தக் காலகட்டத்தில் உற்பத்தி ஆற்றலைப் பெருக்கவேண்டும் என்பதே முக்கிய குறிக்கோள். விஞ்ஞான- தொழில்நுட்ப முன்னேற்றம் இந்தக்குறிக்கோளை அடைய மிக முக்கிய சாதனமாக விளங்குகிறது. மின்விசை எஞ்சினியரிங், எலெக்ட்ரானிக்ஸ், எந்திரம் கட்டுதல், கெமிகல், பெட்ரோ கெமிகல், முதலியவை முக்கியமான தொழில்துறைகள் ஆகும். இந்தத் துறைகளில் 1966 முதல் 1969 வரை நடைமுறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி விகிதம் வருமாறு:- மின்சார உற்பத்தி 42.7 சதவிகிதம் அதிகரித்துள்ளது. கெமிகல். பெட்ரோ கெமிகல் துறையில் 57.4 சதவிகிதமும், எந்திரம் கட்டுதல், உலோகத் தொழில் ஆகிய துறைகளில் 59 6 சதவிகிதமும் உற்பத்தி அதிகரித்துள்ளது. ஒட்டு மொத்தமாக தொழில் உற்பத்தி 38.7 சதவிகிதம் அதிகரித்துள்ளது 1970-ம் ஆண்டிலும் மேற்கண்ட துறைகளின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. 1970-ம் ஆண்டுக்கான திட்ட இலக்குகள் வெற்றிகரமாக நிறைவேறியுள்ளன.

இந்தக்கொள்கையின்விளைவாக எல்லா உற்பத்தித் துறைகளிலும் நவீனக்கருவிகள் மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டுகின்றன. ஒவ்வொரு தொழிலாளியும் அதிக அளவில் மின்விசையைப் பயன்படுத்துகிறார். தொழில்துறையில் பயன்படுத்தும் மின்விசையின் அளவு 24 சதவிகிதம் உயர்ந்துள்ளது. போக்குவரத்துத்துறையில் பயன்படுத்தும் மின்விசையின் அளவு 27சதவிகிதமும், இதர துறைகளில் பயன்படுத்தும் மின்விசையின் அளவு 27 சதவிகிதமும் உயர்ந்துள்ளன. இவையும் இன்னும் பல காரணங்களும் (உழைப்பை ஒழுங்கமைத்தல், தொழிலாளர்களின் வாழ்க்கைத்தர முன்னேற்றம் சிறந்த பொருளாயத, அறநெறித் தூண்டுதல்கள் ஆகியவையும்) சேர்ந்து தொழில் துறையிலும் இதர துறைகளிலும் உழைப்பு உற்பத்தித் திறனை அதிகரித்துள்ளன

## மாயப்பிரபஞ்சம் — (2)

# விஞ்ஞானமும் மதமும்,

– சுநாதன் –

மனிதனுடைய இப் பூவுலக வரலாற்றில் சுமார் 5560 வருடங்களுக்கு இப்பாற்பட்ட காலத்திலுள்ள குறிப்புகளே இப்பொழுது எமக்குக் கிடைக்கக்கூடியதாக இருக்கிறது. மனிதன் அதற்கு முந்தியே எத்தனையோ வருடங்களுக்கு முன் பூமியில் தோன்றிவிட்டான். ஆனால் அந்த விடியற்காலை நேரத்தைப் பற்றிய ஆதாரபூர்வமான குறிப்புகள் எதுவும் கிடையாது. ஆதிமனிதன் எப்படித் தோன்றினன் என்பது இன்னும்தான் சர்ச்சைக்கிடமான விஷயமாயிருக்கிறது.

5560 வருடங்களில் பெரியதும் சிறியதுமான பலப்பல நாகரிகங்கள் பூமியின் பல்வேறு பகுதிகளில் தோன்றி மறைந்துள்ளன. சுமேரியர், எகிப்தியர், மாயர்கள், இன்கா, அஸீரியர், கிரேக்கர், ரோமர், சீனர், ஆரியர், திராவிடர் முதலியவர்கள் ஒவ்வொரு காலங்களில் நாடு நகரங்களையமைத்து வாணிபம் செய்து, இராஜ்யங்களை உருவாக்கி, கலைகளை வளர்த்துச் சீரும் சிறப்புமாக வாழ்ந்து வந்திருக்கிறார்கள். அறிஞர்களும் கலைஞர்களும் ஞானிகளும் வீரர்களும் இந்த நாகரிகங்களில் உற்பத்தியானார்கள். இந்தப் பூமியைப் பற்றியும் சமுத்திரங்களைப் பற்றியும் வானவலம் வரும சூரிய சந்திர நட்சத்திரங்களைப் பற்றியும் இவ்வறிஞர்கள் சிந்தித்திருப்பார்கள். இவை யாரால் உற்பத்தியாகின. எப்பொழுது உற்பத்தியாகின என்று பல கேள்விகளைக் கேட்டு அவற்றுக்கு மறுமொழி காண ஆசைப்பட்டிருப்பார்கள், மனிதனுடைய சிந்தனைக்கும் சக்திக்கும் அப்பாற்பட்ட ஏதோ ஒரு மகாசக்தியே இவற்றிற்குக் காரணமாயிருக்க வேண்டுமென்பதே எல்லோருடைய தீர்ப்பும். அந்த சக்தி எங்கேயிருக்கிறது எப்பேர்ப்பட்டது என்ன வடிவமானது? என்று வெவ்வேறு நாகரிகத்தவர் வெவ்வேறு உருவங்களையும் தன்மைகளையும் கற்பித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அடிப்படையான தெய்வக் கொள்கையில் பொதுவாக எல்லா நாகரிகத்தவருமே உடன்பாட்டுக்கு வந்திருக்கிறார்கள். தெய்வம் ஒன்று இருக்கிறது. அதுவே இந்தப் பூமியையும் கடலையும் வானத்தையும் உண்டாக்கியது என்பதே அந்த உடன்பாடு.

இவ்விடத்தில் தற்காலத்து நவீன விஞ்ஞானம் மதத்தோடு மோதவருகிறது. 'பூமியும் அதிலுள்ள உயிர்வர்க்கங்களும் சூரியனும் சந்திரனும் நட்சத்திரங்களும் இருந்தாற்போலத் திடீரென்று எப்படி உற்பத்தியாக முடியும்? எல்லாவற்றிற்கும் பரிணமம் என்ற வளர்ச்சி ஒன்றுண்டல்லவா? நம் கண்முன்னே காணும் இயற்கையில் அப்படித்தானே நடக்கிறது? என்று அவர்கள் கூறுகிறார்கள். உலகத்திலுள்ள பொருள்வகை எல்லாவற்றையும் அக்குவேறு ஆணிவேருக உடைத்துப் பிரித்து பார்த்துக்கொண்டு போனால் அவை எல்லாம் சுமார் நூறு மூலப் பொருட்களுக்குள் அடங்கும். இந்த மூலப் பொருட்கள் ஒன்றோடொன்று இணைவதால் உலகில் நாம் காணுகின்ற வெவ்வேறு பொருட்கள் உண்டாகின்றன.

ஓர் உதாரணத்தால் இதைச் சுலபமாக விளக்கலாம். கடல்நீரை எடுத்துக் கொள்வோம். சோடியம் என்ற திடப்பொருளும் குளோறின் என்ற வாயுப் பொருளுமே அதன் முக்கியமான மூலப்பொருட்கள். நீரும் கலந்திருக்கிறது. இந்த நீரும்கூட பிராணவாயுவும் நீரகவாயுவும் சேர்ந்ததால் உண்டானது. ரசாயன முறையில் ஒரு பொருளைப் பிரித்து ஆராய்ந்து கொண்டு போனால் வெவ்வேறு மூலப்பொருட்களாக மிஞ்சும் இதற்கு மேல் அதைப்பிடிக்க முடியாது நமது திரேகமும் அப்படித்தான். அதைத் துண்டு துண்டாக வெட்டி ஆராய்ந்து கொண்டு போனால் கடைசியில் மிஞ்சுவது கரியம்(கரி) பிராணவாயு, நீரகவாயு, இரும்பு, சோடியம் முதலிய மூலப் பொருட்களே. அப்படியானால், இந்த மூலப் பொருட்கள் எல்லாவற்றையும் கொடுத்தால் விஞ்ஞானிகளால் ஒருமனிதனை உண்டாக்க முடியுமோ? என்ற கேள்வி எழுவது இயற்கையே. அதொன்றை மட்டுந்தான் அவர்களால் இன்னும் செய்ய முடியவில்லை இப்பொழுது அவர்கள் சென்றுகொண்டிருக்கும் வேகத்தைப் பார்த்தால் விரைவில் அதையும் செய்து முடிக்கக் கூடிய ஆற்றலைப் பெற்று விடுவார்கள்போலத் தான தெரிகிறது. இது ஒருபுறமிருக்கட்டும்.

மூலப்பொருட்கள் வெவ்வேறு அளவிலும், வெவ்வேறு தட்ப வெப்ப நிலையிலும் கூடும்போது வெவ்வேறு விதமான பொருட்கள் உண்டாகின்றன. இரண்டு பங்கு நீரகவாயுவும் ஒருபங்கு பிராண வாயுவும் சேர்ந்ததுதான் நீர். ஆல் இரண்டு பங்கு நீரகவாயுவும் இரண்டுபங்கு பிராணவாயுவும் சேர்ந்தது 'ஹைட்ரஜன் பெரொக்ஸைட்' என்ற இன்னொரு வஸ்து. இப்படியாக நூற்றுச் சொச்ச மூலப் பொருட்களும் ஒன்றோடொன்றும் ஒன்றோடு பலவும் சேருவதனல்தான் இப் பூமியும் அதில் நாம் காணும் பொருட்களும் உண்டாகின்றன. சூரியனிலும் சந்திரனிலும் அநேகமாக இந்த மூலப்பொருட்களேயிருக்கின்றன. வேறேதாவது புதிய மூலங்கள் இருக்குமாயின் விஞ்ஞானம் அவற்றை இன்னும் கண்டுபிடிக்கவில்லை.

இன்னுமொரு விஷயம் இந்த மூலப்பொருட்கள் எப்படியோ இப் பிரபஞ்சத்தில் இருக்கின்றன என்பது மட்டுமே விஞ்ஞானிகளுக்குத் தெரியும் அவற்றை மேலும் துண்டுகளாகப் பிரிக்க முடியாது. ஆயின் அவை எப்படித் தோற்றின? இத் தப்புதிருக்கும் விஞ்ஞானிகளால் இதுவரை மறுமொழி கூறமுடியவில்லை. ஆகவே எப்படிப் பார்த்தாலும் பிறிதொரு மாயசக்திதான் இவற்றைத் தோற்றுவித்ததுமல்லாமல், அவை வெவ்வேறு பொருட்களாய் உரு எடுக்கும்படி, தட்ப வெப்ப சூழ்நிலைகளையும் ஏற்படுத்தி வருகிறதென்று விஞ்ஞானிகளும இப்பொழுது ஒப்புக்கொள்ளுகிறார்கள்' எவ்வளவுக்கெவ்வளவு ஆழமாக ஆராய்ச்சி செய்கிறோமோ, அது இன்னும் ஆழமாகவே போய்க்கொண்டிருக்கிறதென்று அவர்கள் ஆச்சரியத்துடன் மலைக்கிறார்கள்.

பூ மண்டலத்திலும் வளி மண்டலத்திலுமுள்ள பொருட்களை ஆராய்கிறார்கள் ஒவ்வொன்றும் எப்படி யெப்படித் தோன்றியிருக்க வேண்டுமென்று நியாயம் காட்டி விளக்குகிறார்கள். அவ்வளவுதான். அவை எப்படி ஏற்பட்டன என்பது பற்றி அவர்களுக்கு அக்கறையில்லை.

விஞ்ஞான அறிவு நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டு போகிறது. நூறு வருடங்களுக்குமுன் ஸ்திரமாக ஸ்தாபிக்கப்பட்ட ஒருகொள்கை, இன்று புதிய ஆராய்ச்சியாலும் கண்டுபிடிப்புகளாலும், தவிடுபொடியாகலாம். நாம் வாழும் பூமியைப்பற்றிய மூலோற்பத்திக் கொள்கையும் இப்படித்தான். கி.மு 4004-ம் ஆண்டு ஒக்டோபர் 26-ந் திகதி காலை 9 மணிக்குத்தான் இவ்வுலகம் படைக்கப்பட்டதென்று 1654-ம் ஆண்டு அயர்லாந்தின் அத்தியட்சகுரு அஷர் என்பவர் தெரிவித்தார். வெகுகாலமாக மக்கள் இதை நம்பினார்கள். 1858-ல் சார்ல்ஸ் டார்வின் தமது பிரசித்தமான பரிணமக் கொள்கையை வெளியிட்டார். இதன்பிரகாரம் பூமி லட்சம் வருடங்களுக்கு முன்னேயே தோன்றிவிட்டதென்ற கொள்கை ஸ்தாபிக்கப்பட்டது. இந்த நூற்றுண்டின் ஆரம்பத்தில் ரேடியோசக்தி கண்டுபிடிக்கப்பட்டது. இதைக்கொண்டு மலைப் பாறைகளிலுள்ள ரேடியோ சக்தியுள்ள யூரேனியம் போன்ற உலோகங்களைப் பரிசோதித்தபோது, இப்பூமி தோன்றி சுமார் முந்நூறு கோடி வருடங்களாகலாம் என்று இப்பொழுது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

பூமி எப்படித் தோன்றியது என்பது அடுத்தகேள்வி. அது இருந்தாற்போல ஒரு நாள் சடுதியாகத் தோன்றிவிடவில்லை என்று எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள். அது சூரியனின் இழுபபுசக்தியால் ஈர்க்கப்பட்டு சூரியனை வருடமொன்றுக்கு ஒரு முறை வலம்வந்துகொண்டிருப்பதால், சூரியனே அதன் தாயாய் இருக்கவேண்டும். ஆயின் சூரியனிலிருந்து அது எவ்வாறு பிரிந்துகொண்டு வெளியேறியது? இதைப்பற்றியும் காலத்துக்குக் காலம் வெவ்வேறு விளக்கங்கள் கொடுக்கப்பட்டன. இன்று நிலைத்திருக்கும் கொள்கை 1951-ம் ஆண்டு சிகாகோ சர்வகலாசாலையைச் சேர்ந்த ஜெராட் கியூப்பர் என்னும் வானசாஸ்திரியால் ஸ்தாபிக்கப்பட்டது.

(தொடரும்)

# நமது நூல் நிலையம்

(12ம் பக்கத் தொடர்ச்சி)

பாடல்களைப் படிக்கும் பொழுது ஏற்படுகின்றது' தமிழாக்கத்தில் சில கடின பதங்கள் தேவையையொட்டி இடம்பெற்றிருக்கின்றன. ஆனல், இவற்றின் பொருள் கீழே தெளிவு படுத்தப்பட்டிருப்பதால் இவை அரும்பதங்களாக விருந்தும் தெளிவாக உள்ளன.

கொள்ளேன் குறுமைப்
பயன்கள்
அவைகள்
கொடுத்தொழிய
உள்ளோர் சுரர்தமை
உள்ளேன்
கனவிலும்; உன்னையல்
சேர்
புள்ளூர் பவர்க்கும்
பொருந்தா வுன்
தாளிற் புரி தொழும்பே
விள்ளேன் நெடிதுற
வேண்டுவன்
ஈச விதித்தருளே.

என்ற நான்காவது பாடலைப் படிக்கும்பொழுது,

'கொள்ளேன் புரந்தரன்
மாலயன்
வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினதடி யாரொ
டல்லால் நரகம்
புகினும் ...'

என்னும் திருவாசகத்தை எம்மனம் நினைவூட்டிக்கொள்கிறது.

'ஸந்த்யாரம்ப
விஜ்ரும்பிதம்'

என்று தொடங்கும் கருத்தாழம்கொண்ட ஐம்பதாவது பாடல்,

இளர்மாலைச் சந்தியின் கண்
மலர்ந்தே, கேடில்
கேள்விமுடி களிற்பிறவிற்
கிழமை கொண்டே,
வளர்மாலை வண்டமுகி
யாகப் பெற்றே.
வாய்ந்தார் நல் வாசனை
யால்
வயங்கி நாளும்
ஒளிர்போகி அணியாய்மீ
தலர்மே லோதும்
ஒண்மைஜதாய் ஒழிவில்
குணத்தோங்கி நின்ற
வளர்சீர்ப் பதமலி
வார்சுவ னம்நேர்
மாவிலிங்கப் பெருமானை
வணங்குவேனே

எனத்தெளிவாக மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

கண்ணப்பநாயனரை மனதாரப்போற்றி சங்கரர் அருளிய பாடல்;

கானுழை செருப்பாங்
கூர்ச்சங்
கண்ணுதற் குமிழ்நீர்
வேணிக் [illegible]
கானுழை; தீர்த்தம்,
ஊட்டக்
கரைமொழி இருக்காம்;
எச்சில்
ஊனுகர் அமுதாம்;
பக்திக்
கதைச்செய
ஒண்ணுதம்மா
கானவன் சிரேட்ட பக்த
னுகின்றன் காபாலிக்கே!

என மூலப்பாடலின் ஓசையைப் பின்பற்றி அழகாகத் தமிழாக்கப் பட்டிருக்கிறது. இப்படி ஓசைநயம், கருத்தாழம், யாப்பமைதி கொண்ட பாடல்கள் பல உண்டு இந்நூலில்.

— கலாநிதி
ஜி. சுந்தரமூர்த்தி. எம். ஏ.

## இலவச புத்தகங்கள்

யாழ்ப்பாணம். திங்கள் புங்குடுதீவு இராஜ இராஜேஸ்வரி வித்தியாசாலை நூலகத்திற்கு புத்தகங்களை வழங்க புங்குடுதீவு கல்வி வளர்ச்சிக் கழகம் முன் வந்திருக்கின்றது.

புத்தகங்களை வாங்குவதற்கான நிதியை சுற்றுடலிலுள்ள பொது மக்களிடமிருந்து திரட்டுவதாகவும் உற்சாகத்துடன் பொதுமக்கள் இப் பணிக்கு ஆதரவு தருவதாகவும் மேற்படி கழகச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

## நிலவுத்......

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நிலா 'ஜீப்' என்று சொல்லலாம். நிலா வீரர்கள் இதை நிலாத் தரையில் செலுத்த முடியும். அப்பலோ-15 பயணத்தில் செல்லும் நிலா வீரர்கள் முதல் ரோவர் காரைப் பயன்படுத்துவார்கள். இந்த ஆண்டு (1971) ஜூலை மாதத்தில் 15-வது அப்பலோ பயணத்துக்குத் திட்டமிட்டுள்ளனர்!

ஜூலைப் பயணத்துக்குள் 'ரோவர்' தயாராகிவிடுமானல், நிலா ரிக்ஷா மேற்கொண்டுதேவையிருக்காது. நிலா ஆராய்ச்சி விஞ்ஞானம் மிக விரைவாக முன்னேறிவருகிறது. எனவே புதுப்புது கண்டுபிடிப்புகள் கூட ஒருதடவை பயன்படுத்திய பின்பு பழசாகிவிடக்கூடும். எனவே ரிக்ஷா வண்டி நிலாவுக்குப் போகும் முதல் பயணமே அதன் இறுதிப் பயணமாகவும் ஆகிவிடலாம்.

[வால்ட்டர் ஃபிராலிக்]

## நாவலர் வழித்தோன்றல் பூங்கோதை அம்மையார்

கோப்பாய்க் கிராமத்தின் அன்னையாக அழைக்கப்பட்டவரும் நாவலர்பெருமானின் வழித்தோன்றலுமாகிய திருமதி சிவஞானப் பூங்கோதை அம்மையார் மறைந்து பதினுறு நாட்களுக்கு மேல் ஆகின்றன. இருந்தும் அவரது அன்பான நினைவுகள் எம் உள்ளத்தை விட்டு மறைவதாக இல்லை.

சென்னை வித்தியானுபாலன அச்சியந்திரசாலை சிதம்பரம் நாவலர் பாடசாலை ஆகியவற்றின் பரிபாலகராக இருந்து அவற்றைச் சிறப்புறநடாத்திய திரு ச. வேலாயுதபிள்ளை, வடகோவையில் வாழ்ந்த அருணாசலம்பிள்ளை ஆகியோரின் சகோதரியாகிய இவர், சிறு பிராயத்தில் நாவலரின் நன்மாணாக்கரும் மருமகனுமாகிய பொன்னம்பலப்பிள்ளையின் மேற்பார்வையில் வாழ்ந்தவர். அக்காலத்தில் ஆரம்பித்த சமய வழிபாடுகளை இவர் எக்காலத்தும் கைவிட்டாரில்லை.

சிவஞானச் செல்வியாக விளங்கிய இவர் சிறந்ததொரு அறச் செல்வியாகவும்விளங்கினார். தன்குடும்பத்தாருக்கும் பிறருக்கும் வழங்கிய தான தருமங்கள் பல. காசுப் பஞ்சம் மிகுந்த அக்காலத்தில் தனது கணவன் பெயரால் சிதம்பரம் ஆறுமுகநாவலர் பாடசாலைக்கு ஆயிரம் ரூபாய் கொடுத்துதவியதை எவரும் மறப்பதற்கில்லை.

அன்பு' பொறை, அடக்கம் இன்சொல், எல்லாம்ஒருங்கே அமையப்பெற்றவராய்த்திலகவதியாரை நினைவூட்டும் வகையில் வாழ்ந்த இவர் 1971-ம் ஆண்டு தைத்திங்கள 18-ம் நாள் நள்ளிரவு வேளை 'சிவமூல மந்திரம்' செவியினில் ஒலிக்கத்தெய்வமானர்.

அவருடைய அந்தியேட்டி தினமாகிய இன்று அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்.

—திருச்செந்தூர்.

## ரஷ்ய . .

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் நாட்டிலிருக்க ருஷ்யா, பிரான்சு போன்ற பாஷைகளைப்பயிற்ற அக்கறை எடுப்பது பாராட்டக்கூடிய விடயமோ என்ற சந்தேகம்ஏற்படுவதில்என்ன பிழை? இலங்கை-கொரியா நட்புறவுச்சங்கம், இலங்கை-சீன நட்புறவுச்சங்கம் போன்ற சங்கங்களை ஆரம்பிக்கிற நமது நாட்டவர் தமிழ்-சிங்கள நட்புறவுவளர்வதில் அக்கறை காட்டத் தவறிவிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. அடிக்கடி பத்திரிகைகளில் வெளியிடுகிற கட்டுரைகளோ, மேடைப் பேச்சுகளோ இதுவரை நல்லுறவு வளர்ப்பதற்கு எந்தவிதத்திலும் உதவியுள்ளன.

சிங்கள மக்களிடையேயும் தமிழ் மக்களிடையேயும் உண்மையான அன்பையும் சகோதரத்துவத்தையும் உண்டாக்குவது இருமொழி எழுத்தாளர்களினலுமே ஓரளவுக்கு முடியும் என்ற நம்பிக்கையுடன் பத்திரிகைகளுக்கு அடிக்கடி இவ்விடயத்தைப்பற்றி எழுதுகிறேன். பொறுப் புள்ளவர்களுடைய கண் விழிப்புக்குச் சிறிதேனும் இக்கட்டுரைகள் காரணமாக இருந்தால் என் திருப்திக்கு அதுவே போதும், பெருக தமிழ்-சிங்கள ஒருமைப்பாடு.

**MANOHARA**
Jaffna
Daily 4-45, 7 & 9-45 p.m
Poya days 4 shows
Tony Franciosa
Michael Sarrazin
in
A MAN CALLED GANNON
(Techni color)

**REGAL Jaffna**
Daily 3 shows
Poya days 10-30 a.m.
Robert Luciana
Horton Paluzzi
in
MGM's
GREEN SLIMB
(Colour)

**RAJAH — JAFFNA**
Daily 4 Shows
Giuliano Gemma
in
**BLOW HOT, BLOW COLD**
(Color - Adults)
The Picture ran for over 125 days in Colombo

**ராணி சினிமா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கணேசன் - ஜெயலலிதா
நடித்த
**எங்கிருந்தோ வந்தாள்**

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள் போயாநாட்களில் 4 காட்சிகள்
கெப்பிட்டல்
(கொழும்பு
பிளாஸா
(கொழும்பு
**சிவாஜி**
**காஞ்சனா**
எம். என்.
நம்பியார்
நாகேஷ்
முத்துராமன்
நடித்த





**சி வ ந் த ம ண்**

**இப்பொழுது காண்பிக்கப்படுகின்றது**
**வின்ஸர்** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
★ஏ. வி. எம். ராஜன் ★வாணிஸ்ரீ
★ சிவகுமார் ★ குமாரி லட்சுமி
வி. கே. ராமசாமி - சோ - மனோரமா
மாஸ்டர் மோகன் — மாஸ்டர் சேகர்
நடித்த
ஏ. வி. எம். புரொடக்ஷன்ஸ்
**அன்னையும் பிதாவும்**


## அண்ணா பிறந்தார்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

எழுச்சியையும் தேசிய நலனையும் கருத்திற் கொண்டு செயலாற்றியவர் இவர்.

இவரது தலைமையை மதித்து பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் தொடர்ந்து வருகின்றார்கள் என்றால் அவரது தலைமையின் சிறப்பையே அது காட்டுகின்றது.

அரசியல், இலக்கியம், சமுதாயப் பணி ஆகிய முக்கூட்டுச் சேர்க்கையின் மொத்த உருவமாகத் திகழ்ந்த அண்ணாதுரை தமிழ் மக்களின் எளிமையான பண்புக்கும் ஓர் இலக்கணமாகத் திகழ்ந்துள்ளார்.

### குறளுக்கு ஒரு மனிதன்

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாட்டில் வள்ளுவனுடைய குறள் நெறிக்கு ஒரு உதாரணமாக வாழ்க்கையை அமைத்துக்கொண்டவர் இவர்.

காலத்தின் கடுகிப் போக்கினால் மாறுதல்கள் உலகமெங்கும் நாளும் பொழுதும் பல்கிப் பெருகுகின்ற வேளையில் காலமாற்றத்தை அனுசரித்துச் சென்றமையால் புதுமையான சிந்தனையாளராக இவர் மிளிர்ந்தார்.

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவதெங்கும் காணோம் என்று அமரகவி பாரதி ஆராமையோடு பாடுகிறார். ஆனால் அந்த யாமறிந்த தமிழின் சக்தியை சரிவரப் புரிந்து கொண்டவருள் அண்ணாவும் ஒருவர்.

### சகலதும் அண்ணா

தமிழகம் மாத்திரமல்ல, தமிழ் மக்கள் எங்கெங்கு வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் தமிழை ஒலிக்கச் செய்தபெருமை அண்ணாத்துரை அவர்களுக்கே உரியதாகஅமைந்தது.

தமிழகத்தின் தலைமைப் பதவியைக் கொண்டு 'தமிழ் நாடு' என்று தனிப் பெயர் உருவாக வழிவகுத்தார். இரண்டாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டை மகத்தான முறையில் நடாத்திச் சர்வ உலகமும் தமிழ் மொழியின் ஆற்றலைப் போற்றுகின்ற பேரியல் புகழ்ச்சியைக் கண்டவர் இவர்.

காலம் என்பது ஓடுகின்றது அது நின்றுவிடுவதில்லை நிற்காத காலத்தினால் மனிதனின் உடலில் மாற்றம் ஏற்படுகிறது மாற்றத்துக்குட்பட்ட ஒரு நாள் உடலுக்குள் அமைந்துள்ள உயிர் பிரிவதும் இயற்கை என்பதும் மறைக்க முடியாத உண்மை

இந்த உண்மைக்கு அண்ணாவும் உள்ளானார்

# வரி விளம்பரம்

Offers are invitted from Lorry owners for Transport of Confectionery from Manipay to Colombo. Please quote rates per Ton or Cwt. Rose Brand Factory, Uduvil road, Manipay. 2707

## விற்பனைக்கு

காணி:
கைதடி வடக்குவேலவரையில் 17 பரப்புக் காணி விற்பனைக்கு இருக்கின்றது. தொடர்பு கொள்க சச்சிதானந்தசோதி, மேதர் ஒழுங்கை, மானிப்பாய். 2702

காணி:
வீடுகட்ட, யந்திரசாலை அமைக்க, தோட்டம், பண்ணைகள் செய்ய 26 பரப்பு ஓர் நல்ல தண்ணீர் கிணறும் தென்னம்பிள்ளைகளும் அடங்கிய தாய் நல்லூர் நாயன்மார் காடு யாழ். மாநகர எல்லைக்குள் உடன் விற்பனைக்குண்டு. பிரீதும் கொடுக்கப்படும். வீ. தயாபரன், குமாரவீதி, நல்லூர். 2690

வீடு:
யாழ்ப்பாணம் - நல்லூரில் எட்டு அறைகளுள்ள புதிய பெரிய வீடும் மூன்று பரப்புக் காணியும் விலை ரூபா 35,000/- உடன் வசதி கிடைக்கும். உடனே குடியிருக்கலாம். அதே இடத்தில் ஒன்பது பரப்புக் காணி முழுவதும் விலை ரூபா 36,000/- இரண்டு மூன்று பரப்பு துண்டுகளாகவும் வாங்கலாம். உரிமையாளர் பணம் தேவைக்காக விற்கிறார். உடனே நேரில் வரவும். 92 பருத்தித்துறை வீதி. யாழ்ப்பாணம் 2698

பல இன வளர்ப்பு மீன்கள் விற்பனைக்குண்டு 16, 2-ம் குறுக்குத் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 2706

CY 7255 இலக்கமுடைய A/40 கார் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்: ஆர். அர்னோலி சில்வா, C/o க. தர்மலிங்கம் 30/1, சினிவாசகம் ரோட், கொட்டடி, யாழ்ப்பாணம். 2711

## வகுப்புக்கள்

பத்திக் (Batik), கட்டி சாயம்போடுதல் (Tie Dyeing) திரை (சேலை)யில் அச்சிடுதல் (Screen Printing). துணி வர்ணம் பூசுதல் (Fabric painting) ஆகியன கூடிய சீக்கிரத்தில் நீங்கள் தனியாகச் செய்யக் கூடிய முறையில் கற்றுக் கொள்ளலாம். ஆரம்பமானவர்களும் தொழில் நுணுக்கங்களை இலகுவாக விளங்கிக் கொள்ளலாம். 75, மெயின் வீதி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்துடன் தொடர்புகொள்ளவும்.

குறிப்பு:- எட்டு வகுப்புக்களுக்கு ரூபா அறுபது. 2705


**வெஸ்லிசினிமா**
மானிப்பாய்
தினசரி 2-30, 6-30, 9-30
சிவாஜி கணேசன் - பத்மினி
நடித்த
**புனர் ஜென்மம்**

**ஸ்ரீகாலிங்கன்**
இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா நாட்கள் 2-30
எம். ஜி. ஆர், சரோஜாதேவி
நடித்த
**கலங்கரை விளக்கம்**


## தேவை

மனேஜர்
தியேட்டருக்கு ஒரு மனேஜர் தேவை. தகுதி: ஆங்கிலம் தெரிந்தவராகவும், கணக்குப்பகுதியில் அனுபவமுள்ளவரும், தியேட்டர் அனுபவமுள்ளவரும், சினிமா யந்திர அனுபவமுள்ளவரும், வயது 35 தொடக்கம் 45 வயதுக்குள் இருக்க வேண்டும் பிணைப்பணம் ரூபா 2000/- சம்பளம்நேரடியாகக் கதைத்து தீர்மானிக்கப்படும் நிர்வாக அதிபர், லக்ஷ்மி தியேட்டர், நெல்லியடி, கரவெட்டி. 2703

கேஷியர்
வியாபார ஸ்தாபனமொன்றுக்கு பெண் காசாளர் "கேஷியர்" உடனடியாக தேவை. ஆரம்ப சம்பளமாக ரூ. 110/- கொடுக்கப்படும். பிணைப்பணமாக ரூ 1000/- செலுத்தக்கூடியவர்கள் மட்டும் 2-2-71 போயாதினம் காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை சான்றுகளுடன்நேரில் விண்ணப்பிக்க. மனேஜர், சங்கரப்பிள்ளை கட்டிடம், 95/3, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 2704

குமாஸ்தாக்களும் ஆங்கிலத் தட்டெழுத்தாளர்களும் யாழ்ப்பாணத்திலுள்ள கந்தோருக்கு வேண்டும். முழு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 2708 C/o பா, ஈழநாடு. 2708

## கல்வி

ஜீ. சீ. ஈ. சாதாரணம் கலை, சுருக்கெழுத்து, தட்டெழுத்து. வகுப்புக்களுக்கான பிரவேசங்கள் இப்பொழுது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. யூனைட்டெட் மகளிர் கல்லூரி, நெல்லியடி, கரவெட்டி. 2576

## யாழ்ப்பாணம் மாநகரசபை பாதுகாவலர்பதவி

மேற்குறிப்பிட்ட பதவிக்கான விண்ணப்பங்கள் யாழ். மாநகரசபை சேவைக்கு ஆணையாளரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

தேவையான தராதரம்
விண்ணப்பஞ்செய்பவர் 1-2-71-ல் 45 வயதுக்கு உட்பட்டவராயும், குறைந்தது ஆங்கிலத்தில் அல்லது தமிழில் ஜே. எஸ். சி. சித்தியடைந்தவராயும், இருக்க வேண்டும். சிறந்த உடல் வன்மையும் கவர்ச்சியுமுடையவர்க்கு முதலிடம் அளிக்கப்படும் விளையாட்டுத் துறை அனுபவம் மேலதிக தகுதியாகக் கணிக்கப்படும்.

விண்ணப்பங்கள் யாழ். மாநகரசபை ஆணையாளருக்கு முகவரியிடப்பட்டு 18-2-71 அன்றோ அல்லது அதற்கு முன்போ கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும். முடிவு திகதிக்குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

முன்பு கோரப்பட்டு விண்ணப்பித்தவர்கள் புதிதாக விண்ணப்பிக்க வேண்டியதில்லை.

விண்ணப்பங்கள் கிடைத்ததற்கான பதில் அனுப்பப்படமாட்டாது.

ஏ. ரி. சுந்தரம்.
யாழ். மாநகரசபை
ஆணையாளர்,

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
31-1-71.

2759





# "ஸ்ரீமா முதல் ஜனாதிபதியாக வேண்டும்"



கோட்டை, ங்கள்

ஸ்ரீலங்கா குடியரசின் முதல் ஜனாதிபதியாக திருமதி ஸ்ரீமா பண்டாரநாயக்கா தெரிவு செய்யப்பட வேண்டுமென்று ஐக்கியதேசியக்கட்சி விரும்புகிறது.

ஸ்ரீலங்கா குடியரசின் அதிபர் மக்களால் தெரிவு செய்யப்படவேண்டும் அல்லது தொகுதிக் கல்லூரிகள் மூலம் தெரிவுசெய்யப்படவேண்டும் என்று ஐக்கியதேசியக்கட்சியின் ஆட்சிமன்றக்குழு தீர்மானித்திருப்பதால் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட திருமதி சிறிமா பண்டாரநாயகாவே அடுத்த தேர்தல் வரைக்கும் முதலாவது ஜனாதிபதியாக இருக்கவேண்டுமென்று முடிவு செய்தது. அரசியல் அமைப்பு அடிப்படைத் தீர்மானங்களுக்கு யு. என். பி. கொண்டுவரவிருக்கும் தீர்மானத்தில் இதுவும் ஒன்றாக இருக்கும். திருமதி சிறிமா உலகின் முதல் பெண்பிரதமர் என்ற பெருமையையும் உலகின் முதல் பெண் எதிர்க்கட்சித் தலைவர் என்ற பெருமையையும் பெற்றிருக்கிறார் ஜனாதிபதியானல் உலகின் முதல் பெண் ஜனாதிபதி என்ற பெருமையையும் இவரே பெ வார்

## பரிசு பெற்ற கவிஞர்



தமிழ்த்தாய் மன்றம்-குன்றநாடு மன்றம் அகில இலங்கை ரீதியில் நடாத்திய கவிதைப் போட்டியில் கவிஞர் பொவிகை திருப்பதி பரிசும்பாராட்டும் பெற்றுள்ளார்.

இதற்குரிய பரிசில் அண்மையில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற தமிழ்விழாவின்போது வழங்கப்பட்டது.

திரு. திருப்பதி 'ஈழநாடு' உட்பட இலங்கையிலுள்ள பல பத்திரிகைகளிலும் அவ்வப்போது கவிதை எழுதி வருபவர். பயிற்றப்பட்ட தமிழாசிரியரான இவர் தொண்டமானுறு மகாவித்தியாலயத்தில் பணிபுரிந்து வருகிறார்.

## கியூ ஒழியுமாம்

கோட்டை, திங்கள்

"இன்னும் கொஞ்சக் காலம் எனக்கு அவகாசம் கொடுங்கள். நகரிலும் மற்றும் வெளியூர்களிலும் பஸ்களுக்காக பஸ் நிலையங்களிலும் பஸ்தரிப்புகளிலும் நிற்கும் 'கியூ'வை ஒழித்துக் கட்டிவிடுவேன்" என்று இ. போ சபைத் தலைவர் திரு. அனில்முனசிங்கா ஓர் ஆங்கிலத்தினசரிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

மேலும் 1.100 பஸ்கள் சேவைக்கு விடப்படுமென்றும் 560 பஸ்கள் இறக்குமதி செய்யப்படுமென்றும் மிகுதி இப்போதும் பாவிக்கப்படாமலிருக்கு பஸ்களிலிருந்து உபயோகத்துக்குத் திருத்தி எடுக்கப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கையின் மலையகப் பகுதிகளான அட்டன் ஹைலன்ட்ஸ்கல்லூரியிலும், அங்ககல வித்தியாலயத்திலும் ஆசிரியசேவை புரிந்தவர்.

வல்வெட்டித்துறைபொலிகண்டியைச் சேர்ந்த இவர் இளம் வயது முதலாக கவிதை யாத்துவருபவர். காலத்துக்கேற்ற பொருளில் கவிபுனையும் இவர் இசைஞானம் காரணமாக கவிதைகளை இனிமையோடு பாடிக்காட்டும் வன்மையுடையவர்.

## அறிவித்தல்

சுதந்திரதினத்தை முன்னிட்டு 4—2—71 வியாழக்கிழமை 'ஈழநாடு' காரியாலயத்துக்கு விடுமுறையாதலால் 5-2-71 வெள்ளிக்கிழமை மட்டும் 'ஈழநாடு' வெளிவரமாட்டாது.


ஈழநாடு

சாதாரண வருடம் தை மாதம்
20-ந் திகதி [2-2-71]


## உண்மையான விடுதலை

நாளை புதன்கிழமை அறிஞர் அண்ணாவின் நினைவு நாள். அவர் மறைந்து இரண்டு வருடங்கள் ஆகின்றன.

மறுநாள் வியாழக்கிழமை நம்நாடு அந்நியரின் அடிமைத் தளையிலிருந்து விடுதலைபெற்ற திருநாளாகும்.

பாரதநாட்டின் சுதந்திரதினத்தை துக்கதினமாகக் கொண்டாடவேண்டுமென்று தமதுகுருவான ஈ. வெ. ரா. பெரியார் கூறியதை அறிஞர் ஒப்பவில்லை. அந்நியரின் அரசியல் ஆதிக்கத்திலிருந்து நாடு விடுதலை பெற்றதை தேசாபிமானத்துடன் கொண்டாடவேண்டுமென்றார் அவர்.

இலங்கைக்கு சுதந்தரம் கிடைத்தாலும் பல சங்கடங்கள் நீங்கவில்லை. இங்கு தமிழர் இரண்டாம் பட்ச பிரஜைகளாகவே வாழவேண்டியுள்ளது. இந்நிலையில் தமிழர் இவ்விழாவினை பகிஷ்கரிப்பதா இல்லையா? என்பதுபற்றி திகைக்கின்றனர். அவர்களுக்கு அறிஞர் அண்ணாவின் தேசாபிமான யோசனை வழிகாட்டுவதாகும்.

"ஒரு தாயின் வயிற்றில் பிறந்தோர் தம்முள் சண்டை செய்தாலும் சகோதரர் அன்றோ?" என்றார் அமரகவி பாரதியார்.

நாட்டுக்கு அரசியல் விடுதலை கிடைத்தாலும், மதுபானம், சுயநல ஆசாபாசங்கள், சாதிச்செருக்கு முதலிய அரக்கர்களுக்கு நம்மில் பலரும் அடிமைப்பட்டுள்ளோம். அவற்றிலிருந்து மீண்டால்தான் நமக்கு உண்மையான விடுதலையுண்டு. அந்த விடுதலைபெற்று நாம் பூரண சுதந்தர மக்களாக இன்பமாக வாழ இறைவன் திருவருளே நமக்குத் துணைசெய்யவேண்டும்.

## தந்தையைக் கொன்றதாக பிள்ளைகள் மீது வழக்கு

ஊரதீவு, திங்கள்

"சம்பவதினம் நான் எனது வீட்டிலே இருந்த போது முதலாம் எதிரியும் இறந்தவரும் தெருவோரமாக நடந்துவந்து எனது படலைக்கு முன் நின்று கதைத்தார்கள். இறந்தவர் கையிலே 'சூட்கேஸ்' ஒன்று வைத்திருந்தார். தன்னுடன் வருமாறு முதலாம் எதிரி இறந்தவரை இழுத்தார் இறந்தவர் சூட்கேசை வைத்துவிட்டு 'நான் வரவில்லை' என்றார். உடனே முதலாம் எதிரி இறந்தவரின் கையைப் பிடித்தார். இறந்தவர் போக மறுத்து விட்டு சூட்கேசை எடுத்துக் கொண்டு எனது முற்றத்திற்குள் வந்தார். எனது வீட்டில் சூட்கேசை வைத்த இறந்தவர் 'இது இங்கே இருக்கட்டும்' என்றார். அப்போது அவரது முகம் நன்றாகச் சிவந்திருந்தது."

ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் சாட்சியமளித்த சரவணையைச் சேர்ந்த தெட்சணாமூர்த்தி என்பவர் மேற்கண்டவாறு சொன்னார்.

இவ்வழக்கில் சரவணையைச் சேர்ந்த நகுலேசபிள்ளை என்பவரைக் கொலை செய்ததாக அவரது மூத்த மகன் உமாபதிசிவத்தின் மீதும், அதை அரசினருக்குத் தெரியாமல் மறைக்க முயன்றதாக அவரது ஏனைய மக்களான துஷ்யந்தன், சிறீதேவி, நற்றமிழ்மாது ஆகியோர்மீதும் ஊர்காவற்றுறைப் பொலிசார் குற்றம் சாட்டியிருந்தனர். எதிரிகள் சார்பில் அட்வகேட் கே. வி. எஸ். சண்முகநாதன், புறக்டர் திரு. ஜிம்மி இராஜரத்தினம் ஆகியோர் ஆஜராகினர். நீதிபதி மேல்விசாரணையை ஒத்திவைத்துள்ளார்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### செவ்வாய்

344 மீ அன் 51மீ
காலை

6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-35 பௌத்தநற்சிந்தனை, 6-40 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 இசைவேளை. 8-00 பௌத்த நிகழ்ச்சி, 8-15 பேச்சு, 8-30 சைவ நீதி.

344மீ அன் 49 மீ
காலை

9-30 முஸ்லிம் நிகழ்ச்சி, 10-00 தொழிலாளருடன், 10-30படத்திலிருந்து 11-15 சிறுவர்மலர், 12-00 எமது திதி, 1-05 பெண்ணுலகம்,

344 மீ அன் 61 மீ

4-30 சங்கமம், 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-30 பாட்டு, 6-15 மெல்லிசை, 6-30 கிராமியபாடல்கள், 6-45கண்ணகிகாவியம், 7-00 கிறிஸ்தவ நிகழ்ச்சி, 7-30 விவேக சக்கரம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நிகழ்ச்சித் தொகுப்பு, 9-45 பாட்டு. 10-30 செய்தித் தொகுப்பு.


## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள EY சொமசெற் (கொழும்புக் கார்) விற்பனைக்கு அல்லது வேறுகார்களுடன் மாற்றுவதற்கு உண்டு. சிவானந்தன், பன்னாலை, தெல்லிப்பழை. 2710



இப் பத்திரிகை 'ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கோவில் வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2-ந்உ அச்சிட்டு வெளியிடப் பட்டது.


## வாந்தியுடன் 3 அங்குல மீன்?

பூநகரி, திங்

நெஞ்சுவலியுடன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட ஒருவாலிபர். மூன்று தினங்களின் 3 அங்குல நீளமுள்ள முழுமையான மீன் ஒன்றை வாந்தி எடுத்த பின்னர் மரணமானார்.

பூநகரியில்வசிக்கும் அலைதீவைச்சேர்ந்த மகாலிங்கம் (வயது 26) என்பவரது மரணவிசாரணையின் போது இத்தகவல் தெரியவந்தது.

இதுபற்றிக் கூறப்படுவதாவது:

மேற்படி பரிதாபமரணத்துக்குள்ளானவர் கடலில் சுழியோடிக்குளித்ததாகவும் வீடுவந்து சாப்பிடும்போது நெஞ்சில் ஏதோ பொறுப்பதாகவும் கூறினாராம். இரண்டு, மூன்று தினங்களின் பின்னர் நெஞ்சில் வலி ஏற்படவே ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டு, வாந்தி எடுத்ததன் பின் மரணமானார்.

குளிக்கும்போது மீன்தண்ணீருடன் வயிற்றினுள் உயிருடன் போயிருக்கலாம் என மரணவிசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இன்று

யாழ்ப்பாணம், செவ்

யாழ் நூல் நிலையத்தில் இன்று மாலை 6 30 மணிக்கு "ஆசியா எழுக" என்னும் பொருள்பற்றி தேவர்சூரியா உரை நிகழ்த்துவார் இதன் பின்னர் 'ஆசியப் பரிசோதனை'. தேசம் முன்னேறிச்செல்கிறது' ஆகிய இரு படங்கள் காண்பிக்கப்படு

## மூலிகைகள் சேகரிக்க நடவடிக்கை

கோட்டை, செவ்வாய்

நாட்டின் பலபாகத்திலும் உள்ள காட்டுப் பகுதியில் மூலிகை சேகரிக்கும் நடவடிக்கை எடுத்துள்ளதாக ஆயுள்வேதக் கமிஷன் தெரிவித்துள்ளார்.

மூலிகளைச் சேகரித்துவைக்கப் பலஇடங்களிலும் களஞ்சியசாலைகள் நிறுவப்படும் எனவும் நாவின்னவிலுள்ள ஆயுள்வேத ஆராய்ச்சிநிலையத்தின் அருகே உடனடியாக களஞ்சிய நிலையம் ஒன்று நிறுவப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## கருத்தரங்கு

(நமது நிருபர்)

யாழ். அரசியல் வட்டத்தின் கருத்தரங்கில் "அரசியல் அமைப்பில் தமிழரின் இன்றைய நிலை" என்னும் பொருள் பற்றி திரு அ அமிர்தலிங்கம் இம்மாதம் 4-ம் திகதி மாலை நாவலர் வீதியிலுள்ள 241-ம் இலக்க இடத்தில் உரையாற்றுவார்.

## மக்களை மந்திரி சந்திப்பார்

கோட்டை, திங்கள்

பொது நிர்வாக உள்நாட்டு. உள்ளூராட்சி அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா நாட்டிலுள்ள கச்சேரிகள் ஒவ்வொன்றுக்கும் சென்று அரசாங்க அதிகாரிகளையும் மக்களையும் சந்தித்து அவர்களின் பிரச்னைகளை ஆராயத் தீர்மானித்துள்ளார்.

## இடமாற்றம்

மாவிட்டபுரம், ஞாயிறு

கொழும்பு வனத்த முல்லை ரோமன் கத்தோலிக்க பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றிய திரு எஸ். பூலோகராசா சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்கு இம்மாதம் முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்


## "ஈழநாடு" விற்பனையாளர் தேவை

முல்லைத்தீவில் "ஈழநாடு" பத்திரிகை விற்பனை செய்யவும், வீட்டுக்கு வீடு டெலிவரி செய்யவும் ஒருவர் உடனடியாக தேவை. முற்பணம் கட்டக் கூடியவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

நிர்வாகி,
"ஈழநாடு" லிமிட்டெட்,
யாழ்ப்பாணம்.